
# கல்கி

KALKI 23-9-79

75 காசு





# Kalki Shopping Page
















# Kalki Shopping Page

# Kalki Shopping Page

# Kalki Shopping Page










## AUTHORISED DEALERS :

**VIVEK & CO.,**
133, Royapettah High Road,
Madras - 600004 Ph : 76923

**VIVEK & CO.,**
205, Purasawalkam High Road,
Madras - 600007 Ph : 663545

**SHANTHI ELECTRONICS,**
821, Mount Road,
Madras - 600002 Ph : 81594

**EASWARAN & CO.,**
120, Govindappa Naicken Street,
Madras - 600001 Ph : 36442

**RATNA FAN HOUSE,**
1, Rajabadar Street,
Madras - 600017 Ph : 445068

**OM MURUGA CYCLE MART**
410, T. H. Road,
Madras - 600021 Ph : 552980

ஆணழகன் சிதம்பரம் மிஸ்டர் தென்னிந்தியா பட்டத்தைச் சூடியவர்; இவருக்கு வயது 26. சென்னை போர்ட் டிரஸ்டில் வேலை பார்க்கிறார். மிகவும் ஒல்லியாக இருந்த சிதம்பரம் தீவிர உடற் பயிற்சியினால் ஆணழகனாக மாறினார்.

''உடல் திடகாத்திரமாக இருக்க ஒழுக்கக் கட்டுப்பாடு தேவை. புரதச் சத்து நிறைந்த பால், முட்டை, கடலை, தயிர், உளுந்து ஆகிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். இத்துடன் உடலின் பாகங்களை மேல்புறம், கீழ்புறம் பின்புறம் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, வாரத்துக்கு மூன்று முறை உடற் பயிற்சிகளைச் செய்து வந்தால் யாருமே ஆணழகனாக உருவாக முடியும்'' என்கிறார் சிதம்பரம். இதுவரை இவர் டாக்டரைச் சந்தித்ததே இல்லையாம். புகைப்பட நிபுணர் உத்ரா தரும் சுவையான விளக்கம்:

ஆணழகன் சிதம்பரம் படத்தை எடுத்தபோது ஒரு யுக்தியைக் கையாண்டேன். முதலில் அவரது உடலில் சிறிதளவு ஆலிவ் எண்ணெய் தடவச் செய்து, நீர் முத்துக்களை அவர் மீது தெளித்தேன். Flash Roflector உதவி கொண்டு எண்ணெய் தடவிய உடலின் பளபளப்பை மிளிரச் செய்தேன். நெருங்கிக் குளோஸ் அப்பில் பிலிம் 125 ஏ எஸ் ஏ. கொண்டு எடுத்தபடம்.

படம்: உத்ரா விளக்கம்: குண்டுமணி



# விசுவரூப கணபதி

கல்கி பத்திரிகையின் காவல் தெய்வமான கணபதிக்கு பம்பாயில் நடக்கின்ற சிறப்பான வழிபாட்டுக்கு ஆதிகாரணம் திலகர்.

பலமாடி கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் வசிக்கும் பல்வேறு குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து பணம் போட்டு கணபதி சிலையை உருவாக்கி பூஜை நடத்துகிறார்கள். பத்து நாள் பூஜைக்குப் பிறகு ஆடிப்பாடிக் கொண்டும் பஜனை, பொய்க்கால் குதிரை முதலியன நடத்தியும் கோஷம் எழுப்பிக் கொண்டும் ஊர்வலமாக விநாயகர் சிலையை எடுத்துச் சென்று சௌபாத்தி கடற்கரையில் கடலில் சேர்ப்பிக்கிறார்கள். அச்சமயம் பிரிவாற்றாமையால் வருந்திக் கண்ணீர் விடுவோர் ஏராளம்.

போட்டி போட்டுக் கொண்டு மிகப் பெரிய தும்பிக்கையான் சிலையை மட்டுமல்ல மிகச் சிறிய உருவத்தையும் படைக்கிறார்கள்; மாபெரும் லாரியில் ஊர்வலம் செல்லும் மிகச் சிறிய விநாயகர் இருக்குமிடத்தை ஒருவர் சுட்டிக் காட்டிக் கொண்டே செல்கிறார்!

பத்து நாளும் விடிய விடிய பூஜை மட்டுமல்ல, பல்வகை நடன நாடகங்கள், சினிமா காட்சிகளை மக்கள் இலவசமாகக் கண்டு களிக்க ஏற்பாடுகள் உண்டு.

பத்து நாட்கள் சென்றதும் ஆயிரக்கணக்கான விநாயகர் சிலைகள் ஊர்வலமாக கடல் நோக்கிச் செல்லும் போது போக்குவரத்து ஸ்தம்பித்துப் போவதில் வியப்பென்ன? இதற்காகவே பல காரியாலயங்களில் பாதி நாள் விடுமுறை விட்டு விடுகிறார்கள்!

இந்த ஆண்டின் மிகப் பெரிய கணபதி வடிவங்களுள் ஒன்று ஊர்வலமாக வீதியில் வருவதையும் வேறொன்று கடலில் கரைக்கப் படவிருப்பதையும் படங்களில் காணலாம்.

கிரிக்கெட் குழு ஒன்றை நடத்திவந்தார் ஆப்ரி ஸ்மித் என்ற ஹாலிவுட் ஹீரோ. அடிக்கடி 'கேட்ச்'களை நழுவ விடுவது என்பது குறிப்பிட்ட ஒரு நாள் மேட்சின்போது அவருக்கு ஏற்பட்டது. உடனே தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு, வீட்டிலிருந்து தம் மூக்குக் கண்ணாடியை எடுத்து வரச் சொன்னார். வந்த பிறகு அதை அணிந்து விளையாடிய அவர், அதே போல மறுபடி 'காட்ச்'களைத் தவற விட்டார். உடனே, ''மடையா, நான் புத்தகம் படிக்கும் கண்ணாடியைக் கொண்டு வந்து விட்டாயே'' என்று வேலைக்காரனைப் பார்த்துக் கத்தினாரே பார்க்கலாம்!

நடிகர் இல்லையா, சமாளிப்பது சுலபம்!

-'கிரிக்கெட் விரும்பிகளின் புதையல்' என்ற புத்தகத்திலிருந்து

—எம். என்.







# கனவு பலித்தது!

**கனவு பலித்தது!**

ஓவல் இறுதி டெஸ்ட், இரண்டாம் இன்னிங்ஸ் ஆரம்பிப்பதற்கு முன் காவஸ்கர் வெங்கட்டிடம் வந்து சொன்னார்: ''இன்று போதம் நாலாவது விக்கட் எடுக்கப் போகிறார் பலியாகப் போகிறவன் நான்தான்!''

அந்தச் சமயத்தில் ஆங்கில விரைவுப் பந்து வீச்சாளர் போதம் காப்டன் வெங்கட்டிடம் வந்து கூறினார்: ''வெங்கட், நேற்றிரவு எனக்கு ஓர் இனிய கனவு! காவஸ்கர் டபுள் செஞ்சுரி எடுத்துவிடுவதாக!''

போதம் கண்ட கனவு நனவாயிற்று. காவஸ்கரின் உன்னத ஸ்கோர் 221, ஓவல் டெஸ்ட்டை 'டிரா'வில் முடித்து இந்திய டெஸ்ட் காப்டனுக்குக் காவஸ்கரை உயர்த்தியும் விட்டது. ''உலகின் தலைசிறந்த ஆரம்ப பாட்ஸ்மன்'' என்று காவஸ்கருக்கு பிரர்லி புகழ் மாலை சூட்டினார்.

**லாலா வந்தார்!**

ஓவலிருந்து சென்னைக்குத்தாவல்.

''லாலா வந்துவிட்டார்!''

''அப்படின்னு அல்வாவும் ஸ்வீட்டும் ரொம்பக் கிடைக்கும்னு சொல்லுங்கோ!''

லாலா அமர்நாத் தாம் தயாரித்து வந்துள்ள ஆஸ்திரேலிய — இந்திய டெஸ்ட் ஸூவனீரைப் பிரஸ் பாக்ஸில் பத்திரிகை நண்பர்களுக்குப் பகிர்ந்தளித்தார். ஸ்வீட்டாகவே இருந்தது.

**நாகேஷும் பைனாகுலரும்!**

''நாகேஷ்! பைனாகுலரில் ரொம்ப நேரமா என்ன பார்த்துண்டிருக்கேள்?''

''பார்டர் அடிச்ச பந்தை யஜுர்வேந்தர் சிங் நழுவ விட்டுட்டாரே, அதை பைனாகுலர்லே நான் பிடிச்சுட்டேன்!''

**சர்ச்சைக்குரிய காட்ச்!**

''பார்டருக்கு 'Life' கொடுத்தவர் யஜுர் வேந்தர் சிங்! பெங்களூரில் பல காட்சுகளைப் பிடித்துப் புகழ் பெற்றவர் சேப்பாக்கத்தில் நழுவவிட்டு 'வசவு'க்கு ஆளாயிட்டாரே!''

''அது காஸ்ட்லி காட்ச்! பார்டர் அப்புறம் 162வது ரன்னிலே போய்த்தான் ரன் அவுட் ஆனார்!''

''பார்டர் 'ரன் அவுட்' ஒரு டர்னிங் பாயிண்ட்! அப்புறம் சடசடவென்று ஆஸ்திரேலியக் கோஷ்டியின் விக்கெட்டுகள் 390 ரன்களுக்குள் சரிந்து விட்டன.''

''Life is like that'' என்று முதியவர் ஒருவர் முத்தாய்ப்பு வைத்தார். ''பார்டருக்கு லைஃப் கொடுத்ததும் மிஸ் ஃபீல்டிங்; பார்டர் ரன் அவுட் ஆனதும் தோஷியின் 'மிஸ் ஃபீல்டிங்கில்' கிடைத்த திரில்!''

**ஸ்பெஷல் விருந்தாளி!**

''விக்கெட் கீப்பர் கிர்மானி விழுந்து புரண்டு ரொம்ப ஜோரா பந்தைத் தடுக்கிறாரு!''

''உமக்குத் தெரியாதா? அவர் மனைவி அபிபேயை ஸ்பெஷலா இந்த டெஸ்ட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்திருக்காராம்! இங்கிலாந்து டெஸ்ட்டில் அவர் dropout ஆச்சே!''

**வெங்கட்டின் மூன்று காட்ச்கள்**

வெங்கட் தமது வலது கையில் பிளாஸ்திரி போட்டுக் கொண்டிருந்தார். அவரது செல்ல மகன் விக்ரம் அதைத் தடவி, 'அப்பா! ரொம்பப் பலமா பந்து அடிச்சுட்டதா?' என்று கேட்டான்.


''வெங்கட்! இன்று உங்கள் மூன்று காட்ச்களும் ஏ-ஒன்!'' என்று நெருங்கிக் கையைக் குலுக்கினேன். ''ஹில்டிச், காப்டன் ஹூஸ், வாட்மோர், 'அவுட்'டாக்கிய மூன்று காட்ச்களில் எதை ரொம்பக் கஷ்டமானது என்று கருதுகிறீர்கள்?''

''வாட்மோரை 'அவுட்'டாக்கிய மூன்றாவது காட்ச்தான் ரொம்பக் கஷ்டமான காட்ச். இடது கையினாலேயே தாவிப் பிடித்த காட்ச் அது!'' என்று விளக்கினார் வெங்கட்.

**காப்டன் காவஸ்கர்**

காப்டன் காவஸ்கருக்கு ரிகார்டு தண்ணீர் பட்ட பாடு. இன்னும் 9 ரன்கள் எடுத்தால் 5000 ரன்கள் பூர்த்தியாகிறது. இன்னும் 101 ரன்கள் எடுத்தால் மூன்றாவது முறையாக 1000 ரன்களை ஒரு காலண்டர் வருஷத்தில் பூர்த்தி செய்த ரிக்கார்டு!

இந்த இதழ் அச்சுக்குப் போகும்போது முதல் டெஸ்ட் இன்னும் மூன்று நாட்களில் ஏற்படப் போகும் 'திரில்'களை ஸஸ்பென்ஸாகவே வைத்திருக்கிறது. **-குண்டுமணி.**




※ சதம் கண்ட காப்டன் ஹூக்ஸ்

புகைப்படங்கள்: பாலாஜி



※ வெங்கட் பிடித்த அற்புத மான 'காட்ச்' - வாட்மோர் அவுட்!

※ 162 ரன் அடித்த பார்டர்



※ முதல் டெஸ்ட் பிரவேசத்திலேயே ஆறு விக்கெட் கண்ட திலீப்தோஷி




அலாவுதீனின் விளக்கு மந்திரவாதியிடம்
பாவிப்பய! விளக்கை வெச்சுகிட்டு இன்னும் என்ன பாடெல்லாம் படுத்தப் போறானோ!
அதிகாரம்
சஞ்சய்
பொதுஜனம்
முதல் மந்திரி பதவி
காங்கிரஸ் தலைமைப் பதவி
இந்த ரெண்டும் போதாதுன்னு மூணாவதும் சமாளிச்சு ஆகணும் போலிருக்கே!
ஜனதா (எஸ்)



கல்கி
1979 செப்டம்பர் 23
சித்தார்த்தி புரட்டாசி 7
மலர்: 38 இதழ்: 8

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

# மீண்டும் இந்திரா?

தேசத்தில் இந்திரா அலை வீசுகிறதாம், சொல்கிறார்கள்! ஏன் வீசாது? இந்திரா அலையும் வீசும், இந்திரா பிரளயமே கூட ஏற்படும்!

சர்வாதிகாரத்தை எதிர்த்த மக்கள் இந்திராவை முறியடித்து ஆட்சிப் பொறுப்பை ஜனதாவிடம் தந்து சரித்திரப் புகழ் பெற்றார்கள். ஆனால் புதிதாகக் கிடைத்த பெரும் பொறுப்பை நிர்வகிக்கத் தெரியாமல் ஜனதா தலைவர்கள் திண்டாடித் திணறினார்கள். இது இந்திராவை மறுபடி பதவிக்கு வருமாறு வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பதில் முடிந்திருக்கிறது.

சரண் சிங் 'இந்திராவைக் கைது செய்கிறேன்' என்று போதிய ஆதாரமின்றி அதை நிறைவேற்றி, சில மணி நேரங்களுக்குள் இந்திரா விடுதலை பெற வழி வகுத்து, அவர் புகழை உயர்த்தும் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார்.

நெருக்கடி காலக் கொடுமைகள் குறித்து மள மளவென்று நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி, இந்திரா மறுபடி நன்கு காலூன்றிக்கொள்ள ஜனதா தலைவர்கள் அனுமதித்தார்கள்.

இதனால் சிக்மகளூரில் இந்திரா போட்டியிட வாய்ப்பளித்ததுடன் அங்கு தேர்தலின்போது சாணக்கியமற்ற முறையில் நடந்துகொண்டார்கள். இந்திரா வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்ததும் அவரை — மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை — மன்றத்திலிருந்து பிரஷ்டம் செய்து அவரிடம் மக்களுக்கு மேலும் அனுதாபம் பெருகச் செய்தார்கள்.

மத்திய அமைச்சரவையில் ஒவ்வொருவரும் மற்றவருடன் முரண்பட்டுப் பேசி, ஒருவரையொருவர் குறைகூறி, தங்கள் ஒற்றுமையின்மையையும் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்களில் ஒருமித்த நோக்கு ஏதுமில்லாததையும் நிரூபித்தார்கள்.

சரண்சிங் ஓர் அபத்தமான பட்ஜெட்டை அளித்து விஷம்போல் உயர்ந்த வரிகளாலும் விலைவாசிகளாலும் மக்களை வதைத்து இந்த வேதனையை விட நெருக்கடி காலக் கொடுமையே மேல் என்ற நிலையை உருவாக்கினார்.

தங்களுக்குள்ளேயே பதவிப் போராட்டம் நடத்தி கட்சியைப் பிளந்து நாசமாக்கியதன் மூலம் பிரதமர் பதவியை வெள்ளித் தட்டில் வைத்து இந்திராவிடம் தரத் தயாரானார்கள் ஜனதா தலைவர்கள்.

இவ்வளவுக்கும் இடையில் சுய கட்டுப்பாட்டுடனும் பெருமளவு புத்திசாலித்தனத்துடனும் நடந்துகொண்ட ஜனசங்கத் தலைவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்கள் செல்வாக்கையும் குறைக்கும் விதமாக 'ஆர். எஸ். எஸ். தொடர்பு' என்ற பூச்சாண்டியைக் கிளப்பினார்கள்.

சிக்மகளூரில் இந்திரா காந்தியை எதிர்த்து நின்ற வீரேந்திர பாட்டீல் இப்போது இந்திரா காங்கிரஸில் சேர்ந்து தம்மைத் தாழ்த்திக்கொண்டு இந்திராவை பார்த்தியுள்ளார். வேறு பல பச்சோந்திகளும் நிறம் மாறி வருகின்றன.

மும்முனைப் போராட்டத்துக்கு மறுபடி வழிவகுத்ததன் மூலம் இந்திராவின் கரம் மீண்டும் ஓங்கிப் பலப்பட வகை செய்தாகிவிட்டது.

அ.தி.மு.க. மட்டுமின்றி தி.மு.க.வும் 'உங்களை விட்டால் வேறு கதியில்லை, என்பது போல் இந்திராவுடன் தேர்தல் உடன்பாட்டுக்கு ஒருவரையொருவர் முந்திக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

என்றைக்கோ வெளியிட்டு நடவடிக்கையும் எடுத்திருக்க வேண்டிய மாருதி கமிஷன் அறிக்கையைத் தங்களிடையே உள்ள கோஷ்டி பூசல் காரணமாக அமுக்கி வைத்து நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்கள். எப்போது இந்திராவின் ஆதரவு எந்தக் கோஷ்டிக்குத் தேவைப்படுமோ என்பதால் மூன்று மாதங்களுக்கு மேல்

ஆறப்போட்டுவிட்டு இப்போது தேர்தலுக்கு சற்று முன்பாக வெளியிட்டு இந்திரா முகத்தில் கரி பூசும் முயற்சியில் படுதோல்வி அடைந்திருக்கிறார்கள். பேனாவால் ஒரு புள்ளி வைத்து அல்லது ஒரு கீறல் செய்து கோடி கோடியாகப் பணம் குவித்த சஞ்சய், தேசப் பாதுகாப்பை விடத் தன் மகனின் பணம் பண்ணும் முயற்சிக்கே அதிக முக்கியத்துவம் தந்த தாய் ஆகியோர் மீது தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டு இப்போது கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள். 'விசாரணைக் கமிஷனால் குற்றவாளி என்று கருதப் பட்டால் தேர்தலுக்கு நிற்க முடியாது' என அவசரச் சட்டம் கொண்டுவரப் போவதாகக் கூறி இந்திராவிடம் மேலும் அனுதாபம் பெருகச் செய்துள்ளார்கள்.

போதாக் குறைக்குப் பெட்ரோல், டீசல் கெரசின் வரி ஏற்றம் காரணமாய் மேலும் விலை வாசிகள் உயர, அதுவும் போதாதென்று பாங்கு கடன் வசதிகளை வற்றச் செய்து, இன்னும் விலை வாசிகள் உச்சாணிக்கு ஏற வழி வகுத்துள்ளார் சரண் சிங். இந்திராவைக் கையைப் பிடித்து அழைத்து வந்து பிரதமர் பதவியில் அமர்த்தும் காரியத்துக்கு ஒப்பானது இந்த நடவடிக்கை.

இவ்வளவு மட்டுமின்றி இவற்றுக்கு அதிகமாகவும் இந்திராவுக்குச் சாதகமான காரியங்களைச் செய்துவிட்டு மறுபடி இந்திரா அலை வீசுகிறதே என்று வருந்திப் பயன் என்ன? மக்கள் மீது பழி சுமத்தப் பார்க்கிறீர்கள். சர்வாதிகாரி இந்திரா மறுபடி பதவிக்கு வந்தால் அதற்குக் காரணம் மக்கள் அல்ல; ஏனைய தலைவர்களின் மூடத்தனமான செயல்கள்தாம்.

---

## யாகசாலைக்குப் பத்தாயிரம்!







திரு கோ. வி. மணிசேகரன் எழுதிய யாகசாலை நாவல், 1978–79ல் வெளிவந்த நூல்களில் மிகச் சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பெற்று, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அறக் கட்டளைப் பரிசைப் பெற்றிருக்கிறது.

இந்த நாவல்தான் தீபாவளியன்று வெளி வரவிருக்கும் 'ஒரு ரோஜாப்பூ சிரிக்கிறது' என்கிற திரைப் படம். மணிசேகரனே டைரக்ட் செய்திருப்பது.

உலக சமாதானத்தை நினைவில் கொண்டு உலகப் பிரஜைகளாய் வாழ வேண்டும் என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்ட நாவல் இது. பகவத் கீதையை மையமாகக் கொண்டது. ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட நூலின் விலை ரூ. 35.

பிரசுரம்: நல்வாழ்வுப் பதிப்பகம், 2 ஏர்ரபாலு செட்டி தெரு, சென்னை 600 001

---



# இறைவன் அளிப்பான்

கவி கா.மு.ஷெரீப்

அந்த அம்மையார் ஒரு மிகப் பெரிய ஞானி. அவர்களுடைய திருநாமம் ரபியாத்துல் டஸிரியா என்பது. ஒருமுறை அந்த அம்மையார் தம் ஒன்பது சீடர்களுடன் 'ரமலான்' நோன்பு வைத்திருந்தார்கள்.

நோன்பு முறைகளின்படி ஆறரைமணிக்கு நோன்பு திறக்க வேண்டும். அதற்குச் சிறிது நேரம் முன்னதாகவே ஒருவர் ஒற்றை ரொட்டியைக் கொண்டு' வந்து அம்மையார் முன் வைத்தார். அந்த நேரத்தில் அங்கே எதிர்ப்பட்ட பிச்சைக்காரன் ஒருவனுக்கு ரொட்டியைத் தந்து விடும்படி கட்டளையிட்டார்.

''இதைக் கொடுத்து விட்டால் நோன்பு திறக்க என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று சீடர்கள் கேட்டனர். ''கடவுள் தருவார். இதை இப்போது கொடுத்து விடலாம்'' என்றார் ஞானி.

சற்றைக்கெல்லாம் இன்னும் ஒருவர் ஒன்பது ரொட்டிகளை எடுத்து வந்து ஞானியார் திருமுன் வைத்தார். ''இது எனக்காக வந்ததல்ல. எடுத்துப் போய்விடு'' என்றார் அவர்.

சீடர்கள் மீண்டும் கேட்டார்கள். ''இதையும் திருப்பி விட்டீர்களே. நாம் நோன்பு திறக்க என்ன செய்வது?''

அப்போதும் அம்மையார் சொன்னார்கள்— ''கடவுள் தருவார். பேசாமலிருங்கள்.''

நோன்பு திறக்கும் தருவாயில் ஒருவர் பத்து ரொட்டிகளைக் கொண்டு வந்தார். அவை ஏற்கப்பட்டு நோன்பு திறக்கப்பட்டது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பொதுவான ஒருவர் கேட்டார். ''உங்களுக்கு ஏதுமில்லாத நேரத்தில் ஒன்பது ரொட்டிகளையும் திருப்பி அனுப்பும் துணிவு எதனால் ஏற்பட்டது?''

அந்த ஞானி அம்மையார் சொன்னார்கள்: ''ஒன்பது கொடுத்தால் பத்துத் தருவேன் என்று இறைவன் திருமறையில் கூறியிருக்கிறான். அப்படியிருக்க எனக்காக அனுப்பப்படாத அந்த ஒன்பது ரொட்டிகளையும் நான் ஏன் ஏற்க வேண்டும்?''

விசாரித்தபோது உண்மை மேலும் தெளிவாயிற்று. வேறு யாருக்கோ அனுப்பப்பட்ட ரொட்டியை முன்னால் அவன் தவறுதலாய்க் கொண்டு வந்திருக்கிறான். பிறகு நினைவு வரவே அவற்றை உரியவர்களிடம் சேர்த்துவிட்டு அம்மையாருக்குப் பத்து ரொட்டிகளை அவன் எடுத்து வந்தான்.

உள்ளத்தில் ஆட்டம் அசைவு ஏதுமில்லாமல், முழுவதுமாய்க் கடவுளை நம்புகிறவர்களுக்கு அவர்கள் கோருவதை இறைவன் அளிப்பான் என்பதை விளக்குவது நிகழ்ச்சி. இறைவன் மீது வைக்கப்படும் முழு நம்பிக்கை வீண் போவதே யில்லை.

★ ★ ★

''இஸ்லாமானவன், தன் கைவிரலை நீட்டி, மதுபானக் கடை இங்கே இருக்கிறது என்று காட்டுவானானால் அவனது கைவிரல் துண்டிக்கப்பட வேண்டும்'' — என்றவர் ஹனஃபி இமாம்.

ஒரு சின்னக் கதை. ஒரு செல்வந்தர் தம்முடைய வேலையாளை அழைத்துக் கொஞ்சம் மது வாங்கி வரப் பணித்தார்.

சற்றைக்கெல்லாம் மதுப் புட்டியுடனும் இன்னும் சிலவற்றுடனும் அவன் உள்ளே வந்தான். அவை சவப்பெட்டி, இறுதிச் சடங்குக்கான துணி, ஒரு மருத்துவர், ஒரு பெண். செல்வந்தருக்குப் புரியவில்லை. ''எதற்கு இவர்களை அழைத்து வந்தாய்?'' என்றார்.


அந்த விசுவாசம் மிக்க பணியாள் சொன்னான்: ''ஆமாம் ஐயா! மதுவைப் பருகியவுடன் பெண் இருந்தால் நல்லது அழைத்து வா என்பீர்கள். அப்புறம் அவள் தொடர்பில் உங்களுக்கு நோய் வரும். மருத்துவரைத் தேடுவீர்கள். அடுத்து மரணம் வரும். சடங்குகளும் சவப் பெட்டியும் வேண்டும். எல்லாவற்றையும் ஒன்றாய்க் கொண்டு வந்துவிட்டால் எளிதில்லையா?''

செல்வந்தர் விழித்துக் கொண்டார். ''இவ்வளவு தீமை உண்டா மதுவால்?'' என்று அவர் கேட்டுவிட்டு'' எல்லாவற்றையும் வெளியிலே வீசு. இவர்களையும் வெளியே அனுப்பு'' என்று தீர்மானமாய் ஆணையிட்டார்.

—கவி கா. மு. ஷெரீப் அவர்கள் கூறியவற்றிலிருந்து எழுதி அனுப்பியவர்: கப்ரபாலன்.

## 91–101

**மச்சானைப் பார்த்தீங்களா:** படத்தின் ஆணி வேர் எது என்று கேட்டால் திரைக் கதைதான் என்று விஷயம் தெரிந்த பலரும் கூறுவார்கள். இப்படத்தின் கதையை முதலில் என்னிடம் சொல்லிய போது சுவையாக இருந்தது. மற்றவர்களிடம் அதைக் கூறும்போது அந்தச் சுவை மங்கவில்லை. ஆனால் படத்தில்தான் அந்தச் சுவை ஏனோ வரவில்லை. திரைக்கதையின் முக்கியத்துவத்தை இப்படம் எனக்கு உணர்த்தியது.



'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' படத்தில்

**கைபிடித்தவள்:** இந்தப் படப்பிடிப்பின் போது நடந்த ஒரு சோகச் சம்பவத்தை உயிருள்ளவும் என்னால் மறக்க முடியாது. அமைதியான மருத்துவமனை. வெண்மையான படுக்கையில் இளைத்து சுக்காகிப்போன உடல். ஆக்ஸிஜன் அளிக்கப்பட்டு வந்தது. என் அடிவயிறு அவ்வப்போது குலுங்க கண்களில் நீர் மல்க நின்றேன். அந்தத் திரை மேதையின் முடிவு காலம் நெருங்குவதை உணர்ந்தேன்.

அந்த நிலையிலும் என்னைப் பார்த்தவுடன் முகத்திலிருந்து ஆக்ஸிஜன் 'மாஸ்க்'கை விலக்கி அடுத்து தாம் உயர்ந்த கலைப்படைப்பாக உருவாக்க எண்ணியிருந்த ஒரு படத்தின் கதையைத்துடிப்புடன் விளக்க ஆரம்பித்தார். அவரது ஆர்வத்தைத் தடைசெய்யமுடியாமல் நான் தவித்தவண்ணமிருந்தேன். வெள்ளி விழாப்படங்கள் பலவற்றை உருவாக்கிய அவர் இனிமேல்தான் தமது லட்சிய படைப்பே உருவாகப் போகிறது என்று என்னிடம் கூறினார். அவர் உள்ளத்துக்கு வயதாகவில்லை. ஆனால் உடலுக்கு வாழ்வு முடிந்து விட்டது. அவர்தான் பீம்சிங்.

**சிட்டுக்குருவி:** செழுமை, பசுமை, இனிமை, இப்படிப் பல வார்த்தைகளின் மொத்த அழகையும், மைசூரிலுள்ள ''தலைக்காடு'' என்ற ஊரில் கண்டேன். ஊரின் ஒரு பக்கத்தில் வயல் வெளி. மறுபக்கம் காவிரி. இங்குதான் படப்பிடிப்பு இருபது நாட்களும் நடந்தது. குளிப்பதிலிருந்து எல்லாமே வெளியில்தான். ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த நடிகன் ஆசிரம வாழ்க்கை வாழ முடியுமா? பரீட்சித்துப் பார்க்க இம்மாதிரிச் சந்தர்ப்பங்கள் உதவும்.

**ராதைக்கேற்ற கண்ணன்:** முப்பத்தெட்டே நாட்களில் எடுத்து முடித்த படம். பல லட்சங்களை இதில் முதலீடு செய்தார்பாலாஜி. முதல் இரண்டு வாரங்கள் நன்றாக ஓடினாலும் மூன்றாவது வாரம் படுத்து விட்டது, இதைக் குறிப்பிட்டு பணம் போனதைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், ''இராப்பகலாக உயிரை விட்டு நடிச்சானேஅப்பா சிவகுமார், அவன் மனசு என்ன பாடுபடும்?'' என்று கூறினாராம். தமிழ்த்திரை உலகம் அழிந்து விடாமலிருக்க இதுமாதிரி நல்லவர்களின் மனம்தான் காரணம்.

**அதைவிட ரகசியம்:** இன்று இந்த நிலையில் நான் வாழ்வதற்குக் காரணம் எனது மாமா ஆறுமுகக் கவுண்டர்தான். இன்னும் திரைக்கு வராத எனது முதல் படத்தில் எனக்கு நடிக்க வாய்ப்பு அளித்தவர் இவர். படம் திரைக்கு வராது போனாலும் இத்துறையில் என்னைப் புகுத்தியது அவர்தானே! அப்படிப்பட்டவரது மகன் மன நிறைவோடு வாழ வழி செய்து தர வேண்டியது எனது கடமையல்லவா? என் மாமா பிள்ளையின் தயாரிப்புத்தான் இப்படம்.

**கண்ணன் ஒரு கைக்குழந்தை:** ஒரு படம் முழுக்க முழுக்க சண்டைக் காட்சிகளையோ, சோகச் சம்பவங்களையோ பெற்றிருந்தால் அனைவரையும் திருப்திப் படுத்துவதில்லை. அவ்வாறிருக்க நகைச் சுவையை மட்டுமே நம்பி வலுவற்ற ஒரு கதையை படமாக்கியதில் நகைப்புக்கிடமாகப் போய் விட்டது.

**கண்ணாமூச்சி:** பணக்கார தயாரிப்பாளர், கால்ஷீட் பிரச்னை என்று வராமல் ஒத்துழைக்கும் நடிக நடிகையர், எந்தவித வற்புறுத்தல்களோ, கட்டுப்பாடோ சொல்லாமல் இருக்



'கண்ணன் ஒரு கைக் குழந்தை' படத் தில் சிவகுமார், சுமித்ரா

கும் விநியோகஸ்தர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே ஒரு நல்ல சிறப்பான படம் எடுக்க முடியும் என்பதற்கு இந்தப் படமே சாட்சி.

**முதலிரவு:** மாவட்ட அரசியலில் கதா நாயகனுகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்தவர் இப்படத்தின் தயாரிப்பாளர். எங்கள் இரு வருக்குமே திரைப்பட அனுபவம் உண்டு; ஆனால் இணைந்தல்ல. இணைய வைத்தது இப் படம். இணைந்தவர் நண்பர் கோவைச் செழியன்.


**ஏணிப்படிகள்:** டைட்டில் மிகவும் பிடித் தது. நான் புகழேணியில் ஒரு படி ஏற உதவியது. இரண்டு டைரக்டர்கள் இணைந்தது இப்படத்தில் தான். ''முள்ளும் மலரும்'' மகேந்திரன் வசனம் எழுத, மாதவன் இயக்கினர்.

**ரோசாப்பூ ரவிக்கைக்காரி:** எனது 99 படங்களின் சாயலே இல்லாமல் நான் நடித்த படம். குரல், தோற்றம் எல்லாவற்றையுமே இந்தப் பாத்திரத்தில் நான் மாற்றிக் கொண் டேன். எனக்குத் திருப்தி. ரசிகர்களுக்கும் தான். இதுபோன்ற மாறுபட்ட வேடங்கள் அடிக்கடி கிடைக்காதோ!

**பூந்தளிர்:** எனது 101-வது படம் என்று வெளி வந்தது. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் வெளிவந்த படம் என்ற முறையில் மன நிறைவைத் தருகிறது. இக்கட்டுரைத் தொடரின் நிறைவுக்கும் வழி வகுக்கிறது.


பேட்டி : **சலன்**

'கை பிடித்தவள்' படத்தில் ஸ்ரீபிரியாவுடன்



# சிவகுமார் 101

## வட்டமேஜை



மென்மையான ராகம் மனதை நெகிழ வைத்து விட்டது.
மதுரை-2 சோ. அங்குநம்பி.

● மவுண்ட்பாட்டன் அவர்களுக்குத் தாங்கள் செலுத்திய அஞ்சலி தனிச் சிறப்பானது. ஏனைய பத்திரிகைகள் வெளியிடாத கருத்தைக் கூறியுள்ளீர்கள். ஐரிஷ் மக்களின் குறையைச் சுட்டிக் கடமையையும் நாருக்காக வெளியிட்டிருக்கிறீர்கள். நல்லறிவு பெருகட்டும். உலக அமைதி நிலவட்டும். பிரார்த்திப்போம்.
சென்னை எம். கி. பி. சம்பத்

● ''கும்பிடறேனுங்க'', ''விழுந்து கும்பிடறேனுங்க!'' ஓர் அருமையான கார்ட்டூன்: கல்கி வாசகர்கள் சார்பில் கும்பிடறேனுங்க! — உமாபதியை.
சென்னை-34 எஸ். நாகேஸ்வரன்

# எப்படி மனம் வந்ததோ?

● பெரு மதிப்புக்குரிய பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களின் ''கவிதையால் வீடு பெற்றவர்'' கட்டுரை மிக்க மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் அளித்தது.

சொற்கள் உணர்ச்சியை வெளிக் காட்டும் சிறந்த கருவிகள் என்பதை அவர் எழுத்து நிரூபித்து விட்டது. பலவித சிறப்புக்களை உடைய அக்கட்டுரையின் இடையில் குற்றாலம் அருவி படத்தைப் பிரசுரித்திருந்தாலும் அர்த்தமுண்டு. கவிதை — கண்கள் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளும் கூப்பனை அமைக்க தங்களுக்கு எப்படி மனம் வந்தது?
குற்றாலம் எம். வி. எம். வெற்றிவேலன்

● 'கவிதையால் வீடு பெற்றவர்' என்ற கட்டுரையில் எடுத்துக் கொண்ட பொருளை அ. ச. ஞானசம்பந்தன் சொல்லியிருக்கும் பாங்கு ஈடிணை இல்லாச் சிறப்புடையதாகும். 'ஓ ராமா, உன் நாமம் எத்தனை ருசி' எனப் பொருள்படும் தெலுங்குக் கீர்த்தனத்தை ஸ்ரீ தியாகப்பிரும்மம் பாடியிருப்பதாக எழுதியுள்ளது கவனக் குறைவால் நேர்ந்த பிழை

மேற்படி கீர்த்தனத்தை இயற்றியவர் பத்ராசலம் ஸ்ரீ ராமதாஸர்.
ஈரோடு கி. இராமமூர்த்தி

● திரு பால்கிவாலா தமது கட்டுரையில் அமெரிக்காவில் மிக உயர்ந்த நிலையில் உள்ள இந்திய விஞ்ஞானிகளின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். நம் நாட்டு அரசியல் தலையீட்டை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் நம் அரசியல்வாதிகள் அறிஞர்களை அதட்டுவதில்தானே பெருமை காண்கிறார்கள். நம் நாடு இந்த அரசியல் உடும்புகளிடமிருந்து விடுதலை பெறும் நாள் எந்நாளோ?
பாதூர் ர. இந்திரா

● பார்வை விரிந்திருந்த எத்திராஜுலுவின் பெருந்தன்மையால் கண்களைக் குளமாக்கி விட்டார் பிரதிபா இராஜகோபாலன்.

● ''ப்ரீதா'' தன் பாய் பிரண்டை மாலையில் சந்திக்காமல் அவருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் பற்றி ஒரு பக்கத்தில் எழுதியிருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. இது போன்ற நாட்டுக்குத் தேவையான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தால் என் போன்ற வாசகர்களுக்கு மிக உதவியாக இருக்கும்.

ஏனய்யா வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்!
ராஜபாளையம் முத்துவீரு

● வானதி திருநாவுக்கரசு அவர்கள் ஆயிரம் ரூபாய் பரிசுடன் ஆரம்பித்திருக்கும் 'அலை ஓசை' கருத்தரங்கு கல்கியின் மீதுள்ள அவரது ஆழ்ந்த அன்பைப் பிரதிபலிக்கிறது. படிக்கப் படிக்கச் சலிக்காத அலை ஓசையை மீண்டும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படிக்கத் தொடங்கி விட்டேன்.
வடுவிருட்சியூர் ஆர். அமுதா

● 'பன்னிரண்டு பெண்களும் ஓர் ஆணும்' ஹேமா ஆனந்ததீர்த்தனின் சிறுகதை மிகவும் பிரமாதம். ஓர் எழுத்தாளனுக்கு நேரிடக் கூடிய விபரீத அனுபவத்தை வெகு சுவைபட விளக்கியிருக்கிறார். ஆமாம் அது கற்பனையா அல்லது அவரின் சொந்த அனுபவமா?
அரகண்டநல்லூர் கே. பிரதாப்சிங்

● வரவிருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் டெஸ்ட்டைப் பற்றி நாங்கள் எதிர்பார்த்ததை விடச் சிறப்பாகக் கிரிக்கெட் வீரர்களின் புகைப்படங்களையும் அதற்குத் தகுந்தாற்போல் விளக்கங்களையும் நல்ல முறையில் முன்னோடியாகக் கொடுத்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய கல்கிக்கு மனமார்ந்த நன்றி.
கொனக்குடி எஸ். சஞ்சீவி ராவ்

# வைரங்கள்

## சுஜாதா



### அத்தியாயம் 8

### "அரெஸ்ட் ஹிம்!"

மூன்று தினங்களுக்குப் பின் ப்ரேம் டெலிபோன் செய்தான்.

''எஸ். பி. ஸாரா? நமஸ்காரம். நான் ப்ரேம் பேசுகிறேன். அகர்சந்த் ஜெயினின் மகன். எப்படி இருக்கிறீர்கள்?''

''......''

பெரிதாகச் சிரித்தான். ''நீங்கதான் பெரிய ஆசாமி! நான் ஒரு சின்னப் பச்சா. ஒன்றுமில்லை. ஒரு சின்னக் கேஸ். பிரொஹிபிஷன்!''

''.......''

''ஒரு ஆளு. அவன் பேர் பெரிசாமி. நெடுப்பாக்கம் பஞ்சாயத்துல'' ''—'' அது என்ன இடம் தாஸ்?'' ''ராவிமுக்கு'' ''ராவிமுக்கு சொல்லிட்டு ஒரு இடத்தில, தினம் குடிக்கிறான். நம்ம டிரைவர்களுக்கு ரொம்பத் தொந்தரவு தரான்.''

''....''

''ரொம்பத் தாங்க்ஸ், ஷுக்ரியா! ஒளர்!''

பெரியசாமி மூத்தமழையைப் பொங்க விட்டுக் கொண்டிருக்கையில் ஒரு லாரி நிறைய வேலிக் கம்பங்கள் வந்து இறங்கின. உடன் முள் கம்பிப் பந்து ஒன்றுடன் ஏழெட்டுப் பேர் இறங்கினார்கள்.

''பெரியசாமி, ஒரு டீ கொடு'' என்றான் லாரிக்காரன்.

''என்னங்க இது? வேலி எங்கே போடறாப்ல?''

''இங்கேதானும்ல.''

''எதுக்காம்?''

''தெரியலியே?''

முண்டாக கட்டிக் கொண்டு அவர்கள் கடப்பாறை போட்டுக் குழி போடத் துவங்க....

பெரியசாமி, ''அண்ணே....ய் ஆல மரத்துக்கு அப்பால தோண்டுங்கய்யா. அது வரைக்கும் என் நிலம்'' என்றான்.

''காணி நிகர்னு என்னடா இந்த இடத்துக்கு வந்துடுச்சு!''

''எனக்குத் தெரியாது. காண்டராய்ட் இது. நாநூறு அடிக்குக் கம்பம் வெச்சு கம்பி கட்டச் சொன்னாங்க.''

அறிவிப்புப் பலகையைக் காட்ட அதில்,

SITE FOR
PREM QUARRIES

என்று எழுதியிருந்ததைப் பெரியசாமியால் படிக்க முடியவில்லை. ''என்ன எழுதியிருக்கு?''


மேஸ்திரி அதை ஒரு தடவை படித்துப் பார்த்துவிட்டு கூறினான்:

''இங்க யாரும் கால் வைக்கக் கூடாதுன்னுட்டு.''

''நமக்கு ஒண்ணு இந்த மாதிரி? எம் புட்டுத் துட்டு ஆகும்?''

''அது ஆவும்! பத்து. இருநூறு — இல்லியில்லை?'' மனோகரிக்கு ரொம்பச் சந்தோஷமாக இருந்தது. தோண்டுபவர்களையும் முள்ளுக் கம்பி கட்டுபவர்களையும் அவள் இதுவரை பார்த்ததே யில்லை. மொத்தச் செயலும் அவளுக்கு வசீகரமான விஷயமாக இருந்தது. பெரிய கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கவர்மெண்ட் நிலத்திலே எப்படிக் கல்லு நடப்போவும்?'' என்றான் பெரியசாமி.



திலகம் ''கவர்மெண்ட் நிலமோ வேற யாருதோ? சேட்டு நம்ம கிட்டக் கேட்டுப் பார்த்துட்டு வேற ஆளுங்க கிட்ட வாங் கிட்டாப்பலே''. என்றாள்.

''அதெப்படி? பஞ்சாயத்துலே சொன் னுங்க! அப்புறம் மணியக்காரர் சொன் னாரு.... ரீஸ்தரெல்லாம் பார்த்து?''

பெரியசாமிக்குத் தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்கள் பல புரியவில்லை.

''நீங்கதான் மாட்டேனிட்டீங்க!''

''என்னைச் சுத்தித் தண்டவாளமே போட் டாக் கூட நான் விக்கமாட்டேன்''

''என்னமோ பிடிவாதம்.''

அவர்கள் நாள் பூரா வியர்வை வழியத் தோண்டிவிட்டுச் சாயங்காலம் கிளம்பிவிட் டார்கள். பெரியசாமிக்கு வேட்கை புறப் பட்டு விட்டது. துண்டை உதறினான். பனியன் எடுத்துப் போட்டுக் கொண்டு அதன் மேல் நீலச் சட்டை அணிந்து கொண்டான். ஓவல்டின் டப்பாவில் சேர்ந்திருந்த துட்டை பையில் கொட்டிக் கொண்டான்.

''கொஞ்சம் கடை வரைக்கும் போய் வரேன்.''

''தினம் குடிக்கிறீங்க இப்பல்லாம்.''

''நான் குடிக்கப் போவல. வேற சோலி.''

''வேற என்ன சோலி?''

''எவ்வளவோ இருக்குது. எல்லாத் தியும் சொல்லியாவ ணுமா? பருப்பு, மிளகா, எல்லாம் வாங்கிட்டு வர வேணுமா?''

''நேத்தே வாங்கிட்டனே!''

''சும்மா இடு! நான் சம்பாதிக்கி றேன். நான் , குடிப்பேன். பொளு தன்னிக்கும் அலமோதிக்கிட்டுக் கிடக் காதே!''

திலகம் அவனை மௌனமாகப் பார்த் திருக்க ''பெரிய்ய் புள்ள பாரு! பெத் துருக்க பாரு! செவிட்டு ஊமை!'' என் றான். மனோகரி அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டிருப்பதை மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தாள். சண்டையா சமாதானமா என்று புரியா மல் கொஞ்சம் சிரித்து வைத்தாள்.

''சிரிக்குது பாரு! கொரங்கும்!'' மனோகரி அவன் அருகில் செல்லச் சற் றும் எதிர்பாராமல் சுள் என்று புறங் கையால் அடித்தான். 'சுருண்டு உட் கார்ந்து விட்டாள். யார் மேலே தனக்குக் கோபம் என்பது சரி யாகத் தெரியவில்லை பெரிய சாமிக்கு. தன் நிலத்தைச் சுற்றி வேலி போடும் கோயமுத்தூர் சனங்கள் மீதா, உண்மையைக் குத்திக் குத்திக் காட் டும் மனைவி மீதா.



மற்ற பேர் அவனைப் பார்க்கும் பார்வை மீதா இன்றோடு கடைசி என்று நீண்டு கொண்டே போகும் தன் குடிப் பழக்கத்தின் மீதா?

அதற்கு மனைவி அடி வாங்கினாள். அழுவதற்குச் சத்தம் செய்யத் தெரியாமல் முகத்தை விகாரப்படுத்திக் கொண்டு மாலை மாலையாகக் கண்ணீர் வடித்து அழுதது குழந்தை.

பெரியசாமி விருட்டென்று கிளம்பிச் சென்றான்.

பெரியசாமி நெடுப்பாக்கம் வந்தபோது நன்றாக இருட்டி விட்டது. இருட்டினப்புறம்தான் அவன் போகிற இடத்துக்குச் களத்துப் பிறக்கும். தினங்களில் அந்த இடம் ஒரு பலசரக்குக் கடை. ரொம்பவும் மரியாதைப்பட்ட இடம் போலத்தான் இருக்கும். சொந்தக்காரர் ஊருக்குப் பிரசித்தமான கௌண்டர். தெற்குத் தெருவில் சிமெண்ட் தாழ்வாரம் போட்டு ஓடு கட்டி லாத்தி சிமெண்ட் பூ வைத்து 'வி.ஆர்.எம். 1977' என்று வீடு கட்டிக் கொண்டு செயலாக இருக்கிறார். சம்பாத்தியம் முச்சூடும் சைக்கிள் டயர்களிலும் வெவ்வேறு திருட்டு முறைகளிலும் தினம் தினம் கேரளத்திலிருந்து வரும் சாராயத்தினால். போலீஸ் பிடிக்காது என்றில்லை. அவ்வப்போது பிடிப்பார்கள். பிடிக்கு முன்சொல்லிவிட்டு, மாசத்துக்கு இத்தனை கேஸ் என்று கணக்கு. பிடித்துவிட்ட பிற்பாடு மறுபடி வியாபாரம் ஒரு வாரம் தயங்கித் தொடரும்.



சம்பந்தப்பட்ட எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழ மதுவிலக்குக்கு ஜே!

பெரியசாமி வந்து திண்ணையில் உட்கார்ந்தான். இந்தப்பக்கம் அந்தப் பக்கம் பார்த்தான். யாருமில்லை என்று உள்ளே நுழைந்தான். உடனே கதவு சாத்தப்பட்டது. சாக்குத் திரைக்குப் பின்னால் காசு கொடுத்தான். மசால் வடையும் கெரஸின் எரியும் வாடையும் கலந்து வந்தன. பானையின் வாயில் துணி போட்டு மூடி ஒரு வெற்றிலை பாக்குப் பெண்மணி உட்கார்ந்திருந்தாள். ஒரு கிளாஸ் முக்கால் ரூபாய். அந்தப் பெண் அருகில் குந்தி உட்கார்ந்திருந்தவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''மனார்னு வரவேண்டியதுதானே! இல்ல! அவங் கிட்ட மெப்பிச்சுப் பணத்தை வாங்கறதுக்குள்ளே பொராணனுக்கு ஆய்ப் போச்சு. என்னய்யா பொளுதன்னிக்கும் தொளாவிட்டுக் கிடக்கிறே? காசு உண்டா இல்லையான்னேன். ஊங்கறான். எது கேட்டாலும் ரெண்டர்த்தமாச் சொல்றான். வா பெரியசாமி. எப்பவும் போலத்தானே?''

''ம்!'' என்றான் பெரியசாமி. ''வட'' என்றான்.

''மறுக்க?''

''ரெண்டு கிளாசு!''

உட்கார்ந்திருந்த ஆசாமி, ''வரேஞ் ராமாத்தா!'' என்றான்.

''செத்த நேரம் குந்திட்டுப் போயேஞ்'' என்றாள்.

பெரியசாமி முதல் கிளாஸைக் குடித்துவிட்டான்.

''ராமத்தா இன்னும்!'' என்றான்.

மூன்று போட்டதும்தான் பெரியசாமிக்கு சுருதி ஏறியது.

''பவுனுத்தா?'' என்றான்.

''எம் பேரு ராமாத்தா!'' என்றாள். ராமாத்தா அழகாகச் சிரித்தாள்.

''அம்பது பவுனுக்கு நகை போடறனுங்க! பொறந்தவ புள்ளையக் கட்டறன்னுதான் சொன்னனேன்! சிங்காநல்லூர்ல போய் பொண்ணெடுத்தோம். புள்ள பிறவி ஊமை'' என்று அழுதான்.

''வெசனக் கிளைமை சாமி காட்டிக் கெடா வெட்டிடு பெரியசாமி. சரியாப் போயிரும். மறுக்க?''

''இன்னொண்ணு போடு ராமாத்தா!''

பெரியசாமி ஆடி ஆடிக் கொண்டு கிளம்பினான்.

''பொடக்காலப் பக்கமாப் போயிரு! இந்தா தொறப்புக் குச்சி!'' என்றாள்.

பழக்க ஞாபகத்தில் பின்புறக் கதவின் பூட்டைத் திறந்து சாவியை உள்ளே எறிந்துவிட்டு இருளில் இறங்கினான். அங்கிருந்து குறுக்கே பாய்ந்து மெயின் ரோட்டை ஒரே ஒரு இடத்தில் கடந்து மறுபடி ஒற்றையடிப் பாதையில் (சென்று நடந்து ராவி முக்குப் போக வேண்டும் என்கிற கிஃப்




ளெக்ஸ் உணர்வில்தான் நடந்தான். உலகமே சரிந்து சரிந்து சரிந்து கொண்டிருந்தது. ஏப்பத்தில் கெரஸின், வாழைப் பழம், மசால் வடை என்று ஏதேதோ வாசனை அடித்தது. 'திலகம், மனோகரி! திலகம் மனோகரி' என்று புலம்பிக் கொண்டே நடந்தான்.

மெயின் ரோட்டைக் கடக்கும்போது ஜீப்பு நின்று கொண்டிருந்தது.

''பெரியசாமி!''

''யாரது?''

''இங்க வாய்யா!''

''நான் வீட்டுக்குப் போவணும். ஒத்துங்க!''

''வாய்யான்னா?''

''யாரு சொன்னாங்க சார்? கொக்குக்கு வெச்ச கண்ணியில கோழுந்தியா உளுந்துட்டா ... அடிடா... மத்தளத்த''

''கான்ஸ்டபிள் அரெஸ்ட் ஹிம்!''

இரவு பதினொன்றாயிற்று. இன்னும் வரவில்லை. திலகம் சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தாள். அரிக்கேன் விளக்கு எண்ணெய் தீர்வதற்கு படக் படக் என்றது. மனோகரி அருகில் படுத்துத் தூங்கியிருந்தாள். அவ்வப்போது ஒரு தடவை உடம்பைத் தூக்கிப் போட்டுக் கொண்டே இருந்தது குழந்தைக்கு. அவ்வப்போது ஒரு மௌனமான விசும்பல்!

'எங்க போயிருப்பாரு? கோவிச்சுக்கிட்டு அப்பத்தா வீட்டுக்குப் போயிருப்பாரோ? ராவைக்கு எப்படிப் போயிற முடியும்? ஒரு வேளை ரோட்டிலயாவது! அம்மங் கோயிலுப் பூதமாட்டம் அடிச்சிக்கிட்டு வர்றாங்களே டைவருங்க! சே! அதெல்லாம் இல்லே.''

திலகம் பலவித சமாதானங்கள் சொல்லிக்கொண்டாள் — வந்துவிடுவான் வந்துவிடுவான் என்று.

கடைசி பஸ் வந்து போய் விட்டது. இருட்டில் அவள் கண்கள் விரிந்து துளாவின. நடந்து வராருக்கும். அதோ தெரியுதே யாரோ வராப்பல! ம்ஹூம்! ஏதாவது லாரியில வருவாரோ நடந்து வருவாரோ என்று காத்திருந்து காத்திருந்து கிழக்கு வெளுத்து விட்டது. அழுகை வந்தது. ஏதோ ஒண்ணு கிடக்க ஒண்ணுதான் ஆகி விட்டது.

மனோகரியை எழுப்பினாள். பிரமித்து எழுந்தது பெண். நெடுப்பாக்கத்துக்கு முதலில் போய் விசாரிக்கலாம். அங்கே ஒரு கடை இருக்கிறதாம். அங்கேதான் போவார். டீ கடை திறந்திருந்ததைப் பற்றிக் கவலைப் படாமல் தன்னை மறந்து டிரங்க் ரோடில் குழந்தையைச் சுமந்து கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

''அண்ணே அதெப் பாருங்க!'' என்றான் காதர். தாஸ் பிரேக் போட்டு நிறுத்தினான். திலகம் தயங்கி நிற்க,

''எங்கே போறாப்பல?'' என்றான்.

''ராவிக்குப் போனவரு இன்னும் வல்லிங்க!'' என்று உடனே அழுதாள். மனோகரியும் அழுதாள்.

''எங்க போனான்?''

''நெடுப்பாக்கத்துக்குத்தான். தண்ணிக்குப் போனவரு!''

''இன்னும் வல்லியா?''

''இல்லிங்க!''

''அழுவாதிங்கம்மா. அழுவாதே பாப்பா! நான் கூட்டியாரேன்'' என்றான் காதர்.

தாஸ் யோசித்தான். ''காதர்! நீ இரு இவுகளோட! நான் லாரி எடுத்துக்கிட்டு நெடுப்பாக்கம் போயி விசாரிச்சுட்டு வரேன்! கவலைப்படாதிங்க. உங்க புருசனைக் கூட்டி வந்துர்றேன். காதர் இரு!''

லாரியை ரிவர்ஸ் எடுத்துத் திருப்பி அவன் செல்லத் திலகத்துக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது.

''சாப்டிங்களாம்மா?'' என்றான் காதர்

''கவலப்படாதீங்க.'' தன் மார்பைத் தட்டிக்கொண்டு ''நான் இருக்கேன் காதர்! நான் கூட்டியாரேன்! சில சமயம் அங்கயே படுத்துக்குவாங்க. தாஸ் அண்ணன் பெரிய ஆளு. எங்கிருந்தாலும் தொளாவிக்கிட்டு வந்துடுவாரு! வாங்க! அழுவாதீங்கம்மா. பாப்பா பாவம் அழுவுதுங்க! ஏய் இதோ பாரு உர்ர்ர்ர்ர் உர்ர்ர்ர்ர்'' என்று குரங்கு போல் செய்தான்.

அழுகைக்கு இடையில் மனோகரி சிரித்தாள்.

ஒரு மணி நேரத்தில் தாஸ் திரும்பி வந்தான்.

''போலீஸ் கேஸ் புடிச்சிட்டாங்களாம். பெரியசாமியைக் கைது பண்ணிட்டாங்களாம். ராத்திரியே! நெடுப்பாக்கத்தில இருந்து கோயமுத்தூருக்குக் கோர்ட்டுக்கு அழைச்சுட்டுப் போயிட்டாங்களாம்.''

திலகம் பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள்.

''என் கூடக் கோயமுத்தூர் வாங்க!'' என்றான் தாஸ். (தொடரும்)

# கொஞ்சிடும் கிளிமொழி, அஞ்சன மைவிழி
# குமரனின் கைவண்ணத்தால் எழில் மயமாகுதே

அமோகமான அழகு. ஆசையைக
கிளறும் டிசைன்கள், வண்ணங்கள்
ஜரிகை வேலைப்பாடுகள்!
''குமரனை'' நினைத்தோர் வேறு
சில்க் வகைகளை நினையார்
எனும் உண்மையை நிரூபிக்க
மற்றும் ஒரு தருணம் இந்தப்
பண்டிகை சீசன்.



**குமரன் சில்க்ஸ்**

2, நாகேஸ்வர ராவ் ரோடு,
(பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை 600 017    டெலிபோன்: 443544

UIPC : KS : 103



## ம. பொ. சி.யின் நூல்

## மொழி பெயர்ப்புக்கு

## லாயக்கில்லையாமே!




மகா கவி பாரதியார் விழா, பாரதியார் சங்கத்தின் ஆதரவில் செப்டம்பர் 11, 12 தேதிகளில் மிகச் சிறப்பாகச் சென்னையில் நடந்தேறியது. மேதகு ஆளுநர் பட்வாரி அமைச்சர்கள் மாண்புமிகு வீரப்பன், சுப்பு லட்சுமி ஜெகதீசன், உயர்நீதி மன்ற நீதிபதி மாண்பமை செங்கோட்டுவேலன், ம.பொ.சி சுந்தரவடிவேலு, தூரன், அகிலன், அவ்வை நடராஜன் முதலியவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த விழாவை சங்கக் காரியதரிசி பகீரதன் செவ்வனே நிர்வகித்து நடத்தினார். கவியரசர் பாரதியின் கவிதை இன்பத்தில் அவையோர் திளைத்தனர். ம. பொ. சி. தூரன், ஆகியோர் எழுதிய பாரதி இலக்கியம் பற்றிய நூல்கள் வெளியிடப்பட்டன. பாரதி நூற்றாண்டு விழா குறித்துப் பல யோசனைகள் கூறப்பட்டன. தவிர, விழாவில் முதல் நாள் அன்றும், மறுநாள் அன்றும் அதிர்ச்சி அளிக்கும் இரு விஷயங்கள் வெளிப்பட்டன. முதல் நாள் நன்றியுரையின்போது முதல் அதிர்ச்சியை திரு பகீரதன் அளித்தார்! சாகித்திய அகாதமி பரிசு பெற்ற ம. பொ. சி.யின் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டுச் சொன்னார்: ''அகாதமி பரிசு பெறும் நூல்களைப் பாரதத்தின் பல்வேறு மொழிகளிலும் சாகித்ய அகாதமி மொழிபெயர்க்க வேண்டும். அவ்விதம் மொழிபெயர்த்தும் பதிப்பித்தும் வருகிறது. ஆனால் ம.பொ.சி. அவர்களின் இந்த நூலைப் பரிசீலித்த குழு, இது பல்வேறு இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட லாயக்கற்றது என்று அறிவித்து விட்டது!'' இச்செய்தியைப் பகீரதன் வெளியிட்டபோது அவையில் கோபக் குறிப்பொலிகள் எழுந்தன. மறு நாள் ம. பொ. சி. அவர்களையே நேரில் சந்தித்து விவரம் கேட்டபோது அவர் கொடுத்த தகவல்கள்:

''சாகித்திய அகாதமி ஒரு புத்தகத்துக்குப் பரிசு கொடுத்தால் அதைப் பதினொரு இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும். அப்படி அதை மொழி பெயர்க்க முடியாது என்று தெரிந்தால் அப்புத்தகத்துக்குப் பரிசு கொடுக்கக் கூடாது. காரணம் சாகித்திய அகாதமி மத்திய அரசைச் சார்ந்தது. ( Central body ) ஆனால் பரிசையும் கொடுத்து விட்டு மொழிபெயர்க்க முடியவில்லை என்றால் அது அவர்களின் விருப்பு வெறுப்பைத்தான் காட்டுகிறதே ஒழிய, நடுநிலைமையை அல்ல.

''எனது நூல் தேர்ந்தெடுக்கப்பட்ட விதமே அலாதிதான். நான் நூல் வெளியானவுடன் அதைக் குறிப்பாக டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கும் ராஜாஜி அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். அந்த வருடம் சாகித்திய அகாதமி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் அனுப்பியிருந்தார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த உறுப்பினர் க. நா. சுப்பிரமணியம் எப்பொழுதுமே விறுவிறுப்பு உடையவர். தாயுமானவருக்கு முன்பு தமிழே இல்லை என்று பகிரங்கமாகக் கூறியவர். இப்படிப்பட்டவர்கள் எல்லோரும் சேர்ந்து எந்தப் புத்தகமுமே தமிழில் பரிசு கொடுப்பதற்கு தகுதி வாய்ந்ததல்ல என்று முடிவு செய்தார்கள்! அது பத்திரிகையிலும் வந்தது. மத்திய குழு கூடி முடிவெடுக்கும்பொழுது டாக்டர் ராஜேந்திர பிரசாத் 'கிராமணியார் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அது நன்றாக இருக்கிறது' என்று கூற, 'மாநிலக் குழு தேர்ந்தெடுக்கவில்லையே' என்று மற்றவர்கள் கூறினார்களாம். 'தேர்ந்தெடுக்காவிட்டால் என்ன? நாம் தேர்ந்தெடுப்போம்' என்று அவர் கூற அப்படித்தான் என் புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்டது!

''பிறகு மூன்று நான்கு மொழிகளில் மட்டுமே அதை மொழி பெயர்க்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த மொழி பெயர்ப்



''சார்! நீங்க எந்தக் கட்சி?''

''தேர்தலில் நான் நின்றபோது இருந்த கட்சியா? ஜெயித்த பிறகு நான் இருந்த கட்சியா? அமைச்சரவையில் சேர்ந்த பின் மாறிய கட்சியா? அரசு கவிழ்ந்த பிறகு நான் இருந்த கட்சியா? பார்லிமெண்ட் கலைவதற்கு முதல் நாள் நான் இருந்த கட்சியா? எந்தக் கட்சி என்று நான் எப்படிச் சொல்வேன் அய்யா?''

புக்களும் வெளிவரவில்லை. ஏனென்று இது வரை எனக்குத் தெரியவில்லை.


''சாகித்திய அகாதமியின் தலைவராக அன்றிருந்த வங்காளி ஒருவர் சென்னை வந்திருந்தார். வந்தவர் அகாதமி விருது பெற்ற எல்லோரையும் சந்திக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டார். அப்பொழுது நானும் சென்றிருந்தேன். பிரதேச மொழிகளுக்கிடையே இலக்கியப் பரிவர்த்தனை வேண்டுமென்று அவரிடம் வலியுறுத்தினேன். 'பாரதி தேசியக் கவி. அவர் பாடல்கள் எல்லாமே மொழிபெயர்க்கப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தேசியப் பாடல்களையாவது மொழிபெயர்க்கவேண்டும்' என்று கூறினேன். இதே விஷயத்தை நான் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச, அது அறிந்து பத்திரிகையில் வெளியாக, அகாதமியிலிருந்து இது சம்பந்தமாக எனக்குக் கடிதமும் வந்தது. அதோடு சரி. இரண்டாண்டு காலமாயிற்று. ஒன்றுமே நடக்கவில்லை.

''இரண்டு வருடங்களில் வள்ளலாரைப் பற்றிய எனது இந்த நூலின் நான்கு மறுபதிப்புக்கள் வெளி வந்து விட்டன. ராஜாஜி அவர்கள் இரண்டாம் பதிப்பு விழாவுக்குத் தாமாகவே வந்திருந்து பாராட்டிப் பேசினார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்த நூலுக்காக எனக்கு டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று அஜெண்டாவில் வைத்து செனெட் வரை வந்தது. அதற்குப் பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. இப்படி எல்லோராலும் புகழப்பட்ட இந்த நூல் மொழிபெயர்க்கப்படவில்லை என்றால் அவர்களின் விருப்பு வெறுப்பைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?''

இவ்வாறு கூறிய ம. பொ. சி. ''இந்த விவரங்கள் எல்லாம் எனக்கு ஆதாரபூர்வமாகக் கிடைத்தவை'' என்றும் கடைசியில் முத்தாய்ப்பாகச் சொன்னார்.

பேட்டி: '' **அசோக் குமார்** ''

**அடுத்தவாரம் பாரதி விழா அதிர்ச்சி - 2.**



# 4 சிறுகதை நட்சத்திரங்கள்



முதல் பரிசு
எம். ஏ. சுசீலா



இரண்டாம் பரிசு
எஸ். சுந்தரராஜன்



மூன்றாம் பரிசு
'அரவிந்தன்'
[illegible]

**மே**னாட்டுக் கீழ்நாட்டுப் பிரபல கதை ஆசிரியர்கள் பலர் 'நான் கதை எழுதுவது எப்படி?' என்பது பற்றி எழுதியிருக்கிருர்கள். என்னையும் அப்படிப்பட்ட பிரபல ஆசிரியராக்கி விட வேண்டும் என்று சதியாலோசனை செய்த சில நண்பர்கள் ''நீர் கதை எழுதுவது எப்படி?'' என்று கேட்பதுண்டு. ''நான் கதை எழுதுவதில்லையே! என் கையில் பிடித்த பேனு அல்லவா எழுதுகிறது!'' என்று பதில் சொல்லிச் சமாளிப்பேன். அதைக் கூடச் சிலர் நம்புவதில்லை. ''நீர் உண்மையில் பௌண்டன் பேனுவைக் கொண்டு தானு எழுதுகிறீர்? சில சமயம் நீர் போடுகிற போடைப் பார்த்தால் கடப்பாரையைப் பிடித்துக் கொண்டு எழுதுவது போலத் தோன்றுகிறதே!'' என்பார்கள்.

—பேராசிரியர் கல்கி அவர்கள் 'பொய்மான் கரடு' கதைக்கான முன்னுரையில் இப்படி நகைச்சுவையாக எழுதியிருக்கிருர். ஆனுல் இந்த வருஷ சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை ''ஓர் உயிர் விலை போகிறது!'' உணர்ச்சிகரமாக ஒரு பெண்ணின் அவலத்தைச் சித்திரிப்பதோடு, அவளது கணவனின் அரக்கத் தன்மையைச் சாடியிருக்கும் வன்மையான எழுத்தைப் படிக்கும்போது, அறிமுக எழுத்தாளரான எம்.ஏ. சுசீலா பேனு பிடித்தாரா, ஆண் வர்க்கத்தைச் சாடக் கடப்பாரையை ஏந்தினரா என்று கேட்கத் தோன்றுகிறது! ஆண் வர்க்கமே வெட்கித் தலைகுனியும்படி, கதாநாயகியின் கணவரது செயல்கள் அமைந்திருக்கின்றன. திருமதி எம். ஏ. சுசீலா தம் குறிக்கோளைப் பற்றிக் குறிப்பிடுகிருர்: ''சமூக விழிப்புணர்வைத் தூண்டும் சிறுகதைகளை, குறிப்பாகப் பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துக் குரலெழுப்பும் சிறுகதைகளை அதிக அளவில் உருவாக்க வேண்டும் என்பதே என் அவா!''


பட்டம் இன்ஷியல் இரண்டும் எம். ஏ.! காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் எம். ஏ. பட்டதாரி. மொழி இயல் துறையில் டிப்ளமா. மொழியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற அவா இவருக்கு இருக்கிறது.

பெண்கள் வயதைக் குறிப்பிடத் தயங்குவார்கள், இவர் தமது வயது முப்பதுஎன்று தைரியமாகச் சொல்லியிருக்கிருர்! 1970-ம் வருஷம் முதல் மதுரை பாத்திமாக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியையாகப் பதவி வகித்து வருகிருர்!

முதல் கதை 'கல்கி'யில் முதல் பரிசுக் கதையாக மிளிர்ந்து விட்டது. கதாசிரியரின் குறிக்கோளுக்கு என்றும் பத்திரிகை உலகில் நல்ல வரவேற்பு இருக்கும்.

● ''வாய்மை வெல்லும்!'' என்ற வாசகம் ருசியாயிருக்கும். ஆனுல் வாழ்க்கையில் உண்மை படும்பாடு! அரிச்சந்திர மகாராஜாவை விடவா ஒருவர் பாடுபட்டிருக்கப் போகிருர்? கிராமப்புறச் சூழ்நிலையில் இந்த 'வாய்மை' படும்பாட்டை இன்ஜினியர் சுந்தரராஜன் சுவைபடத் தந்திருக்கிருர், ''மீண்டும் வரும்'' கதையில். இளம் சிறுவன் இந்த வாய்மைக்காகத் தன் உயிரையே ஈந்தது நெகிழ வைக்கும் கட்டம் கதையில்!'

இன்ஜினியர் திரு எஸ். சுந்தரராஜன், பேராசிரியர் கல்கி பிறந்த தஞ்சை மண்ணில் திருத்துறைப்பூண்டியில் பிறந்தவர்.



மூன்றும் பரிசு
'ஜெயகுதா'
எஸ். கே. அமர்நாத்

அட்டைப்படம் :




மாடிப்படி ஏறும்போது கைப்பிடிச் சுவரில் இப்படி கைவைத்து முகம் மலரப் பார்த்தால் என்ன அர்த்தம்?

வேறென்ன? யாரோ மிகவும் நெருங்கியவர்கள், மகிழ்ச்சி பொங்கச் செய்பவர்கள் வீடு தேடி வந்து விட்டார்கள் என்றுதான் பொருள்!

அதுவும் எப்படி? வருவாரோ மாட்டாரோ என்று ஏங்க வைத்து விட்டு வருகிறார்! செய்து கொண்ட அலங்காரமெல்லாம் வீண்தான் என்று அலுத்து சலித்து வருந்தி களைய முற்படும் வேளையில் வந்து விட்டார். அப்போது— அந்தக் கணத்தில் ஏற்படும் மகிழ்ச்சியே அலாதிதானே!

'ஏன் இவ்வளவு தாமதம்?' என்று கேட்டு பொய்யாகக் கோபிக்கும் ஊடல் அடுத்து நிகழத்தான் போகிறது. ஆனால் அதற்கு முன்பாகவே சாமர்த்தியமாக காமிராவை 'கிளிக்' செய்து விட்டார் **திலீப் பானர்ஜி!**

---

இவரது தந்தை சேஷாத்திரி ஹிந்தி, தமிழ் எழுத்தாளர்.

1977-ம் வருஷம் திரு சுந்தரராஜன் சென்னை ஐ.ஐ.டி.யில் பி.டெக் முடித்துவிட்டு, திருச்சி பி.எச்.ஈ.எல்.லில் இன்ஜினியராகப் பணிபுரிந்து வருகிறார். வேலையில் அமர்ந்த பின்பும் இவர் எம்.ஈ. படிப்பு படித்து வருவது தனி விசேஷம்!

இருபத்தி நான்கு வயதுள்ள இன்ஜினியர் திரு சுந்தரராஜனுக்குப் பத்து வருஷங்களாகக் கதை எழுதிப் பழக்கம். தினமணி கதிரில் இவரது முதல் கதை 1976-ல் அச்சேறியது. அச்சில் ஏறிய முதல் கதைக்கு இவர் தம் நன்றியை ஆசிரியர் சாவிக்குச் செலுத்துகிறார்! குமுதம், இதயம் பேசுகிறது ஆகியவற்றை இவரது படைப்புக்கள் அலங்கரித்துள்ளன.

சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற இன்ஜினியர் திரு எஸ். சுந்தரராஜனின் இலட்சியம்: ''எழுத்துத் துறையிலும் தொழில் நுட்பத் துறையிலும் உயர் இடத்தை அடைவது.''

சிறுகதைப் போட்டியில் 'வாய்மை'க்குப் பலத்த அஸ்திவாரமிட்ட இன்ஜினியர் எஸ். சுந்தரராஜனுக்குத்மது இலட்சியத்தை அட அடைவது சிரமமாயிராது.

● ''மூன்றும் பரிசுக்கதைக்கும் எனக்கும் நல்ல ராசி உண்டு!'' என்று தொடங்குகிறார் 'அரவிந்தன்' என்ற புனைபெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் வெ. முரளிநாதன்.

''கல்கி சிறுகதைப் போட்டியில் நான் பரிசு பெறுவது இது இரண்டாவது முறை. 1974 அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றேன். கலைமகள் ஸ்ரீ நாராயணசாமி ஐயர் நினைவுக் குறுநாவல் போட்டியிலும் மூன்றாவது பரிசு. 1979 கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியிலும் மூன்றாவது பரிசு!'' என்று பல பத்திரிகைகளில் எழுதிப் பண்பட்ட எழுத்தாளரான வெ. முரளிநாதன் சொல்கிறார்.

இவருக்குப் பழைய பண்பாட்டிலும், கலாச்சாரங்களிலும் தான் எத்தனை ஈடுபாடு? அமெரிக்காவில் வாழ்ந்து போலியாக நம் கலாசாரத்தைக் கடைப்பிடிக்க முயலும் நவீன தம்பதியைச் சுற்றி நம் பண்பாட்டை நிலை நிறுத்த முயலும் ஒரு பெரியவரைச் சித்திரித்துள்ள அழகே அபாரம்! 'எழுதும் கதைகளின் எண்ணிக்கை எனக்கு முக்கியமல்ல. அவற்றின் தரமே முக்கியம்!' என்பது இவரது இலட்சியம்.

மேட்டூர் கெமிக்கல் ஸ்தாபனத்தில் பணியாற்றும் திரு முரளிநாதன், தம் முதல் சிறுகதையை முத்திரைக் கதையாக 1976ல் ஆனந்தவிகடனில் கண்டிருக்கிறார். தினமணிக் கதிரில் இவரது நட்சத்திரக் கதைகளும் இடம் பெற்றுள்ளன. 'கரும் பலகைகள் கற்றுக் கொடுப்பதில்லை!' என்பது இவரது சிறுகதைத் தொகுப்பு நூல்.

● வீடு குப்பை மேட்டில் இருந்தாலும் அவன் குடும்பத்துக்கு ஒருநாள் கூலியாக இருபது ரூபாய்க்கு மேல் கிடைத்ததும் தொடர்ந்து அவர்கள் அடையும் மகிழ்ச்சியையும் தொடர்ந்து ஏற்படும் நிகழ்ச்சிகளையும் ரஸமாக வர்ணிக்கும் அதே வேளையில் மெத்தை வீட்டில் ஏற்படும் அவல நிலையையும் ஒப்பிட்டு நோக்குகிறார் கதாசிரியர் எஸ். கே. அமர்நாத். ஏழைகளின் மனசைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்! மூன்றாவது பரிசுக் கதைகள் இரண்டில் மற்றொன்றான 'சாவதற்குச் சம்பளம்!' வாழ்க்கைப் பிரச்சினைகளைத் துல்லியமாக விளக்கும் கதை.

திரு எஸ். கே. அமர்நாத் கெமிக்கல் இன்ஜினியரிங் பட்டதாரி. அதே துறையில் இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து 'தீஸிஸ்' எழுதியவர். இவரது தனித் தன்மை என்னவென்றால் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் முதல் முயற்சியிலேயே தரமாக வெற்றி பெறுவதுதான்!

''எனது முதல் நாடகம் பாண்டிச்சேரி வானொலியில் ஒலிபரப்பாகியது. முதல் கவிதை கல்கி கவிதைப் போட்டியில் இடம் பெற்றது. எனது முதல் நகைச் சுவைக் கதை தினமணி கதிரில் முதல் பரிசு பெற்றது. 'தொழில் துறையில் பாதுகாப்பு' பற்றிய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு!'' என்று அடுக்கிக் கொண்டே போகிறார் தம் சாதனைப் பட்டியலை.

இவர் தம் வாழ்வில் பெரும் பேறாகக் கருதுவது, நெய்வேலியில் ஐயப்பன் கோவில் நிறுவுவதற்குப் பாடுபட்டதைத்தான்! தமது விழிகளைக் கண் தானம் செய்வதாக இப்பொழுதே ரிஜிஸ்தர் செய்து வைத்திருக்கிறார்!

-பி. எஸ். எம்.

## ஒரு நாள் ஒரு சவால்!

# என் காதலிக்கு நான்கு கால்கள்!



வலது புறம் திரு சந்தானம்

ஞாயிற்றுக் கிழமை ரேஸ் புத்தகத்தைக் கையில் வைத்தவாறு மனைவியிடம் அன்றைய செலவுக்கான பணத்தைக்கொடுத்துக்கொண்டிருந்தார் சந்தானம். என்னைப் பார்த்ததும் முறுவலித்தாலும் எண்ணங்கள் ரேஸைப் பற்றியே இருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. முப்பது வருடங்களாக ரேஸுக்குத் தவறாமல் செல்லும் சந்தானத்திடம், சவாலைப் பற்றிச் சொன்னவுடன், மனிதர் திகைத்துப்போய்ச் சில விநாடிகள் பேசவே இல்லை. ஒரு துக்கச் செய்தியைக் கேட்டாற்போல் இருந்தார். மெல்லத் தம்மைச் சுதாரித்துக் கொண்டு சவாலுக்குச் சம்மதித்தார்.

முதல் போன் கால் நண்பரிடமிருந்து வந்தது. 'எனக்கு உடம்பு சரியில்லை.' என்று தப்பிக்கப் பார்த்தாலும் நண்பர் விடவில்லை. சற்று நேரத்துக்குப் பின் போன் டபக்கென்று கோபமாக வைக்கப்படும் சத்தம் நன்றாகவே கேட்டது.

அடுத்து ஜோசியர் அப்பாசாமியிடமிருந்து போன். அன்றைய நாள் மதிப்பை ஜோசியர் கூறியதும், என்னை விழுங்கி விடுபவர் போலப் பார்த்தார் சந்தானம்.

பதினொரு மணி. ரேஸ் குறித்து போன் செய்பவர்களிடமிருந்து தப்புவதற்காக என்னை அழைத்துக் கொண்டு தி. நகர் கிளப்புக்குச் சென்றார். பத்திரிகைகளைப் புரட்டினார். அச்சமயம் அவர் சற்றும் எதிர்பாராத விதமாக, எப்போதோ பெற்றுச் சென்ற ரூபாய் நூற்றாறு கடன் பணத்தை ஒருவர் திருப்பிக் கொடுத்துச் சென்றார். பிரயோஜனமென்ன? இதை வைத்து ஆட முடியாதே' என்ற ஏக்கமும் கோபமும் சந்தானத்தின் முகத்தில் தெரிகிறது. மணி 1-15. சந்தானத்துக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. பேட்டாவது ஆடலாம் என்றால், நண்பர்கள் ரேஸுக்குப் போய் விட்டார்கள்.

சந்தானத்தை அங்கு பார்த்த நண்பர் பானுமூர்த்தி, ஆச்சரியத்தோடு, ''என்னப்பா ஜெம்பலையா? என்ன தகவல்? முதல் ரேஸ் போகலாமா?'' என்றார். ''இன்று எனக்குப் போதாத காலம். என் வாயால் நானே கெட்டேன்.'' என்று நொந்து கொண்டார் சந்தானம். தொடர்ந்து ''இன்று Nicolate நிச்சய வெற்றி. தொடர்ந்து ஆடினால் மூன்று விலையில் ஆடலாம்'' என்றார்.

இருவரும் அருகில் உள்ள பில்லியர்ட்ஸ் அறைக்குச் சென்றோம். அங்கு நண்பர் கே. சி. எஸ். ''இன்று Nadir to Nicolate எனக்காக ஆடேன்'' என்றவுடன் பழைய பல்லவியை இவரிடமும் பாடினார் சந்தானம். உனக்குப் பைத்தியமா?'' கத்தியே விட்டார் கே.சி.எஸ்.

நண்பர்கள் இருவரும் மனம் லயிக்காமல் தப்புத் தப்பாகப் பில்லியர்ட்ஸ் ஆடினார்கள்.

மணி மூன்று. தம் ஆசை ரேஸ் குதிரைப் பந்தய நுணுக்கங்களைக் கூறினார் சந்தானம்.

குதிரையின் நிறம், பெற்றோர், சகோதர சகோதரிகள், எடை எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். ரேஸ் அன்று குதிரை ஓட்டும் ஜாக்கியின் எடை, குதிரையின் நம்பர் இவைகளைக் கவனிப்பது அவசியம். இத்துடன் குதிரைக்கு முதல் நாள் தரப்பட்ட பயிற்சியைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ரேஸ் அன்று காலை மழையோ, அல்லது தூற்றலோ இருந்தால் எல்லாமே நாசமாகி விடும். அன்றைய தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மணி நான்கு. இனியும் பொறுக்க முடியாத சந்தானம், ஆறாவது ரேஸான டெல்லி பினேட்டில் ஸாவரின் பாட் (Sovereign Pot) என்ற குதிரையை நினைத்தவாறு தம் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தார். ''ரேஸுக்குப் போகாமல் இவ்வளவு நேரம் தாக்குப் பிடித்ததே பெரிய காரியம். ரேஸ் சூழ்நிலையையும், என் உயிர் நண்பர் எம்.ஏ.எம். ராமசாமி குதிரையுடன் கொஞ்சும் அழகையும் மறக்கவே முடியாது!'' என்று சொல்லியவாறு கிளம்பினார்.

அனுபவம்: ''சிக்கி''

# கண்ணியிலிருந்து தப்பிய மான்

—சுப்ரபாலன்—



அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டேன். நெஞ்சில் செருகிய கத்தியை நிதானமாய் உருவி யெடுத்து அதன் ரத்தப் பளபளப்பை ஆசை தீர ஒரு முறை பார்த்தாகி விட்டது.

பழைய காலத்தில் ஷேக்ஸ்பியர், படித்த ஞாபகம் அவனுக்குக் கண்டிப்பாய் வந்திருக்கும். 'நீயுமா புருட்டஸ்?''

ஆமாம், மை டியர் பாய்! நானேதான். ரகசியத்தைக் காப்பாற்ற வேறு வழியே எனக்குத் தெரியவில்லையே! என்னுடைய உயிருக்கு உயிரான நண்பன். ஒரே கோப்பையில் இரண்டு பேரும் தேனீர் அருந்தினோம். ஒரே சிகரெட்டை இரண்டு பேரும் புகைத்திருக்கிறோம்.... ஒரே—

சின்னச் சந்தேகம். என் கையில் கத்தியைப் பார்த்த அதிர்ச்சியில் அவனே செத்துப் போனானா, அல்லது நெஞ்சில் கத்தி இறங்கியதால்தான் உயிரை விட்டானா? நிச்சயமாய்த் தெரியவில்லை. நாளைக்குப் பிரேத பரிசோதனைக்கு வருகிற டாக்டர் படவேண்டிய கவலை எனக்கு எதற்கு?

'என்னை அப்படி யெல்லாம் பரிதாபமாகப் பார்க்காதே....' அவனுடைய விழியின் இமைகளை உடனே இழுத்து மூடுகிறேன். நாடக மேடையில் திரையை விடுகிற ஞாபகம் — ஆட்டம் முடிந்து போய்விட்டது.

அவனுடைய கடிகாரம் இன்னும் சாகாமல் ''டிக்''கிக்கொண்டிருக்கிறது. மணி நாலு முப்பத்தேழு. ''முன்னேறி''விட்ட பக்கத்துக் கிராமத்துக்கு இனிமேல் ஆறு மணிக்குத்தான் புழுதியைக் கிளப்பிக் கொண்டு அடுத்த பஸ் வரும். அதுவரை ஈயாவது, காக்கையாவது!

மை டியர் பாய்! நல்ல இடமாகத்தான் பார்த்துத் தேர்ந்தெடுத்திருக்கிறாய். அவனுடைய முதுகில் லேசாக ஒரு செல்லத் தட்டு. தலை 'லொடக்' கென்று முன்புறம் சரிகிறது.

நிமிர்த்த முயன்று தோற்றுப் போகிறேன். 'உன்னை நிமிர்த்த முடியாமல் போனதால் தானே இப்படிச் சாகும்படியாகி விட்டது?'

ஒரு சைக்கிள் மணிச் சத்தம். விளையாட்டுப் பையன் ஒருவன் குரங்குப் பெடலில் வருகிறான். நண்பனைப் பார்த்து விடாத மாதிரி நன்றாய் முதுகால் கதவுப் பக்கம் மறைத்து நின்று கொள்கிறேன்.

''இன்னா சார்! காரு ரிப்பேரா? மெக்கானிக்கை அனுச்சு வரட்டுமா?''

மௌனமாய்ச் சிகரெட்டைப் பற்றவைத்து அமைதியாக அவனிடம் பேசுகிறேன்: ''ஊரு எந்தப் பக்கம் ஒனக்கு? வடக்கேயா தெக்கேயா?''

''வடக்கே போனா நாலு மைல். பெரிய ஊரு... தெக்கேதான் பாத்திருப்பீங்களே மூணு மைலு....''

ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து அவன் பல்லை எண்ணிப் பார்த்து விட்டு ''வடக்கேயே போ... ரொட்டியும் ஒரு சீசாவில் காப்பியும் வாங்கி வா...'' என்கிறேன்.

பையன் சைக்கிளை மிதிக்கிறான். பிழைக்கிற பையனாயிருந்தால் திரும்பி வர மாட்

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

கம்பெனி முதலாளி: ஒரு மாதம் வேலை செய்துவிட்டு ஒரு வருஷம் சர்ட்டிபிகேட் கேட்டால் எப்படிக் கொடுப்பது?

வேலை செய்தவர்: உங்க கிட்டே ஒரு மாதம் வேலை செஞ்சதே ஒரு வருஷம் வேலை செஞ்சது போல் இருக்கு சார்!

-வி. ராதாகிருஷ்ணன்



டான்: பத்து ரூபாயின் அருமை தெரிய வேண்டாமா?

காரின் பின் சீட்டில் இருந்த பிளாஸ்க்கைத் திறந்து கோப்பையில் ஊற்றி அப்படியே உறிஞ்சிக் குடிக்கிறபோது அந்தக் காப்பியில்தான் என்ன சுவை! பெண்ணை முத்தமிடுகிற பாவனையில் காப்பிக் கோப்பைக்கு ஆசை தீர, அழுந்த முத்தம் கொடுத்து விட்டு நிமிர்கிறபோது நினைவு வருகிறது.

செத்துப் போனவனுக்கும் காப்பியில் உயிர். ஒரு மடக்கு கொடுத்தால் என்ன? உயிர் நண்பனாயிற்றே!

பாவி! பல்லை இறுக்கிக் கொண்டு செத்துப் போனான். அவன் பங்கையும் நானே ரசித்துக் குடித்தாயிற்று.

என்னுடைய கைவிரல் ரேகைகள் இல்லாத இடமே இல்லை. கண்ணாடியில், கதவுகளில், காப்பிக் கோப்பையில், கைப்பிடிகளில் – பிளாஸ்கில் –

நிச்சயப்படுத்திக் கொள்கிறேன்: எலக்ட்ரானிக் கடிகாரத்தில் எண்கள் ஒழுங்காய்ப் பாடம் படித்திருக்கின்றன. தப்பில்லாமல் ஒன்னு, ரெண்டு எண்ணத் தெரிகிறது. மணி ஐந்து மணி பத்து நிமிடம் முப்பத்தேழு வினாடிகள். அவன் கையை அப்படியே பிடித்துக் கடிகாரத்தைக் கதவில் மோதுகிறேன். கடிகாரமும் உயிரை விடுகிறது. சரியாக அவன் செத்துப் போய் ஒரு மணி



நேரம் கழித்துக் கடிகாரம் உயிர் விட்டது. போதுமே!

போலீஸ்காரர்களுக்கு, டாக்டர்களுக்குக் கொலை நடந்த நேரம் பற்றி அறிய ஒரு சின்னக் குழப்பம். வரட்டுமே—

பாவம், நாய் நரி வந்து இழுத்தால் கூட நாதியில்லை. பரிதாபப்பட்டுக் கார் கண்ணாடிகளை நன்றாய் ஏற்றி விடுகிறேன். கதவுகளை நன்றாய் அறைந்து சாத்துகிறேன். ''நண்பா! இனிப் பயமில்லை. நிம்மதியாய்த் தூங்கு!''

பையன் வருவதற்குள் போய்விட வேண்டும். கிராமத்து மக்குப் பையன். புத்திசாலியாக இருந்தால் பணத்தோடு எங்காவது சினிமாப் பார்க்க போயிருக்க வேண்டாமோ!

ஞாபகமாய்ச் சாத்திய கதவில் கைப்பிடி அருகே இரண்டு மூன்று இடங்களில் வேண்டுமென்றே ரேகையை அழுத்திப் பதிய வைக்கிறேன்.

நிம்மதியாகத் தெற்கே மூன்று மைல்களை அளக்கத் தொடங்கிக் காலெடுத்து வைக்கிறேன். காலை வீசி நடக்கும் வேகமான நடையில் சரியாக நாற்பது நிமிடம் எனக்குப் போதும். பாஸஞ்சர் வண்டி, நேரம் தவறாமல் வந்தால் கூடப் பரவாயில்லை. ஆறு மணி பதினைந்து நிமிடங்களுக்கு அங்கே இருக்கலாம்.

ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்த வரை யாரும் பின்தொடரவில்லை. ஆட்டுச் சிறுவர்களோ, அந்த அசட்டுச் சைக்கிள் பையனோ காரைப் பார்த்திருந்தால் கூடக் கவலையில்லை. பாஸஞ்சர் வண்டி ஆச்சர்யமான முறையில் பத்து நிமிடத் தாமதத்தில் ஊதிக் கொண்டு புறப்பட்டு விட்டது.

தண்டவாளத்தின் 'கிடக்கட்டும்' ஓசையில் என் கணக்குப் பிசகாமல் காரியம் நடந்து விட்டதைச் சரிபார்த்து மகிழ்ந்து கொள்கிறேன்.

நிம்மி, ஏழே கால் மணிச் செய்தி ஒலி பரப்பில் எதையோ ரசித்துக் கொண்டிருந்தாள்.

கிறுக்குப் பெண், அண்ணன் செத்துப் போன நேரத்தில் என்ன இழவு நியூஸ் வேண்டிக் கிடக்கிறது?

''நிம்மிக் கண்ணு!'' ரேடியோவின் கழுத்தை நெறித்து விட்டுத் திரும்புகிறாள். கண்களில் உற்சாகம் மின்னலிடுகிறது.

''ஹாய்! இன்னிக்குப் புரோக்ராம் உண்டு. டான்ஸ் டிக்கட் வீணாகாது... இல்லையா அண்ணா?''

''நிச்சயமாகக் கண்ணு! அவன் எங்கே சுற்றப் போயிட்டான்?'' அவளுடைய கண்களில் ஏக்கம் பரவுகிறது. பதினாறு வயதுக் குழந்தை முகம் வாடலாமா? மடையன் இந்த ரத்னப் பயல் செத்துப் போய்விட்டானே!

''அண்ணா! யாரோ பஞ்சாபி பார்ட்டியாம். அவர் கூடத் திருச்சி வரை போயிருக்கார். நாளைத் தங்கிவிட்டுச் சனிக்கிழமை வந்துடுவார்....''

அடி அசட்டுப் பெண்ணே! உன் அண்ணன் இனி–மே–ல் வ–ரமா–ட்–டா–ன்.–நிறுத்தி, நிதானமாய் ஒவ்வொரு எழுத்தாய் மனம் சொல்கிறது.

சூடாய் மறுபடி காப்பி வருகிறது. காப்பி மணத்தை விட நிம்மியின் கை மணம் அதிகம். காப்பியை எடுக்கப் போகும்போது நினைவு வருகிறது.

''நிம்மிக் கண்ணு! காப்பியை அப்படியே பிளாஸ்கில் ஊற்றி வை. அவசரம்...''—பாத்ரூம் கதவைத் திறந்து — தாளிட்டுக் கைகளின் மைக்ரோ உறையைத் தண்ணீரில் கரைத்துவிட்டுச் சந்தன சோப் மணம் கமழ வெளியே வரும்போது—

என் கரங்கள் சுத்தமானவை. கறைகளே இல்லை. இனிமேல் நிம்மிக் கண்ணு தரும் காப்பியைக் குடிக்கலாம். சோபாவைத் தொடலாம். ரேடியோவைத் திருகலாம். இனிமேல் என்னுடைய கரங்களின் ஒரிஜினல் ரேகைகள் எதில் பதிந்தால் என்ன?

நிம்மியுடன் டான்ஸ் பார்த்துவிட்டு, அவளை வீட்டில் விட்டுத் துணைக்கு ஆயாக் கிழவியை இருக்கச் சொல்லிவிட்டு—

வீட்டுக்கு — அறைக்குத் திரும்பும்போது டெலிபோன் மணி ஒலிக்கிறது. போனில் நிம்மி விம்முகிறாள். அவளால் பேச முடியவில்லை. யாரோ அந்தத் ''துயரச் செய்தி''யைச் சொல்கிறார்கள்.

''இஸ் இட்?'' — நான் அப்படியே வார்த்தைகளில் அதிர்ந்து போகிறேன். ''பாடி

''நர்சரி ஸ்கூல் மாணவர்கள் ஸ்ட்ரைக்...''

''எதற்கு ஸ்ட்ரைக்?''

''எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்களின் ஸ்ட்ரைக்குக்கு அனுதாபம் தெரிவித்து...''

''அவங்க எதற்கு ஸ்ட்ரைக்?''

''ஹைஸ்கூல் மாணவர்கள் ஸ்ட்ரைக்குக்கு இவர்கள் அனுதாப ஸ்ட்ரைக்.''

அது சரி, எதற்காக ஸ்ட்ரைக்காம்?''

''காலேஜ் மாணவர்களின் ஸ்ட்ரைக்குக்கு ஆதரவு தெரிவித்து....''

''காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் எதற்கு ஸ்ட்ரைக்?''

''கல்லூரி மாணவிகளின் ஸ்ட்ரைக்குக்கு அனுதாபம் காட்டிட....''

''மாணவிகள் ஸ்ட்ரைக் ஏன்?''

''நர்சரி ஸ்கூல் குழந்தைகள் ஸ்ட்ரைக்குக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டாமா?''

''........''



எங்கே இருக்கு? மார்ச்சுவரிக்கு வந்தாச்சா? நாளைக்குத்தான் பரிசோதனையா?... இதோ வந்து விட்டேன்.'' டக்கென்று டெலிபோனை அழுத்தி விட்டுப் புறப்படுகிறேன். பரபரக்கிறேன்.

மறு நாள் சவப் பரிசோதனை முடிந்து. பாடியை அடக்கம் செய்து எல்லாம் ஒரு மாதிரியான பிறகு — இனப் பத்திரிகைகளில் ஹேஷ்யங்கள் யார் யாரையோ சுற்றி வளைத்த பிறகு—

கைரேகை முடிவு தெரிகிறது. இந்தர் சிங்கின் கைவிரல் ரேகைகள். பிரபல கொலை— கொள்ளை — இத்யாதிகளில் சம்பந்தப்பட்டவன்—

ஆனால் அவனைத் தூக்கில் போட்டுப் பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. பாவம்! போலீஸ் திணற வேண்டி வந்துவிட்டது.

சிரித்துக் கொண்டேன்.

தினசரிப் பத்திரிகைகளில் மறுபடியும் ரோட்டரிப் பதிவுகள். என்னைத் தவிர எல்லோரையுமே சந்தேகப் பட்டார்கள்; திடீரென்று நிம்மி ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டாள். ''எனக்குப் பயமாயிருக்கு அண்ணு!''

''ஸில்லி! உனக்கென்ன கண்ணு பயம்? தைரியமா இரு.''

வாசலில் போலீஸ் காலடி வித்தியாசமாய் ஒலித்தது.

மரியாதையாய் எழுந்து நின்று கைகளை நீட்டினேன். வேறு வழியில்லை.

''யூ ஆர் டு போல்ட் மேன்'' இன்ஸ்பெக்டரின் பாராட்டுரையைக் கேட்கிற நேரமா அது? ஒரு கான்ஸ்டபிள் கையிலிருந்த நிம்மியின் படம் — குழந்தை நிம்மியின் படம் — இனமும் அந்த முகத்தில் விழித்தால் மகிழ்ச்சியாய் இருக்கிறதே என்று நம்பிய படம் —

அதில் தூவப்பட்ட வெள்ளைக் கருப்புப் பொடியை மீறிக் கொண்டு வெளிப்பட்ட என் உதட்டு முத்திரை—

நான் புரிந்து கொண்டேன். கை ரேகைக்குத் தப்பி விட்டாலும் காப்பிக் கோப்பையில் பதிந்த உதட்டு முத்திரை காட்டிக் கொடுத்து விட்டது.

''மைடியர் எஜுகேடட் யங் மேன்! முக்கியமான புள்ளிகளின் கைரேகைகளைச் சேர்ப்பது உங்க ஹாபின்னு போன மாசம் பத்திரிகைப் பேட்டியிலே நீங்க சொன்ன தகவல் எங்களோட வேலையைச் சுலபமாக்கிட்டுது. ஆனு உதட்டு ரேகையை வச்சுத் துப்பறியலாம்கிற புதிய முறை உங்களுக்குத் தெரியாமல் போயிடுச்சு இல்லையா?''

நான் இப்போதும் மௌனமாக, அமைதியாக நடக்கிறேன். நிம்மிக் குழந்தை மயக்கம் தெளியாத நிலையில் சோபாவில் பூவாய்க் கிடக்கிறுள்.

அன்று அவனுடைய வேட்டைக் கண்ணியில் அகப்படவிருந்தவளைக் காப்பாற்றியாயிற்று. அது ஒன்றே எனக்குப் போதும். வெறும் உபதேசங்களால் ரத்னுவைத் திருத்த முடியாமல் தோற்றுப்போனபோது என்னுல் தாங்க முடியவில்லை. இனிமேல் பெண்களுக்கு வெறி பிடித்த ரத்னுவால் ஆபத்தில்லை. சமூகத் தொண்டு!

ரெஜினு — என்னுடைய தங்கை. ரத்னுவுக்குத் தெரியாது. ரெஜினுவுக்கும் தெரியாது. என் அப்பாவுக்கும் அவனுடைய தாயாருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். எனக்கும் அப்பாவின் உயில் மூலம் தெரியும்.

நீதி மன்றத்துக்குக்கூட இந்த ரகசியம் தெரிய வேண்டுமா என்ன?



கோ-ஆப்டெக்ஸ்
கோ-ஆப்டெக்ஸ் ஆடை
களில் உங்கள் அழகு
மிளிரத் தோன்றிடுவீர் !
அகமும் புறமும் கவர்ந்த
உங்கள் கோ-ஆப்டெக்ஸ்
அளிக்கும் நாகரீக ஒளி
சிந்தும் ஆடைகளை
அணிந்திடுவீர் !
கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள் :
பருத்திச் சேலைகள்,
அச்சிட்ட பருத்திச் சேலைகள்,
அசல் பட்டுச் சேலைகள்,
அச்சிட்ட பட்டுச் சேலைகள்,
பாலியஸ்டர் சேலைகள்,
பாலியஸ்டர் சட்டைகள்,
பருத்திச் சட்டைகள்,
பட்டுச் சட்டைகள்,
வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள்,
படுக்கை விரிப்புகள்
தலையணை உறைகள்,
மேஜை விரிப்புகள்,
அலங்காரத்துணி வகைகள்
மற்றும் ரெடிமேட் உடைகள்
சிறப்புத் தள்ளுபடி
20-10-79 வரை .
பருத்தி 10% பட்டு 20%
கோ-ஆப்டெக்ஸ்
இதயத்தின்
இன்ப ஒளி

# கடல் ராணி



## சாண்டில்யன்

### அத்தியாயம் 8

## விளங்காத நேரம்

கண வேகத்தில் பாய்ந்து வந்து தன்னைக் கட்டித் தழுவித் தூக்கிக் கடல் மணலில் தள்ளி இறுக்கிய கைகளைத் தளர்த்தாமலே கடகட வெனப் புரண்டு விட்ட இந்திரஜித் அனந்த், தன்னை மணலில் அழுத்திய வண்ணம் இடைச் சேலையை நெகிழ்த்திய போதுகூட கடல் ராணி சிறிதும் நிலைகுலைந்தாளில்லை. அவன் தழுவலோ புரண்ட வேகமோ காம இச்சையின் காரணமல்லவென்பதை அவள் சந்தேகமற உணர்ந்திருந்தாளாதலால், சேலைக்கும் இடைக்கும் இடையே அவன் கைவிரல்கள் புகுந்தபோது அவற்றை அகற்றவோ தன் உடலால் முரண்டு அவன் ஆலிங்கத்தை நீக்கிக் கொள்ளவோ முயற்சி எடுக்கவில்லை அவள். அந்த சமயத்தில் இந்திரஜித் அனந்துக்கும் இன்ப எண்ணங்கள் இம்மியளவும் இல்லை என்பதை அவன் அடுத்து எடுத்த நடவடிக்கை நிரூபித்தது. கடல் மணலில் அந்தக் கட்டழகியின் சரீரத்தை அழுத்திக் கிடந்த அனந்த் அவள் இடைக்குள் கையை விட்டு அங்கிருந்த சின்னஞ்சிறு கைத்துப்பாக்கியை மிகத் துரிதமாக எடுத்து, நீட்டிக் கிடந்த அவள் வலது கையில் அதைத் திணித்து ''வலது புறமிருக்கும் தென்னைமரத்தின் இடது புறத்தை நோக்கிச் சுட்டுவிடு'' என்று அவள் காதுக்கருகில் முணுமுணுத்தான். கடல்ராணியின் கை அடுத்த விநாடி மின்னல் வேகத்தில் இயங்கியது. தலையைச் சிறிது லேசாக மரமிருந்த திக்கை நோக்கித் திருப்பி கடைக்கண்ணால் அனந்த் குறிப்பிட்ட தென்னையை நோக்கிச் சரேலெனக் கைத்துப்பாக்கியின் குதிரையை இழுத்துக் கண நேரத்தில் சுட்டுவிட்ட கடல் ராணி, அந்தத் திக்கில் 'தட்' என்று விழுந்து விட்டது யார் என்பதை அறிய ஆவலுள்ளவளாயிருந்தாலும், தன்னை அழுத்திக் கிடந்த வலிய உடலை அகற்ற இயலாதவளாய் ''இனி மேல் ஆபத்து அந்த மனிதனால் வர முடியாதென்று நினைக்கிறேன்'' என்று சொன்னாள் அனந்தை நோக்கி. சொன்னதன்றி சிறிது புன்முறுவலும் கொண்டாள்.

அவள் சொன்ன சொல்லின் பொருள் அப்பொழுதுதான் புரிந்ததால் பெரிதும் சங்கடத்துக்குள்ளான அனந்த் சட்டென்று எழுந்திருந்து கடல் ராணியின் அழகிய உடலுக்கு விடுதலையளித்து விலகி நின்றான். ''மன்னிக்க வேண்டும். வேறு வழியில்லை'' என்று சங்கடம் குரலில் ஒலிக்க தனது விபரீதச் செயலுக்கு மன்னிப்பும் கேட்டான். கடல் ராணி அதற்குப் பதில் சொல்லாமலே தரையிலிருந்து எழுந்திருந்து இடையில் சரிந்துவிட இருந்த தனது சேலையை எடுத்து மீண்டும் இறுகப் பழையபடி முடிந்து கொண்டாள். மேலே நெகிழ்ந்து விட்ட தலைப்பையும் ஒரு சுழற்று சுழற்றி வெளியே தலைகாட்டி முறைத்த மார்பின் இரட்டையழகையும் போர்த்தி மறைத்தாள். பிறகு தன்னால் சுடப்பட்டவன் யார் என்பதைப் பார்க்க வடக்கு திசையிலிருந்த தென்னை மரத்தை நோக்கி நடந்தாள்.

அனந்த் அவளைத் தொடரவில்லை. திடீரெனத் தன்னைக் கவ்விவிட்ட பிரமைக்கு அடிமையாகி நின்ற இடத்திலேயே நின்று விட்டான். ஆபத்து அகன்றவுடன் தான் செய்த செயலின் விளைவுகளால், கண்முன்பு விளையாடிய விந்தைகளால், சுயநிலை இழந்து கிடந்தான் அவன். சுமார் இரண்டு மூன்று

---

**காதலின் பெயரைக் கொண்ட சில திரைப்படங்களின் பெயர்கள்:**

காதல்,
காதல் வாகனம்
காதல் பறவை
காதல் படுத்தும் பாடு
காதல் ஜோதி
காதல், மோதல், கல்யாணம்
காதலிக்க நேரமில்லை
காதலிக்க வாங்க
காதலித்தால் மட்டும் போதுமா?
நில், கவனி, காதலி
அந்தமான் காதலி
கன்னியின் காதலி
கள்வனின் காதலி

— நிலை முத்து

விநாடி காலம் கடல்ராணியின் கட்டமைந்த உடல் தன் சரீரத்துக்குக் கீழே கிடந்ததை அப்பொழுதுதான் எண்ணிப் பார்த்தான் அனந்த். அவள் எழுந்து கலைந்த சேலையை சீர்படுத்திய போதுதான், கட்டவிழ்த்திய நிலையில் அவள் சேலை பலபடி நெகிழ்ந்து பற்பல இந்திர ஜாலங்களை விளைவித்துவிட்டதென்பதை உணர்ந்து கொண்டான். அனந்தின் உள்ளத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சி அலைகள் மோதத் தொடங்கின. அவள் வேகமாக மேலாடையைச் சுற்றி மறைத்ததற்கு ஒரு விநாடி முன்பு தன்னை நோக்கிக் கோபத்துடன் முறைத்த இரட்டை அழகுகளின் அளவையும் திண்மையையும் நினைத்துப் பார்த்ததால் ஏற்பட்ட மனநெகிழ்ச்சி அவனைச் சித்திரவதை செய்ய முற்பட்டது. அந்த அழகு தன்



"கார் கேட்டீங்களே மாப்ளே! இப்போதைக்கு மினி கார் தான் வாங்கித் தர முடிந்தது."

மார்பில் சற்று முன்பு அழுந்திக் கிடந்ததென்ற சிந்தனை அவன் சிந்தையை எங்கோ அள்ளிச் சென்றது. அவள் தென்னை மரத்தை நோக்கி நடந்து சென்ற போது இலங்கிய நுண்ணிடையை பின்புறத்திலிருந்து நோக்கிய அவன், அந்த இடையின் முன் புறத்தில் தனது கை புதைந்த போது அது எத்தனை மிருதுவாக இருந்தது, எத்தனை வழவழத்து இருந்தது, என்று எண்ணி அந்த இடையில் அவள் கைத்துப்பாக்கியைச் சொருகியிருந்ததால் அந்த இடம் கன்னிச் சிவந்திருக்குமே என்று மனத்தில் அனுதாபத்தையும் வளரவிட்டுக் கொண்டான். அந்த அனுதாபத்தின் விளைவாக அந்தக் கன்னியிருந்த இடத்தைப் பார்க்கலாமா என்ற யோசனை கூட அவன் மனத்தில் எழுந்தாலும், அப்படி ஏதாவது செய்யில் தான் இறங்கும் பட்சத்தில் ராணி தன்னைச் சுடத் தயங்க மாட்டாளென்ற எண்ணத்தால் ஓரளவு புன்முறுவலையும் இதழ்களில் படரவிட்டுக் கொண்டான். தென்னையை நோக்கி ராணி அன்ன நடை போட்ட போது பின்புறம் இடைக்குக் கீழே அளவுடன் அசைந்த பின்னழகுகளின் எழுச்சியையும் திடத்தையும் முற்றும் பார்க்க முடியவில்லையென்றாலும், சேலை அசைந்த விதத்திலிருந்து அவற்றின் நிலையை நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்ததால், அதனால் ஏற்பட்ட சஞ்சலம் அவன் மனத்தைப் பெரிதும் ஆட்டிப் படைத்தது.


இத்தனைக்கும் ஒரு விஷயம் திட்டமாகப் புரிந்ததால் அனந்த் ஒருமுறை எக்கப் பெருமூச்சு விட்டான். அவள் யாருக்கும் எட்டாக் கனியென்பதைப் பல காரணங்களால் அவனால் சந்தேகமற உணர முடிந்தது. தான் அவளைக் கட்டித் தூக்கிக் கீழே புரண்டது வேண்டுமானால் எதிர்பாராத செய்கையாயிருக்கலாமேயொழிய, ராணி தன் கீழே கிடந்த சமயத்தில் அவள் சுயநிலை அடைந்து விட்டாளென்பதை நினைத்துப் பார்த்த அனந்த். ராணி மட்டும் இஷ்டப்பட்டிருந்தால் கையை என்னிடமிருந்து விடுவித்துக் கொண்டு என் வயிற்றில் சுட்டிருக்கலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். "அப்படி அவள் சுட்டிருந்தால் எனக்கு வீர சொர்க்கம் கிட்டியிருக்கலாம். ஆனால் சற்று முன்பு சில விநாடிகள் அனுபவித்த இன்ப சொர்க்கம் கிட்டியிருக்காது" என்று நினைத்துப் பார்த்ததால் அவன் உதடுகளில் விரிந்த புன்சிரிப்பு, மகிழ்ச்சிச் சாயையை அவன் முகம் பூராவும் படர விட்டது. ராணி தன் கீழே கிடந்த சமயத்தில் அவள் மலர் உடலின் பல பகுதிகள் சட்டென்று இறுகிவிட்டது கூட அந்தச் சமயத்தில் அவன் நினைவுக்கு வரவே, அப்படி இறுகியது இச்சையாலல்ல, சினத்தால், அத்துமீறிய என் செய்கையால், வெறுப்பால், என்று முடிவு கட்டினான் அனந்த். கீழே அவள் விழுந்து கிடந்த சமயத்தில் அவள் கால் சேலை சிறிது மேலே ஏறி விட்டதால் வழவழத்த அவள் ஆடுதசைப்பகுதி தனது காலில் இழைந்ததையும், இழைந்த சமயத்தில் தன் கால் சராய் இடையே தடுத்தும் கூட தன் உணர்ச்சிகள் மின்னலாகத் தன்னை ஊடுருவி விட்டதையும் எண்ணிப் பார்த்த அனந்த் "என்ன அநாகரிகமாக நடந்துவிட்டேன் நான்" என்றும் தன்னைக் கண்டித்துக் கொண்டான். இருப்பினும் அந்தக் கண்டிப்பு பொய்க் கண்டிப்பு என்பதை உணர்ந்ததால், சமயம் வரும்போது எந்த ஆண் மகனும் அயோக்கியன்தான் என்று ஆண் வர்க்கத்தின் அவல நிலைக்குச் சமாதானம் சொன்னான். சொந்தக் குற்றங்களுக்கு வர்க்கத்தின் மேல் பழி போடுவது மனித இயற்கையாதலால், அந்த இயற்கைக்குத் தானும் விலக்கல்ல என்பதை அந்த சந்தர்ப்பத்தில் அனந்தும் நிரூபித்தான். இப்படி கடல் ராணியை, அவள் அழகின் சிறப்புகளை, மர்மங்களை, விலாசங்களை, எண்ணி எண்ணி நிலைகுலைந்து நின்ற அனந்தை ராணியின் அழைப்புக் குரல் சுய நிலைக்குக் கொண்டு வந்தது.

"இப்படி வாருங்கள்" என்ற ராணியின் அழைப்பால் மீண்டும் இந்த உலகத்துக்கு வந்த இந்திரஜித் அனந்த் அவளிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவன் அங்கு



சென்றதும் அவள் மீண்டும் பழைய ராணியாகி விட்டதுடன் கம்பீரத்துடன் மிக அலட்சிய மாகக் காலடியில் விழுந்து கிடந்த உடலை அவள் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்ட தால், உணர்ச்சிகளை அடக்கும் துரிதத்தில் ராணிக்கு இணை ராணியே என்பதைப் புரிந்து கொண்டான். அது மட்டுமல்ல அவன் புரிந்து கொண்டது. ராணியிடம் எத்தனை அழ கிருந்ததோ அத்தனை ஆபத்தும் இருந்ததை அனந்த் புரிந்து கொண்டான். அவள் மிகத் துரிதமாக சிறிதும் குறி பார்க்காமல் சுட்ட துப்பாக்கியின் ரவை கீழே கிடந்த மனிதனின் இரு புருவங்களுக்கும் இடையில் பொட்டு வைத்தது போல் பாய்ந்திருந்ததையும், அது பாய்ந்த வினாடியில் அந்த மனிதன் உயிர் பறந்து விட்டதென்பதையும் கண்டுகொண்ட இந்திரஜித் ''கடல் ராணி அபாயமானவள்''

## ஒரு விடுகதை



இன்னிசை பொழியும் — ஆனால் — இனியதோர் வீணை அல்ல
தென்றலில் தவழும் — ஆனால் — தெள்ளிய தண்மை அல்ல
நறுமணம் வீசும் — ஆனால் — நந்தன முல்லை அல்ல
அருமையில் அருமையானஅப்பொருள் செப்புவாயே!

சித்தம் மயக்கும் — ஆனால் — சொக்குப் பொடி அல்ல
பித்தம் கொடுக்கும் — ஆனால் — நச்சுக் கொடி அல்ல
முத்துச் சொரியும் — ஆனால் — மாகடற் சிப்பி அல்ல
இத்தனை சொல்லி விட்டேன், யாதென்று செப்புவாயே!

—சந்தா

என்று பரவியிருந்த வதந்தி சிறிதும் பொய்யல்ல என்று தீர்மானித்தாள். ஒரு மனிதனைக் கொலை செய்துவிட்ட ராணி அதனால் எந்தவித மாற்றமும் அடையாமல் நின்றிருந்ததைப் பார்த்த அனந்த் இத்தகைய கொலைகள் அவளுக்கு புதிதல்ல என்பதையும் உணர்ந்து கொண்டதால், அத்தகைய ஒரு கடுமை ஒரு பெண்ணிடம் எப்படி இருக்க முடியும் என்று எண்ணி விடை கிடைக்காமல் தவித்தான்.

அவன் தவித்ததைப் பற்றி அறியாமலும், அறிய ஆசைப்படாமலும் ராணி கேட்டாள் ''இவன் யார்?'' என்று.

''ஸாத் வித்தியன் படைத் தலைவன். பெயர் யாகூப்'' என்றான் அனந்த் மிக மெதுவான குரலில்.

''இங்கு எதற்காக வந்தான்?'' ராணியின் கேள்வி சர்வ சாதாரணமாக எந்தவித உணர்ச்சியுமில்லாமல் உதிர்ந்தது உதடுகளிலிருந்து.

இந்திரஜித் மாண்டு கிடந்தவனைப் பார்த்தபடியே பதில் சொன்னான் ராணிக்கு ''ஸ்டான்டனும் ஸ்மித்தும் எதற்காக வந்தார்கள்?''

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் ராணி. ''என்னைத் தூக்கிப் போகத்தான் வந்தானா?'' என்று கேட்கவும் செய்தாள்.

''ஆம் ராணி'' என்றான் அனந்த்.

''இவனை எப்பொழுது, எப்படிப் பார்த்தீர்கள்'' என்று ராணி கேட்டாள்.

''இன்று பகலிலேயே பார்த்தேன். வணிகர் படகுகளுடன் கலந்து ஒரு தனிப் படகில் வந்தான். இவனையும் வணிகனென்று நினைத்ததால் உங்கள் காவலர் இவனை மடக்கவில்லை. அகஸ்மாத்தாகக் கடல்புறம் நான் மட்டும் இவனைத் தூரத்திலிருந்து பார்த்தேன். அவன் படகிலிருந்து எழுந்த போது அவன் இடைக் கச்சையிலிருந்து ஒரு காகிதம் விழுந்தது. படகை அவன் கட்டிச் சென்ற பின்பு நான் படகை அடைந்து அதை எடுத்துக் கொண்டேன். அதிலிருந்து அவன் யாரென்பதையும் வந்த பணி என்ன என்பதையும் புரிந்து கொண்டேன்'' என்று விளக்கிய அனந்த் ''இதோ அந்தக் கடிதம்'' என்று கூறிக் கடிதத்தைத் தனது கச்சையிலிருந்து எடுத்து அவளிடம் நீட்டினான். ராணி அதைப் பிரிக்கவோ படிக்கவோ முயலவில்லை. வாங்கித் தனது இடையில் சொருகிக் கொண்டாள்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் விரைந்து வந்த தனது காவலரிடம் இறந்தவன் சடலத்தைக் காட்டி ''எடுத்துச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டு அவர்கள் அந்த உடலைத் தூக்கிச் சென்றதும் மீண்டும் சோலைக்குள் நுழைந்தாள்.

அனந்தும் அவளைத் தொடர்ந்தான் பழைய எண்ணங்கள் உள்ளத்தில் சுழல. கடல் ராணியின் இதயத்திலும் ஏதோ எண்ணங்கள் சுழன்றாலும் அவள் அவற்றை வெளிக்குக் காட்டாமல் தென்னை மரத்துக்கிடையே தொங்கிக் கொண்டிருந்த கொடியூஞ்சலை நோக்கி நடந்தாள். அதை அணுகி உட்காருமுன்பு கீழே தான் விழுந்து உருண்ட இடத்தை நின்று கவனித்தாள் சில விநாடிகள். தான் உருண்ட இடங்களில் இருந்த மணலின் சிதைவைக் கவனித்துப் புன்முறுவல் கொண்டாள். அடுத்துத் தன்னை கீழே வீழ்த்தி அனந்த் அழுத்திப் பிடித்த போது தன் உடல் கிடந்த இடத்தில், தனது தலையும் முதுகுப் புறமும், கால்களும், விரிந்து கிடந்த கைகளும் தீட்டியிருந்த மணல் சித்திரத்தைக் கவனித்தாள். அவற்றில் தன் பின்னெழில்கள் பதிந்து கிடந்த இடம் சிறிது ஆழமாகவே இருந்ததைப் பார்த்து ''இயற்கையே இயற்கையைக் காட்டிக் கொடுக்கிறது'' என்று நினைத்ததாலும் ''இதை இவரும் பார்த்திருப்பாரோ'' என்ற இன்பத் திகிலாலும் சிறிது சங்கடத்துடன் அசைந்தாள் கடல்ராணி.

கடல்ராணி சட்டென்று கொடி ஊஞ்சலுக்கு முன்பாகவே நின்று விட்டதையும்

நடிகர் மனைவி: நெஞ்சு வலின்னு டாக்டர் கிட்டே போனீங்களே டாக்டர் என்ன சொன்னார்?

நடிகர்: இனிமேல் பாரம் எல்லாம் தூக்கக் கூடாதுன்னுட்டார். இனி நான் எப்படி ஹீரோவா நடிக்க முடியும்? நடிகையை தூக்கலைன்னா யார் ஹீரோன்னு ஏத்துப்பா?

— கே. ஆர். எம்'




அவன் பார்த்த மனைச் சித்திரத்தையும் கண்ட ஆனந்தின் உணர்ச்சிகள் மீண்டும் கட்டவிழ்த் தொடங்கின. அவள் பின்னெழில் புதைந்த இடத்தை அவனும் கவனிக்கவே செய்தான். அந்தச் சமயத்தில் அந்த சித்திரத்தைக் கலைக்க காலால் மணலைத் தள்ள முயன்ற ராணியின் காலைச்சிறிது குனிந்து பிடித்த அனந்த் ''வேண்டாம் ராணி! அதைக் கலைக்க வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டான்.

தலையைச் சிறிது திருப்பி அனந்தைப் பார்த்தாள் ராணி. அந்தப் பார்வையில் ஒளிவிட்ட சிரிப்பு அனந்தின் மனத்தை ஒரு உலுக்கு உலுக்கியது. அவள் செவ்விய உதடுகளில் விரிந்த புன்சிரிப்பு அவனை வேறு உலகத்திற்கு அழைத்துச் சென்றது. ''ஏன் வேண்டாம்?'' என்று வெளிப்பட்ட அவள் கேள்வியில் இருந்த குழைவு அவனுக்கு அவள் வலை விரித்தது.

அந்த சமயத்தில் அவன் கை, மோகன காலை முழந்தாளுக்குச் சிறிது மேலே தான் பிடித்திருந்தது. ஆனால் அந்தப் பிடி நகர்ந்தது சிறிது மேலே. ராணி அவனைத் தடுக்கவில்லை. அதனால் உண்டான தைரியத்தாலோ என்னவோ அவன் இடது கை அவள் இடையில், தவழ்ந்தது. சுற்றி வந்தது. கைத்துப்பாக்கியைச் சொருகியிருந்த இடத்தை இரண்டு விரல்கள் தடவிப் பார்த்தன - அங்கு கன்னி விட்டதா என்று கவனிக்க.

ராணி ஆடாமல் அசையாமல் நின்றாள். அனந்த் தன்னைப் பின்னும் நெருங்குவதை உணர்ந்தாள். உணர்ந்த பின்னும் தடுத்தா ளில்லை. உணர்ச்சிப் பெருக்கால் 'ஹும்' என்று தடை விதித்தாள் அவள். ஆனால் அது தடையாகத் தெரியவில்லை. அழைப்பாகவே தோன்றியது அனந்துக்கு. மிக நெருங்கினான் அவன். அவள் பின்னும் அவன் உடல் இழைந்தது மெதுவாக. இழைந்ததா இணைந்ததா. விளங்கவில்லை அவனுக்கு. விளங்காத நேரம் அது. (தொடரும்)





✖ ஸ்ரீமதி மணி ✖ ராமமூர்த்தி ✖ அகிலா ✖ விஜயலக்ஷ்மி

# சூடாமணியும் சூடிகையான வாசிப்பும்

இந்த ஆண்டு கிருஷ்ணகான சபையினர் சூடாமணி பட்டம் வழங்கி ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமியைக் கௌரவித்தனர். திரு டி. எஸ். பார்த்தசாரதி மணியை அறிமுகப் படுத்தும் போது, மூசிரி, டைகர் போன்ற மிகச் சிறந்த குருக்கள் இவரை மணி அடைந்தது அவரது பாக்கியம் என்றும் ஒவ்வொரு குருவிடமிருந்தும் சிறந்த அம்சங்களை மணி கிரகித்துக் கொண்டது அவரது சாமர்த்தியம் என்றும் குறிப்பிட்டார். அமெரிக்கா செல்லு முன்னர் மணி, திரு டி. எஸ். பார்த்தசாரதி அவர்கள் இல்லத்துக்கு வந்து சில பாடல்களின் உச்சரிப்புக்களைச் சரிபார்த்துக் கொண்டாராம். உச்சரிப்பில் சிறிதளவு மாற்றம் இருந்து விட்டாலும் அமெரிக்காவில் யார் கவனிக்கப் போகிறார்கள் என்றில்லாமல் அவர் மிகவும் கவனமாகச் செயல்பட்டதை மிகவும் பாராட்டினார் திரு டி. எஸ். பார்த்தசாரதி. சூடாமணியாக மாறியுள்ள மணி முன்னிலும் பிரகாசிக்கக் கேட்பானேன்.

கிருஷ்ண கான சபையின் கோகுலாஷ்டமி உற்சவத் தொடரில் குமாரிகள் அகிலாவும் விஜயலக்ஷ்மியும் இரட்டை வயலின் கச்சேரி செய்து ஜமாய்த்து விட்டனர். உண்மையில் இது அவர்களுடைய முதல் கச்சேரி என்று நம்பவே முடியாத அளவுக்குச் சிறப்பாக அமைந்தது. குறிப்பாக தோடி ராகம் தானம் பல்லவியின் போது கூடியிருந்த ஏராளமான ரசிகர்கள் பிரமிப்பில் ஆழ்ந்து விட்டனர். லால்குடி திரு ஜெயராமனின் சிஷ்யையும் (அகிலா) மகளுமான (விஜயலக்ஷ்மி) இவர்களுடைய வாசிப்புக்கு ஈடுகொடுக்கும் ராமமூர்த்தியின் மிருதங்கம் அனுசரணையாக ஒலித்தது. நேதுநூரி திரு கிருஷ்ணமூர்த்தி குழந்தைகளை வாழ்த்திப் பேசும் போது லால்குடி பரம்பரையில் வந்துள்ள விஜயலக்ஷ்மி வாய்ப் பாட்டிலும் சிறந்து விளங்கும் ரகசியத்தை வெளியிட்டு குமாரிகளின் வித்வத் மேன்மேலும் சிறக்க ஆசி கூறினார்.

— குட்டி கிருஷ்ணன்

சுந்தரம் கையில் காகிதக் கட்டுக்களோடு முதல்வர் அறைக்குள் நுழைந்தான். எதிர் நாற்காலியில் கரஸ்பாண்டண்ட் உட்கார்ந்திருந்தார். அருகில் ஒரு சடைப் பின்னல்.

சூழ்நிலை பாதிக்காத வகையில் அவளைப் பார்த்தும் பார்க்காதது போல், முதல்வரின் கரஸ்பாண்டண்டின் பார்வைகள் சந்திக்கும் பொது இடமாகத் தேடி அங்கு போய் சுந்தரம் நின்றான்.

''சார், கூப்பிட்டீங்களாமே?''

''என்ன மிஸ்டர், செகண்ட் ஆன்சிலரிக்கு இன்னும் டெஸ்ட் வைக்கலியா? இன்டர்னல் அசெஸ்மெண்ட் மார்க் அனுப்பவேண்டாமா?''

''போன வாரமே முடிச்சிருக்க வேண்டியதுதான், சார். ஸ்ட்ரைக்குலே தடைப்பட்டுப் போச்சு. இந்த வாரக் கடைசியிலே வைச்சிக்கிறதாக அன்னௌன்ஸ் பண்ணியிருக்கேன், சார். அடுத்த திங்கட்கிழமை கம்ப்ளீட் மார்க் லிஸ்ட் கொடுத்திட முடியும்.''

''சரியாப் போச்சு. உங்களுக்குத் திங்கட்கிழமை, அய்யாச்சாமிக்குச் செவ்வாய்க்கிழமை, மன்னார்சாமிக்குப்

போட்டிக் கதை-2

# கிரியா ஊக்கி

இளம்பாரதி



புதன் கிழமை என்று கடத்திக்கிட்டுப் போனா மேலே என்னையில்ல கொடையிருங்க. நான் நாளைக்கு யுனிவர்சிட்டிக்குப் போகணும்னு சொல்லியிருந்தேனே இல்லையா?''

இதற்கு ஏதாவது பதில் சொல்வதா வேண்டாமா என்று அவன் மனத்துக்குள்ளேயே பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தபோது கரஸ்பாண்ட்டெண்ட் குறுக்கே புகுந்தார்.

''பையன் யாரோட ரெகமண்டேஷன்?''

அவருடைய பார்வையே ஒரு மாதிரி இருந்தது.

''அதெல்லாம் ஒன்னுமில்லே. நல்லமாதிரிப் பையன். கொஞ்சம் லெதார்ஜிக்—அசமந்தம். அவ்வளவுதான்.''

இப்படி ஒரு 'மன் ஏஜ்' முன்னிலையில் அவமானப்பட நேர்ந்து விட்டதே என்று அவனுக்கு எரிச்சல் துருத்திக் கொண்டு வந்தது. ஆனாலும் வேலையில்லாமல் திண்டாடியதை விட இது அப்படி ஒன்றும் மோசமில்லை என்றும் அவனுடைய பட்டறிவு கூறிற்று. கல்லூரி கரஸ்பாண்டண்ட் முன்னிலையில் முதல்வர் தம் நிர்வாகத் திறமையை நிரூபிக்க முயல்வதாக அவனுக்குத் தோன்றியது. ஏதோ அற்ப ஆசை. போகட்டும்!

''சரி, பரவாயில்லே மிஸ்டர் சுந்தரம். திங்கட்கிழமை வச்சி முடிச்சிருங்க. நான் அடுத்த வாரம் யுனிவர்சிட்டி போறபோது லிஸ்டைக் கொண்டு போகணும். உங்க டிபார்ட்மெண்ட்லே மத்தவங்ககிட்டேயும் சொல்லிடுங்க.''

''எஸ், சார்!''

சட்டைப் பொத்தானைச் சரி செய்வதாகப் பாவனை செய்து கொண்டு சுந்தரம் அவளை நோக்கித் திரும்பினான். அவனையே அதுவரை பார்த்துக் கொண்டிருந்த அவள் அந்தப் பார்வைச் சந்திப்பில் கலவரமடைந்து தலையைத் திருப்பிக் கொண்டாள். அவளுடைய நாணத்தை அங்கீகரித்தவனாகக் கிராப்பைச் சரிசெய்து கொண்டு சுந்தரம் அங்கிருந்து வெளியேறினான்.

பிற்பகல் ஆய்வுக்கூடத்தில் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

கொஞ்ச நேரம் வாசலில் காத்திருந்த பியூன் அதற்கு மேலும் காத்திருக்கப் பொறுக்காமல், ''சார், ஐயா அவசரமாக அழைக்க வரச் சொன்னாங்க'' என்றான்.

''இவரு ஒருத்தருப்பா, இல்லாத அதிகாரமெல்லாம் பண்ணிக்கிட்டு. மேனிடத்திலே பிடிப்பு இருக்குதுன்னு அதுக்காக நம்மளைப்பிடிச்சி

வதைக்கணுமா?'' என்று முனகிக்கொண்டே, துணையிருந்த ஆசிரியரிடம் வகுப்பை ஒப்படைத்துவிட்டு, முதல்வர் அறையை நோக்கி அவன் நடந்தான்.

''சார்! கூப்பிட்டீங்களாமே?''

''போன் கால்'' என்பதாக மேஜையின் மேல் வைத்திருந்த ரிசீவரைச் சுட்டிக் காட்டியபடி அவர் அவனைப் பரிசீலனையாகப் பார்த்தார்.

''ஹலோ!''

''எஸ், சுந்தரம் ஹியர். அங்கே யாரு பேசறது?''

''சாரதா பேசறேன். அதுதான் . கரஸ் பாண்டண்ட் டாட்டர்.''

''என்ன வேணும்?''

''நம்ம மாவட்டத்திலே தொழில் வளத்தைப் பத்தி ஒரு கட்டுரை எழுத வேண்டியிருக்கு. விளக்கமா நேரிலே சொல்றேளே!''

''....''

''எவ்வன பதிலைக் காணோம். ஒரு அஞ்சரை மணிக்கு வீட்டுக்குக் காரை அனுப்பறேன். ப்ளீஸ், கொஞ்சம் வந்திட்டுப் போங்க.''

''ஓ. கே.''

''தாங்க் யூ.''

போனை முடித்து வைத்தான் சுந்தரம். பெருக்கெடுத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே முதல்வரைப் பார்த்தான்.

'யார் போனில் பேசியது?' என்பதுபோல் அவர் பார்த்தார். அந்தப் பார்வைக்கு எப்படி, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், அவரிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஆய்வுக் கூடத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கு வந்து சேர்ந்த பின்னும் வியர்வைப் பெருக்கு நிற்கவில்லை.

மாலை ஐந்தரை மணிக்குக் காரில் கரஸ் பாண்டண்டின் வீட்டை அடைந்தபோது அவள் வாசலிலேயே காத்திருந்தாள்.

அவள் சர்வ சாதாரணமாக, வரவேற்கும் முறையாகக் கேட்டாள்:

''போன் செஞ்சது யாருன்னு முதல்லே உங்களாலே ஊகிக்க முடிஞ்சுதா?''

''நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலே.''

''ஓ. அப்படீன்னு நான் போன்லே கூப்பிட்டதிலே உங்களுக்கு வருத்தமோ இடைஞ்சலோ இல்லையே?''

''நோ, நோ. யூ ஆர் அட் பெர்ஃபெக்ட் லிபர்ட்டி.''

''தாங்க் யூ.''

''என்னமோ ஆர்ட்டிக்கிள் எழுதணும்னு சொன்னீங்களே, என்ன விஷயம்?''

''அது சும்மா ஒரு இதுக்குத்தான். பிரின்



சிபால் என்ன, ஏதுன்னு கேட்டால் நீங்க பதில் சொல்லணுமே, அதுக்காகத்தான்.''

''கொஞ்சம் இருங்க'' என்று சொல்லி விட்டு உள்ளே போனவள் திரும்பி வரும் போது இரண்டு கப் காப்பி கொண்டு வந்தாள். அதைக் கையில் கொடுத்துக் கொண்டே, ''நீங்க ரொம்ப ஹார்டு வொர்க்கிங்னு கேள்விப்பட்டேன்'' என்று பார்வையையும் சேர்த்துப் பரிமாறினாள்.

''தாங்க் யூ.''

சுந்தரத்துக்கு அதற்கு மேல் பேச்சு வரவில்லை. எதிரில் கரஸ்பாண்டண்ட் படம் மூன்றாவது ஆளாக இருந்து பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றிற்று. அவர் ஒரு கண்டிப்பான பேர்வழி. அவருடைய ஒரே மகள் இவள். இவளிடம் எப்படிப் பேசினாலும் ஆபத்துத்தான். இந்த விஷயம் தெரிந்தால் ஏதாவது வம்பு இழுத்துக் கொண்டே இருப்பாரே இந்த பிரின்சிபால்?

''என்னமோ பேசணும்னு நெனக்கிறீங்க போலிருக்கு. ஆனா கூச்சப்படறீங்க.''

''என்ன பேசறதின்னே தெரியலே.''

''ஒரு லெக்சரருக்குப் பேசச் சொல்லித் தரணுமாக்கும்.''

''பெண்கள் கிட்டே இப்படிப் பேசறது எனக்குப் புதுசு.''

''அப்படீன்னா எனக்கு முன் அனுபவம் இருக்குன்னு சொல்றீங்களா?''

இதைச் சொல்லிவிட்டுக் குபீரென்று சிரித்தாள். சூழ்நிலை ஒரு மாதிரி கலகலப் படைந்தது.

சாரதாவின் சாதுர்யத்தைச் சுந்தரம் வியந்தான். டைப்பிஸ்ட் சொன்னது போல் தெத்துப் பல்லும் அவளுக்கு எடுப் பாகத்தான் இருந்தது. அவளுக்குச் சமதையாக எதை எதையோ பேசிவிட்டு இருட்டிய பின்பு வீடு போய்ச் சேர்ந்தான்.

அது ஓர் இரண்டும் கெட்டான் ஊர். பட்டிக்காடும் இல்லை, பட்டணமும் இல்லை. மறுநாள் காலை சுந்தரம் கல்லூரி போய்ச் சேர்வதற்கு முன்பாகவே செய்தி போய்ச் சேர்ந்து விட்டது.

''அவனுக்கு அடிக்கிற யோகத்தைப் பாருடா!'' என்ற பொதுத் தலைப்பின் கீழ் வெவ்வேறு தோரணையான பேச்சுக்கள் வளைய வளைய வந்தன. சுந்தரத்துக்கு வாழ்த்துக் கூறுவது போல அவனுக்கு நேராகப் புகழ ஆரம்பித்தார்கள் சிலர். அவனிடம் அப்படி என்ன இருக்கிறது என்று அவர்களே அவனுக்குப் பின்னால் கேலி பேசினார்கள்.

ஊர் வாய் மெல்ல விஷயங்கள் அவ்வப் போது கிடைத்து வந்தன. நாளாவட்டத்தில் கல்லூரியின் சிறப்புக் கூட்டங்களுக்குச் சாரதா தன் தந்தையுடன் வருவதும், அவளும் சுந்தரமும் கண் பார்வைகளினும் மட்டுமின்றி நேரடியாகப் பேசிக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் நிறையவே உருவாயின.

ஊருக்கு எல்லையிலிருந்த பஞ்சாலையிலிருந்து ஒரு நாள் திடீரென்று கார் வந்தது. முதலாளி கூப்பிடுவதாக டிரைவர் சொல்லவே சுந்தரம் விவரத்தைப் புரிந்துகொண்டு காரில் ஏறி உட்கார்ந்தான். மகளுக்கும் அப்பாவுக்கும் தங்களை முன்னிட்டு உரசல் ஏற்பட்டிருக்கும் என்று அவனுக்குப் பொறி தட்டியது. அகால வேளையில் ஊருக்கு வெளிப்புறத்தில் அவனைக் கூட்டி வரச் சொன்னதிலிருந்தே அவருடைய மனநிலை புரிந்தது.

கார் நின்றதும் இறங்கி, டிரைவர் வழி காட்ட கரஸ்பாண்டண்டின் — மில் முதலாளியின் — தனி அறைக்குள் நுழைந்தான்.

''வாருமய்யா மகாராஜா! உட்காரும்!''

பிரளயத்துக்கு இது முன்னுரை என்பது அவனுக்குத் தெரியும். கைகளைப் பின்னிய வாறு நின்று கொண்டிருந்தான்.

''ஐ வாண்ட் டு பீ பிசினஸ் லைக். சாரதா உன்னை விரும்பறாளாம். அவளைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குச் சம்மதம்தானே?''

''.....''

''இப்படித் தலை குனிஞ்சி நின்னுக்கிட்டிருந்தா எப்படி? நான் கரஸ்பாண்டண்டுங்கிற முறையிலே இல்லே. சாரதாவோட அப்பாங்கிற முறையிலே கேட்கறேன்.''

''சாரதா சொன்னாங்களா?''

''இனியும் இந்த விதண்டாவாதமெல்லாம் எதுக்கு? ஒரு சாதாரண லெக்சரருக்கு என் பொண்ணைக் கொடுக்கிறதிலே எனக்கு இஷ்டமே இல்லே.''

அவர் நிஜமாகவே 'பிசினஸ் லைக்' தான்.

''நீ வேலையிலே எவ்வளவு மட்டமா இருந்தாலும் என் பெயரை உபயோகப்படுத்தி உன்னைப் புரொபசர் ஆக்கிடறேன். ஆனா இந்தக் காலேஜ்லேயே அப்படிப் புரமோட் செய்யறது நல்லா இருக்காது. உன்னை மட்டுமில்லாம என்னையும் சேர்த்துக் கிண்டல் பண்ணுவாங்க. அதனாலே கோயமுத்தூரிலே இல்லாட்டி கோபிச்செட்டிபாளையத்திலே புரொபசர் போஸ்ட் போட்டுத் தரச் சொல்றேன். அவங்கள்ளாம் நமக்கு வேண்டியவங்கதான்.''

தம்முடைய ராஜ்யம் அதுவரையில் பரவி இருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் அவர் பெருமைப்பட்டுக் கொள்வது போல் இருந்தது. 'சிபாரிசு இல்லாமல் இந்தக் காலத்தில் வேலை உயர்வே கிடையாது. தான் ஒன்றுக்கும் உதவாதவன், கழிசடை என்று அவர் தீர்மானித்து வைத்திருந்தாலும் தம் மகளை முன்னிட்டு அவர் தனக்கு வேண்டியதெல்லாம் செய்வார். இது ஒரு வகை சீதனம்தான்'. மனத்துக்குள் ஊர்ந்த எண்ணங்களை வெளியேற்றினான்.

''சரி சார்!''

''ஒரு அப்ளிகேஷன் எழுதிக் கொடு, புரொபசர் போஸ்ட்டுக்கு. எந்த ஊர், எந்த காலேஜ்னு எதுவும் போட வேண்டாம். நானே இருக்கிற நிலைமையைப் பார்த்துப் போட்டுக்கிறேன்.''

வௌவால்: நீ என்னதான் தலைகீழா நின்னாலும் உன் காதலுக்கு நான் சம்மதம் தர மாட்டேன்.
-சந்திரசேகர்



''சரி, சார்!''

சுந்தரம் உடனே செயலில் இறங்கினான்.

மறுநாள் மாலை அவர்கள் கொஞ்சம் சீக்கிரமாகவே சந்தித்துக் கொண்டார்கள்.

''நான் நேத்தே அப்பா கிட்டச் சொல்லிட்டேன். உங்களை நம்பினா இந்த ஜன்மத்திலே கல்யாணம் ஆகாதுங்கறதைத் தெரிஞ்சுக.''

''என்ன சொன்னாரு?''

''உருப்படி இல்லாதவனே யா நீ கல்யாணம் பண்ணிக்கப் போறே? ஆளைப் பார்த்து மயங்கி நாசமாப் போகாதே அப்டீன்னாரு.''

''ஓகோ!'' அவள் குரலிலிருந்த உதாசீனத்தைச் சுந்தரம் மென்று விழுங்கினான்.

''உங்களை ஒண்ணும் கூப்பிட்டுக் கேக்கலையா?''

''கேட்டாரே! மடையனா இருந்தாலும் பிரமோஷன் வாங்கித் தரேன்னாரு. ஒரு லெக்சரர் தனக்கு மருமகனாக வரக் கூடாதுன்னு பிரமோஷனுக்கு அப்ளிகேஷன் எழுதித் தரச் சொன்னாரு.''

''கொடுத்தாச்சா?''

''.....ம்.....''

''பிறகென்ன? உங்களுக்குப் ப்ரமோஷன் வந்திட்ட மாதிரிதான்.''

''உங்கப்பா ரொம்பப் பொண்ணுங்களுக்கு அப்பாவா இருந்திருந்தா நல்லா இருக்கும்.''

''ஏனும்?''

''வர இருக்கும் எல்லா மருமகன்களுக்கும் பதவி உயர்வு ரொம்பச் சுலபமாகக் கிடைக்கும் இல்லியா?''

''சீ சில்லி!''

தெத்துப் பல் அழகை ஒரு முறை ரசித்துக் கொண்டான். ''உங்கப்பா சாம்ராஜ்யத்திலே இதெல்லாம் சர்வ சாதாரணம்.''

''எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு.''

''ஏனும்?''

''உங்களுக்குப் பிரமோஷன் ஆகப் போகிறதை நெனச்சி.''

''வெறும் லெக்சரரா இருந்தா என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டியாக்கும்?''

''லெக்சரரா இருந்தாலும் எங்கப்பா கிட்டச் சொல்லிப் புரபசரா மாத்தற தைரியம் எனக்கு இருக்கு.''

''ஐ சீ!''

ஒரு மாதம் முடிவதற்குள்ளாகவே கோயமுத்தூரிலிருந்து ஆர்டர்ஸ் வந்தது, பேராசிரியர் வேலையை ஒப்புக் கொள்ளும்படி. வாழ்த்துக்கள் கூறி எல்லோரும் சுந்தரத்தைக் கோயம்புத்தூருக்கு வழி யனுப்பி வைத்தார்கள். மதுரை வரை சென்று எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் வழியனுப்பி வைத்தவர்கள் சாரதாவும் அவளுடைய அப்பாவும்தான்.

''நீ சார்ஜ் எடுத்துக்கிட்ட உடனே லெட்டர் போடு. உங்க கல்யாணத்துக்குத் தேதி வச்சிடறேன்'' என்றார் அவர், அவனைத் தட்டிக் கொடுத்தபடி.

''சரி சார்!'' என்றான் சுந்தரம் பணிவாக.

சாரதா எத்தனையோ முறை கடிதம் எழுதியும் சுந்தரத்திடமிருந்து பதிலே வரவில்லை. வியாபார விஷயமாக அவளுடைய அப்பா ஒரிரு முறை கோயமுத்தூர்



# அர்த்தமே வேறுதான்!

திருமணப் பத்திரிகைகளில் மணப் பெண்ணின் பெயருக்கு முன் சௌபாக்கியவதி எனக் குறிப்பிடுவது வழக்கம். சுருக்கமாக சௌ. என எழுதுவார்கள். ஆங்கிலத்தில் இதையே Sow எனக் குறிப்பது தற்சமயம் வழக்கமாகி விட்டது. அகராதியில் Sow என்பதற்கும் பொருளைப் பார்த்துத் திடுக்கிட்டேன். Sow என்பதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? ''பெண் பன்றி''!

-லலிதா செல்லப்பா

போயிருந்தபோது அவனைச் சந்தித்துத் திரும்பினார். தன்னுடைய 'புரொபேஷனரி பீரியட்' முடிந்து வேலை நிரந்தரமானதும் கல்யாணத்தைப் பற்றி யோசிப்பதெனச் சுந்தரம் முடிவு செய்திருந்ததை அவர் சாரதாவிடம் தகவலாகத் தெரிவித்தார். மகளுடைய நச்சரிப்புத் தாங்காமல் அவர் கடிதம் எழுதி ஏற்பாடு செய்ததன் விளைவாக உரிய காலத்துக்கு முன்பாகவே அவனுடைய வேலை நிரந்தரம் என்று உறுதியாயிற்று.

திடீரென்று ஒரு நாள் அவனிடமிருந்து கடிதம் வந்தது. ''இத்தனை நாளைக்குப் பிறகுதான் மகாராஜாவுக்கு நெனைப்பு வந்திருக்கு போலிருக்கு'' என்று முணுமுணுத்துக்கொண்டே கரஸ்பாண்டண்ட் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

''மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். உங்கள் கணிப்பில் நான் அசடாக இருந்தாலும் என்னைப் பேராசிரியராக உயர்த்தி உதவினீர்கள். ஆறு மாதமே ஆகியிருந்தாலும் இங்குள்ளவர்களுக்கு என்னைப் பிடித்து விட்டது. என்னை நிரந்தரமாக்கி விட்டார்கள்.

''இன்று என்னுடைய எண்ணத்தை வெளிப்படையாக எழுதி விடுவது நல்லதென்று நினைக்கிறேன். எப்படிப்பட்டவனாக இருந்தாலும் உங்களால் அவனுக்குப் பதவி உயர்வு வாங்கித் தர முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் மகளுக்கும் நிறைய இருக்கிறது. உங்களுக்கேற்ற, உங்கள் மகளுக்குப் பிடித்த இன்னொருவன் உங்களுக்கு மருமகனாக அமைவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அம்முறையில் இன்னொருவனுக்கு வாழ்க்கையில் உயர ஒரு வாய்ப்புக் கிடைக்கட்டுமே! எனக்கு நீங்கள் செய்த நன்மைக்கு, சிநேகிதியாய் இருந்து சாரதா எனக்குச் செய்த உதவிக்கு எப்போதும் நான் நன்றியுடையவன்.

''இன்னொரு செய்தியும் உண்டு. இந்தக் கல்லூரியின் கரெஸ்பாண்டண்டின் மகள் இப்போது என்னை விரும்புகிறாள். நான் வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கான அறிகுறி தென்படுகிறது.

—அன்புள்ள சுந்தரம்.''

''ராஸ்கல்!''

# தைரிய லக்ஷ்மி

இன்றைய சமுதாயத்தின் நடுத்தர வர்க்கத்து மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கதை. கற்பனையல்ல. அன்றாடம் நாம் பார்க்கும் காட்சிகள் தான். ஓய்வு பெற்ற தந்தை. வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளத் துடிக்கும் இரு பெண்கள். மூத்தவள் படிப்பு முடிந்து, உத்தியோகம் பார்த்து வருவாய்க்கு ஏற்பாடானால் தான் குடும்பம் நிமிர முடியும். அதன் பிறகல்லவா அவள் தன் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். குடும்பத்தைத் தலை நிமிர வைக்கும் லக்ஷ்மியாக லக்ஷ்மியே நடித்திருப்பது இந்தக் கதைக்கு முக்கியமான 'ப்ளஸ்' பாயிண்ட். லக்ஷ்மி — தன தான்ய, சந்தான லக்ஷ்மியல்ல, தைரியலக்ஷ்மி! உத்தியோகத்துக்கான இண்டர்வியூவில் அதைத் தனக்குச் சாதமாக்கிக் கொள்ளும் போதும் சரி, உத்தியோகம் கிடைத்துப் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று அதை வகிக்கும் கம்பீரத்திலும் சரி, உயர் அதிகாரியின் பந்தா 'லைப்'பளிச்சென்று காண்பிப்பதிலும் அதே சமயம் பெண்மையின் மென்மையை வெளிப்படுத்தும் கட்டங்களிலும் ரொம்ப 'டாப்'பாகச் செய்திருக்கிறார் லக்ஷ்மி. பின் எத்தனை அழகாக நடிக்கிறது -- என்று கூறுவது எவ்வளவு அசட்டுத்தனமோ அப்படித்தான் 'லக்ஷ்மி' நன்றாக நடித்திருக்கிறார் என்பதும். ஆனாலும் அந்த லாகவம், பாவனைகள், நளினம் 'சிக்'கென்ற அந்த உடலமைப்பு இவைகளைப் பாராட்டா விட்டால் என்னவோ போலிருக்கிறதே.

மணப் பந்தலில் மாப்பிள்ளை சேகரை (ஸ்ரீகாந்த்)யும் அவன் தோழர்களையும் மட்டந் தட்டி கடைசி நிமிஷத்தில் வெளியேற்றி அதே பந்தலில் தன் தங்கைக்கு மணமுடித்து வைக்கும் இடம் நல்ல விறுவிறுப்பு, படபடப்பு. சிரிக்க வைக்கிறார், நெஞ்சை நெகிழ வைக்கிறார். காதலிக்கும் போது நம் உள்ளத்தில் கிளுகிளுப்பையும் ஊட்டுகிறார். இப்படி எல்லாம் செய்யத் தெரிந்த, கதாபாத்திரமாகவே மாறிவிடக்கூடிய நடிகை, லக்ஷ்மி ஒருவர்தான். அவர் ஒருவரால்தான் முடியும்.

ஆரம்பத்தில் தலை நீட்டி விட்டுப் பாதிப் படத்துக்கு மேல் வித்தியாசமான கேரக்டரில் தோன்றுகிறார் மக்கள் கலைஞர். ஜெய் என்றதும் நம் கண் முன்னே உருவாகும் காரெக்டர் வேறு. ஆனால் தைரியத்துக்கு எதிர்மறையாக நாணிக்கோணி பெண்களைக் கண்டால் ஓடி ஒளியும் பாத்திரமாக இதில் ரொம்பவும் நேர்த்தியாக நடித்திருக்கிறார். ஹாஸ்ய நடிப்புக்கு அந்த 'அத்லெடிக்' உடல்தான் கொஞ்சம் முரண்டுகிறது. இம்மாதிரி நகைச்சுவைப் பாத்திரங்களில் 'ஜெய்' நன்கு சோபிக்க முடியும் என்பதைத் தைரியமாகச் சொல்லலாம்.

கல்யாணத் தரகர் கல்யாணமாக வரும் நாகேஷ் இந்தச் சிரிப்புப் படத்துக்கு மேலும் சிரிப்பைக் கூட்டுகிறார்.


வில்லனைப் போல வந்து நல்லவராக மாறி மற்றவர்கள் நடிக்க வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கிறார் ஸ்ரீகாந்த்.

காலேஜ் குமரிகள் கொட்டமடித்து ஆடும் நடனம்—அதில் லக்ஷ்மியும் கலந்து கொள்வது கொஞ்சம் என்னவோ போலிருக்கிறது. பார்முலாவுக்காகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த ஆட்டமும் பாட்டமும் இல்லாதிருந்தால் ரொம்ப 'நீட்'டான படமாக இருக்கும்.

கதை வசனம் டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புகளையும் ஏற்றுச் செய்திருக்கும் கோபு பாராட்டுப் பெறத் தகுதியுடையவர். வசனங்கள் பல இடங்களில் பளிச்சிடுகிறது. வண்ணப்படப் படப்பிடிப்பு குறைகூறும்படி இல்லை. தைரியலக்ஷ்மியைத் தைரியமாகக் குடும்பத்தோடு போய்ப் பார்க்கலாம்.

- கௌசிகன்





# நான் கண்ட ரஷ்யா

## அகிலன்

மருத்துவ வசதிகள் மிகுந்து, நூறாண்டு காலம் வாழும் பல முதியவர்கள் நிறைந்த நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்திருப்பதும் அதன் தீவிரமான பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு காரணம். கிறிஸ்தவர்கள் யூதர்கள், முஸ்லிம்கள் எனப் பல சமயத்தவர் அங்கு வாழ்ந்தாலும், நகரங்களில் வசிக்கும் அனைவருமே அளவான குடும்பங்களில் நாட்டம் செலுத்துகிறார்கள்.

கைக்குழந்தைகளைச் சில குடும்பங்களில் பெற்றோர் கவனித்துக் கொள்வதுண்டு. பல குடும்பத்துப் பெண்கள் வேலைக்குச் செல்லும்போது அவரவர் வீட்டுக்கருகிலோ -அல்லது தொழிற்சாலையிலேயே உள்ள பாலர் இல்லங்களில் விட்டுச் சென்று, பிறகு வீடு திரும்பும்போது எடுத்து வருகிறார்கள். பாலர் இல்லங்களில் மிகவும் கவனத்தோடு தாதியர்களால் குழந்தைகள் பராமரிக்கப் படுகின்றன. இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை குழந்தைகள் பள்ளி, பின்னர் ஐந்து வயது முதல் பதின்மூன்று வயதுவரை தொடக்க — உயர்நிலைப் பள்ளி என்று கல்வி கற்க அனுப்பப்படுகிறார்கள். பதின்மூன்று வயது வரை கட்டாயக் கல்வி முடிந்தால், ஆண்களுக்கு மட்டும் இரண்டு ஆண்டுகளுக்கு ராணுவப் பயிற்சி உண்டு. அதை அடுத்து அவரவர்க்கு உரிய மேற் கல்விக்குச் செல்லலாம். அல்லது வேலையில் , சேர்ந்து பொருளீட்டலாம். வேலைக்குச் சென்ற பிறகும் மாலை நேரக் கல்லூரிகளில் மேற்படிப்பைத் தொடரலாம்.

திருமணப் பிரிவினைக்கும் சட்டம் இடமளிக்கிறது. விவாக ரத்துக் கோரும் தம்பதியர்க்கும் உடனடியாக அதை அளித்து விடுவதில்லை. கோபதாபங்கள் நீங்கி, அவர்கள் கூடி வாழ்வதை ஊக்கப்படுத்த முயல்வார்கள். அது இயலாதபோது அவர்கள் பிரிந்து வாழச் சட்டம் அனுமதியளிக்கிறது. மற்ற மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது ரஷ்யாவில் விவாக ரத்துக்கள் குறைவுதான்.

### பெண்களுக்கு மதிப்பு

காசு பணத்துக்காக, வயிற்றுப் பிழைப்புக்காக, ஆடம்பர வாழ்க்கைக்காக அங்கு பெண்கள் தங்கள் உடலை விற்று வாழும் நிலையில் இல்லை. உலகத்தின் மிகவும் புராதனத் தொழிலான விபசாரம் அங்கு அறவே தடை செய்யப்பட்டிருக்கிறது. விபச்சாரத்துக்கான ஓட்டல்கள், இரவு விடுதிகள், களியாட்டக் கூடங்கள் அங்கு கிடையா.

ஒருசில ஐரோப்பிய நாடுகளிலும், ஏன் அமெரிக்காவிலும் கூட, பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் பெண்களை எந்த வழி

✖ கூட்டுறவுப் பண்ணையில் ஓய்வு நேரத்தில் முதியோர்

களிலும் பயன்படுத்தப் பல நிறுவனங்கள் தவறுவதில்லை. அரை நிர்வாண — முழு நிர்வாணக் கோலங்களில் பெண்களைப் பரிமாறச் சொல்லும் ஓட்டல்கள், ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்தரங்கத்தில் நடக்கும் விவகாரங்களை யெல்லாம் அரங்குகளிலும் திரைகளிலும் காட்டும் கோலங்கள், கற்பனை செய்தும் பார்க்க முடியாத அநாகரிகச் செயல்களுக்கு அரங்குகளில் பெண்களைப் பயன்படுத்திக் காசு சேர்க்கும் வித்தைகள் இவ்வளவும் உலகின் பல பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

இவை போதாவென்று புத்தகங்களில், திரைப் படங்களில், பத்திரிகைகளில் புகைப் படங்களில் இவை தீவிரமாகப் பரப்பப் படுகின்றன. அடிப்படை நோக்கம் குறுக்கு

அன்பிலும், அரவணைப்பிலும் பாசத்திலும் பாதுகாப்பிலும் வளர வேண்டிய குழந்தைகள், இவை யனைத்தும் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால், பிரச்னைக்குரியவர்களாக வளர்ந்து வருகிறார்கள். மது, அபின், கஞ்சா என்றெல்லாம் போதைப் பொருள்களிலும் சதை வெறிக் களியாட்டங்களிலும் மூழ்கி, ஹிப்பி நாகரிகத்தின் நாற்றங்கால்களாகி விட்டார்கள். தலைமுறை இடைவெளி என்ற பிரச்னை இப்போது வெகு வேகமாகத் தலைதூக்கி வருகிறது.

இவற்றை யெல்லாம் கண்டு விழிப்புற்ற சோவியத் நாடு தனது மக்களின் குடும்ப வாழ்வைக் கட்டிப் பாதுகாக்கத் தன்னால் இயன்ற முயற்சிகளை யெல்லாம் செய்து வருகிறது. கஞ்சா அபின் போன்ற போதைப்

✖ தாத்தாவின் இசையில் மகிழும் பேத்தி



✖ மகிழ்ச்சியான குடும்பம்




வழியில் காசு சேர்க்கும் பேராசையும் அதற்குப் பல நாடுகளில் உள்ள வாய்ப்புக்களும் தான். இவற்றின் காரணமாக, புற வாழ்வில் பொருள் தேடி ஆடம்பரமாக வாழும் அந்த நாட்டு மக்கள் அக வாழ்வில் அளப்பரிய நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர்.

குடும்பம் என்ற சமுதாய அமைப்பின் ஆணி வேர் மேலை நாடுகளிலெல்லாம் இன்று ஆட்டம் கண்டு வருகிறது. பெண்களும் ஆண்களும் குடும்பப் பொறுப்பையும் குழந்தை வளர்ப்பையும் கண்டு அஞ்சத் தலைப்பட்டு விட்டார்கள். ஒருவருக்காக ஒருவர் உழைத்து, விட்டுக் கொடுப்பது, தியாகம் செய்வது, பொறுப்பேற்பது என்ற மனிதப் பண்புகள் எல்லாம் சிறிது சிறிதாக அருகி வருகின்றன. பெற்றோரின்

## ரஷ்யச் சிரிப்பு!



பொருள்களை மட்டுமல்லாமல், ஆபாசப் பத்திரிகைகள், புத்தகங்கள், புகைப்படங்கள் போன்றவற்றையும் யாரும் அந்த நாட்டுக்குள் கொண்டு வரக் கூடாது என்று சட்டம் இயற்றியிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகளாக வருவோர் இது பற்றி முன்னதாகவே எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். சுங்க இலாகாவும் இதில் விழிப்போடு இருக்கிறது. உலக நாடுகளுக்கு அது தன் கதவுகளைத் திறந்து விட்டு, வெளி நாட்டுப் பயணிகளின் கூட்டத்தைப் பெருந்திரளாக வரவேற்றாலும், பிற நாடுகளின் ஆபாசக் குப்பைகள் உள்ளே புகுந்துவிடாதபடி சோவியத் நாடு மிகவும் விழிப்போடிருந்து வருகிறது.



கண்ணன்:- ஆச்சர்யமா இருக்கே. இந்தத் தென்ன மரத்தில் வாழை குலை போட்டிருக்கே.

முரளி:- இதில் என்ன ஆச்சர்யம். இது அரசியல்வாதி வீட்டு மரமாச்சே. எதுவும் காய்க்கும்.

- லலிதா செல்லப்பா

திருமணத்தை நோக்கமாகக் கொண்ட களவொழுக்கமும் திருமணத்துக்குப் பின் கற்பொழுக்கமும் அங்கு பேணப்படுகின்றன. பூங்காக்கள், கடற்கரைகள், மரச் சோலைகள் கொண்ட சாலைகள் போன்ற இடங்களிலெல்லாம் காதலர்கள், கணவன் மனைவியர், குழந்தைகளையும் பெற்றோர்களையும் கொண்ட குடும்பத்தார் ஆகியோர் குதூகலத்துடன் பேசிப் பொழுது போக்குவதைக் கண்டேன். ஒரு ரஷ்ய நண்பர் வீட்டு விருந்துக்கும் சென்றிருந்தேன். ரஷ்ய மொழியில் ராமாயண நாடகத்தைப் பார்த்துவிட்டு, "நாங்கள் வீண் மனஸ்தாபங்களால் விவாகரத்துக் கோராமல், சீதையைப் போல் கடைசி வரை கணவனோடு வாழ விரும்புகிறோம்" என்று கடிதங்கள் எழுதிய பல குடும்பப் பெண்களைப் பற்றியும் கேள்வியுற்றேன்.

ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கை அங்கு சமத்துவத்துடனும் ஆரோக்கியமாகவும் விளங்குகிறது. மக்கள் தொகையில் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருப்பது ஒரு பிரச்னைதான் என்றாலும், அதையும் அவர்கள் நீக்குப் போக்குடன் சமாளித்து வருகிறார்கள். திருமணம் செய்து கொள்ளாத பெண்களுக்குக் குழந்தை பிறந்து விட்டால் அக் குழந்தைக்கும் தாய்க்கும் சமூகத்திலும் சட்டத்திலும் முழு அங்கீகாரம் உண்டு. மதிப்பும் உண்டு. யாரும் அங்கு அவர்களைத் தாழ்வாக நினைப்பதில்லை; ஒதுக்குவதும் இல்லை.

வயது முதிர்ந்தவர்கள் அனைவரும் அங்கு அரசு அளிக்கும் ஓய்வு கால ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு நெடு நாள் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். நூறு வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் பலரை நாம் ரஷ்யாவில் காணலாம். ஒருசிலர் மட்டும் தங்கள் குழந்தைகளோடு சேர்ந்து வாழ்கிறார்கள். மற்றவர்கள் தனியே வாழ்கிறார்கள். அவ்வப்போது பெற்றோரின் குடும்பத்தைக் காணவும் அவர்களோடு சில நாள் தங்கியிருக்கவும் குழந்தைகள் செல்வதுண்டு. அவ்வாறே பெற்றோரும் வந்து குழந்தைகள் வீட்டில் சில நாட்கள் தங்கிச் செல்வதும் உண்டு. ஒவ்வொருவருக்கும் அங்கே பொருளாதாரப் பாதுகாப்புக் கடைசி மூச்சு வரையில் இருந்தாலும், அதனால் குடும்ப பாசமும், உறவு முறைகளும் துண்டிக்கப்படவில்லை.

கூட்டுக் குடும்பம் என்னும் மிகப் பெரிய குடும்ப அமைப்பு இன்னும் நம் நாட்டில் சில பகுதிகளில் காணப்படுகிறது. இந்தக் கூட்டுக் குடும்பம் — பலவகை உற்றார் உறவினர்களையும் கொண்ட கூட்டுக் குடும்பம்— அங்கே இல்லை. ஆனால் சிறிய குடும்பம் எனும் சமூக அமைப்பு அங்கே பெரும் அளவில் கட்டுக் குலையாமல் அப்படியே இருக்கிறது. விவாகரத்துச் செய்து கொண்ட ஒருசில ஆண்களும் ஒருசில பெண்களும் இடைக் காலத்தில் தனித் தனியே தம் பெற்றோருடன் வாழ்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு தான்.

பல மேலை நாடுகளில் இன்றுள்ள குடும்ப உறவு முறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, சோவியத் நாட்டின் குடும்ப உறவு முறை மிகவும் மேம்பாட்டுடன் விளங்குகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. கூட்டுக் குடும்ப முறையை இன்னும் கை விடாத கீழ் நாடுகளைப் போலவும் இல்லாமல், 'குடும்பம் தேவைதானா?' எனக் கேள்வி எழுப்பும் சில மேல் நாடுகளைப் போலவும் இல்லாமல், இரண்டிலும் உள்ள சிறந்த அம்சங்களை ஏற்றுக் கொண்டு இயங்கி வருகிறது சோவியத் மக்களின் குடும்ப வாழ்க்கை.

(தொடரும்)



# பூக்குழி

## லக்ஷ்மி

### 6

ஆபிஸிலிருந்து வெளியே வந்தான் ராஜ்குமார். மாலை பொழுதாகியும் இன்னமும் வெய்யிலின் கடுமை தணிந்த பாடில்லை. வியர்வையில் பிசுபிசுத்த சபாரியைக் களைந்து விட்டு உடனடியாக வேறு உடுத்திக் கொண்டால் தேவலை போன்றதொரு தவிப்பு. அந்த நிர்வாகத்தின் கார்களை நிறுத்துமிடத்தில் காலையிலிருந்து நின்று கொண்டிருந்த தனது ஆட்டோமேடிக் டாட்சனில் வந்து ஏறிக்கொண்டான். எத்தனையோ முறை அவன் நினைத்துக் கொண்டதுண்டு. இப்படிப்பட்ட தொரு காரில் அகல்யாவை ஏற்றிக் கொண்டு சேலம் வரை போய் வந்தால்?... அவனது ஆசையைக் கடிதத்திலும் எழுதிவிட்டிருந்தான். ஆனால் அவளிடமிருந்து வந்த பதில்?

''நம்ம வீட்டுக் காங்கேயத்துக் காளை மாட்டுவண்டியில்சேலம்போகும் நெடுஞ்சாலை வரை உங்களுடன் சவாரி போய் விட்டு வந்தாலே எனக்குப் போதும். கன்கார்டு விமானத்திலே உலகத்தையே சுற்றி வந்த ஆனந்தம் அதில் அடங்கி யிருக்கும். அத்தான்? எதற்காக இப்படி அங்கலாய்க்கிறீங்க? சீக்கிரம் ஊர் வந்து சேரும் வழியைப் பாருங்கள்!''

ஆரம்பத்தில் இடது கை ஸ்டீயரிங் வண்டியை ஓட்ட அவனுக்குப் புதுமையாகத் தானிருந்தது. வண்டி வாங்கிய கையுடன் அங்கே அதை ஓட்ட மறுபடியும் அவன் லைசென்ஸ் எடுக்க வேண்டி யிருந்தது. அதற்கெல்லாம் அவன் சளைக்கவில்லை. ஆனால் நீடித்து இனியும் தனியாக அங்கே தங்கி வாழ முடியாது என்றவரை கொஞ்ச காலமாக அவன் மனம் உளைந்து கொண்டிருந்தது உண்மையே.

கழிநீர்க் குழாய் பதிப்பதில் ஈடுபட்டிருக்கும் ஒரு பிரபலமான பொறி இயல் நிறுவனத்தில்தான் அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல சம்பளம். ஆபீசுக்குச் சிறிது தொலைவிலிருந்த குடியிருப்புப் பகுதி ஒன்றில் ஓர் அராபியர் வீட்டு மாடி அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். வண்டியை நிறுத்திவிட்டு மாடிப் படிகளில் விரைந்து கதவைத் திறந்தான். எல்லா வசதிகளையும் கொண்டதொரு சிறிய ஃப்ளாட் அது. உள்ளே இருந்த குளிர் சாதன அமைப்பு குளிரக் குளிர அவனை வரவேற்றது. அப்பாடா என்று தன்னையும் மீறி ஒரு பெருமூச்சு விட்டான். கதவைத் தாளிட்டுக் கொண்டு முதல் காரியமாகக் குளிக்கச் சோப்பும் துவாலையுமாகப் புறப்பட்டான்.

அருவி போல் குழாய் கொட்டிய நீரைக் கையில் ஏந்தி என்னவோ யோசனையுடன் வாயில் ஊற்றிக் கொண்டவன் தூ... தூ என்று துப்பி விட்டான். இருபத்து நான்கு மணி நேரமும் தங்கு தடையின்றிக் குழாய், சுத்தப்படுத்திய கடல் நீரைக் கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் காவிரித் தண்ணீரின் ருசி அதில் இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சைப் பிசையவே... தாயகத்தின் நினைவு உள்ளத்தைக் குடைந்தது. தாயும் மனைவியும் சிந்தனையை வியாபித்துக் கொண்டனர்.

இன்னும் சில மாதங்கள்தான் இருந்தன. வேலையின் ஒப்பந்த காலம் முடிந்ததும் அடுத்த விமானத்தில் ஊருக்குப் பறந்து விட மாட்டோமா என்றதொரு தவிப்பு அவனுக்குள். நாளுக்கு நாள் அது புழுவாக மனத்தை அரித்துக் கொண்டிருந்தது.

துவாலையால் உடலைத் துடைத்துக் கொண்டு அதை இடையில் அணிந்தபடி படுக்கை அறைக்குள் புகுந்தான். அலமாரியில் தொங்கிய சுத்தமான உடைகளில் ஒரு பாண்டையும் ஷர்ட்டையும் எடுத்து அணிந்து கொண்டான். தாகம் நாக்கை வரட்டியது. குளிர் சாதனப் பெட்டியைத் திறந்து தண்ணீர் பாட்டிலைக் கையில் எடுத்த போதுதான் கவனித்தான். குடி நீர் மீதி ஒரே ஒரு பாட்டில்தான் இருந்தது. மடமடவென்று கையிலிருந்த பாட்டில் தண்ணீரையும் குடித்து விட்டு அலுப்புடன் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்து கொண்டான்.

வீட்டைச் சுத்தப்படுத்துவதிலிருந்து படுக்கையைத் தட்டிப் போடுவது, காப்பி போடுவது, குடிநீர் வாங்கிச் சேமித்து வைத்துக்கொள்வதுவரை எல்லாம் அவனே செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம். வெளியே வேலையும் செய்துவிட்டு வீட்டிலும் வந்து பாடுபட்டுக் குடிக்கத் தண்ணீரைத் தேடிக் கொண்டு பிளாஸ்டிக் கான்களுடன் ஓடவேண்டிய கட்டாயம் அவனுக்குத் தேவையில்லைதான். தானகத் தேடிக் கொண்ட தண்டனை!

இப்படித்தான் ஒருநாள் அவன் மனம் புழுங்கிப் போயிருந்தபோது குடிநீர் கொண்டு வர பிளாஸ்டிக் கானுடன் புறப்பட்டான். ஏதாவது செய்து கொண்டிருந்தால் ஊர் நினைப்பு உள்ளத்தை வருத்தாது என்ற எண்ணம். கம்பெனி மூலமாகத் தபால் பெட்டி எண்ணுக்குத்தான் அவனுக்குக் கடிதங்கள் வருவது வழக்கம். அன்று பகல் வந்த கடிதங்களில் அகல்யாவிடமிருந்து பதிலைக் காணவில்லை.

அம்மாவுக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது? அகல்யாவுக்கு இது பற்றிக் கடிதம் எழுதுவதை விடத் தலை கொண்டு போகிற வேலை என்ன இருக்கும்? கோபமும் தாபமுமாக அவன் சிறிது நேரம் ஆபீஸின்று கிளம்ப மனமின்றிச் சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவளது கடிதம் வந்து பல நாட்களாகி விட்டன என்று நினைக்க நினைக்க ஊர் நினைப்பு நெஞ்சை இறுக்கியது. ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டு வாய் விட்டு அழவேண்டும்போன்றதொரு இனம் விளங்காத் தாபத்துடன் தான் வரும் வழியில் குடிநீர் வாங்க காரை வாட்டர் பியூரிஃபிகேஷன் சென்டர் அருகே நிறுத்தி டிக்கியிலிருந்த கான்களை எடுத்து இரண்டு கான்கள் நிறையக் குடி நீரை வாங்கி நிரப்பிக் கொண்டான். சட்டைப்பைக்குள் பர்சைப் பத்திரமாக வைத்துக் கொண்டு நின்றபோதுதான் யாரோ தோளைத் தொடுவதாக உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான்.

''ஹாய் நியா! என்று முதுகில் செல்லமாகத் தட்டிய அந்த அமெரிக்க இளைஞனை அவன் முன் பின் பார்த்ததில்லை. வியப்புடன் அவன் எதுவும் பேசுமுன் அந்த வாலிபன் அவனைப் பார்த்து முறுவலித்தான்.


''அவசரம். பிறகு பார்க்கிறேன். மார்க்கரட் காரில் காத்திருக்கிறாள்.'' என்றபடி குடிநீர் கொண்ட கான்களுடன் வேகமாக அப்பால் நகர்ந்து விட்டான்.

''மிஸ்டர்!....'' என்று அவனைக் கூவி அழைத்துப் பேச வேண்டும் என்ற ஆவலுடன் ராஜ்குமார் வாயைத் திறக்கு முன் அந்த வாலிபனின் கார் நகர்ந்து விட்டது.

வீட்டுக்கு வந்த அன்று அவனுக்கு வெகு நேரம் ஒரே குழப்பம்.

'யார் அந்த அமெரிக்க வாலிபன்? அறிமுகமில்லாதவன், தெரிந்தவன் போல் தோளைத் தட்டி நியா என்றானே.... ஏன்?....'

வெகு நேரம் குழம்பிக் கொண்டு உட்கார்ந்தவனுக்கு அகல்யா மீது திடீரென்று எரிச்சல் பொங்கிக் கொண்டு வந்தது. நாயர் ஹோட்டலுக்குச் சாப்பிடப் போகு முன் கட்டாயம் அவளுக்கு ஒரு கடிதம் எழுதி விட்டுத்தான் மறு வேலை. மேஜையருகே



உட்கார்ந்தான் கோபத்துடன்: அவசரமாக விடுவிடுவென்று தலையை நிமிர்த்தாது எழுதி முடித்தான். ஒரு முறை படித்துப் பார்த்தான்.

''தனியாக ஒரு மனிதன் வெளியூரில் சோற்றுக்கும் தண்ணீருக்கும் எப்படித் தவிக்கிறேனே என்ற நினைவுகூடவா உன் நெஞ்சிலிருந்து மறைந்து விட்டது? கடிதம் எழுத அத்தனை சோம்பலா? அசட்டையா? இல்லை நிற்க நேரமில்லாது அத்தனை வேலையா? உன்னிடமிருந்து கடிதம் வரும் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்து ஏமாந்து அம்மாவை நினைத்துக் கொண்டு நான் படும் கவலை சொல்லத் தரமன்று. இப்படி என்னைச் சித்திரவதை செய்து வேடிக்கை பார்க்க உனக்கு நான் இழைத்துவிட்ட கொடுமைதான் என்ன? விளக்கமாகச் சொல்லிவிடு''... வார்த்தைகள் பச்சை மிளகாயாக எரித்தன.

கடிதத்தை மடித்து உறைக்குள் போட்டு முகவரியை எழுதித் தன் சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டான், மறு நாள் தபாலில் அதைச் சேர்த்துவிட வேண்டுமென்ற தீர்மானம்.



மணமாவின் கடைத் தெருப் பகுதியிலிருந்த ஒரு சிறிய சந்துக்குள்தான் சிவசங்கர நாயரின் ஹோட்டல் இருந்தது. இரவு உணவுக்காக அவன் அடிக்கடி அங்கேதான் செல்வது வழக்கம். அன்று நாயரின் ஹோட்டலில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. காத்து நிற்க நேரமின்றி அவன் அதே சந்தில் சில கடைகளுக்கு அப்பாலிருந்த இன்னொரு கேரள ஹோட்டலுக்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் பையன் ஒரு பீங்கான் தட்டில் சாதம் வைத்து மீன் குழம்பை அதன் மேல் வார்த்து எடுத்துக் கொண்டு விரைந்து வந்து மேஜை மீது வைத்தான்.

''நான் சைவ உணவுக்காரன். – இதெல்லாம் சாப்பிடுவதில்லை'' மறுத்தபடி தட்டை அவன் நகர்த்தியபோது பையன் உரக்கச் சிரித்து விட்டான்.

''ஸார், இங்கே சாப்பிட வரும்போதெல்லாம் மீன் குழம்பை ஒரு கை பார்த்துவிட்டு போறது ஞாபகம் வந்தது. அதனால்'' என்று கூறிவிட்டுத் தட்டை உள்ளே எடுத்துச் சென்றான்.

''ஸாருக்கு ஏதேனும் விரதமோ?'' கேட்டுக்கொண்டே இன்னொரு தட்டில் சாதமும் அதன் மீது பருப்பு சாம்பாரும் ஒரு பப்படமும் ஒரு கோப்பையில் ரசமும் எடுத்துக் கொண்டு வந்து வைத்தான்,

பிறந்ததிலிருந்தே ராஜ்குமார் உணவு விஷயத்தில் சுத்த சைவம். மீன் குழம்பு சாப்பிட்டதாக இந்தப் பையன் உளறுகிறானே ஏன்?.... மறுபடியும் அவனுக்குக் குழப்பம்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து படுத்த அவனுக்கு வெகு நேரம் உறக்கம் வரவேயில்லை.

மறுநாள் தபாலில் அகல்யாவின் கடிதம் பளிச்சென்று முதலாவதாக அவன் கண்களில் பட்டது. பரபரப்புடன் பிரித்தான்.

அகல்யாவும் அதே கேள்வியைத்தான் கேட்டிருந்தாள். 'உங்களிடமிருந்து கடிதங்கள் தாமதமாக வருகின்றனவே ஏன்? வேலை அதிகமாகி விட்டதா அல்லது உடம்புக்கு சுகமில்லையா? உங்கள் கடிதத்தைக் காணு விட்டால் மனத்தில் எத்தனையோ கவலைகள் ஏற்பட்டுவிடுகின்றன. அந்த ஊர் வெய்யிலில் அடிக்கடி அலைய வேண்டாம் என்று அத்தை எழுதச் சொன்னார்கள். நேற்றுக் காலை பலகாரம் சாப்பிடும்போது அத்தை குலுங்கி அழுதுவிட்டார்கள். அவர்களுக்கு மிகவும் பிடிக்குமே என்று இடியாப்பம்செய்து சிறிதளவு மட்டும் பரிமாறியிருந்தேன். கொஞ்சம் பிட்டு வாய்க்குள் போட்டுக் கொள்வதற்குள் கரகரவென்று அவர்கள் கண்களில் நீர் புரண்டு விட்டது. 'என் மகனுக்கு இடியாப்பம்னு உசிராச்சே... அந்த ஊரிலே யார் இப்படிச் செய்து அருமையாச் சாப்பிட உபசரிக்கப் போறாங்க...?' என்று தழுதழுத்தார்கள். அவர்களைச் சமாதானப் படுத்த ரொம்பப் பிரயாசையாகி விட்டது. என் நெஞ்சே வெடித்துவிடும் போன்று எனக்குத் துக்கமாகத்தான் இருந்தது. காசிக்குப் போனவர்கள் தங்களுக்குப் பிடித்த பொருள்களில் எதையாவது ஒதுக்கிவிடுவாங்களாமே அது போல் நீங்க வரும்வரை உங்களுக்குப் பிடித்தமான உணவு வகைகளை நானும் ஒதுக்கி விட்டிருக்கிறேன். நீங்க வீடு வந்து சேர்ந்ததும் உங்களுக்குச் சமைத்துப்போட்டு உபசரித்து விட்டுத்தான் அவைகளை நான் சாப்பிட வேண்டும் என்றதொரு விரதம்! அதனால் நான் இடியாப்பத்தைக் கையால் கூடத் தொடவில்லை. ஆமாம் நீங்கள் எப்பொழுது வருவதாக உத்தேசம்? உங்களிடமிருந்து கடிதம் வராவிட்டால் என் உயிரே போய்விட்டது போன்ற ஒரு பிரமை. உணர்வுகள் தொய்ந்து நான் துவண்டு போய் விடுகிறேன். இந்த நிலையில் நோயாளியாக உள்ள அத்தையை நான் எப்படிச் சமாதானப்படுத்த முடியும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்....''



''உடைந்த பொம்மை எககால் தலைகளை என்னடா செய்யலாம்?''

'கலகம் செய்த மக்களைப் போலீஸார், அடித்து விரட்டிய பிறகு உள்ள காட்சி' என்று ஒரு போர்டு எழுதி வச்சுடலாம்.''

—சுதர்ஸன்

நெஞ்சம் நெகிழ்ந்து போய் விட்டான் ராஜ்குமார். சட்டைப் பையிலிருந்த தன் கடிதத்தை எடுத்துச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு இடைவேளையின் போது அமைதியாக உட்கார்ந்து வேறு ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்த்தான்.

அகல்யா அவன் மீது உயிரையே வைத்துக்கொண்டிருக்கும் ஒரு நல்ல மனைவி. அவளை வார்த்தைகளால் மனம் நோகச் செய்வது எத்தனை பெரிய தவறு... தன்னுள்ளே எண்ணி மருகிப் போனான்.

அவளைப் பற்றிய இனிய நினைவுகள் நெஞ்சை நிறைக்க — அவளுக்கு ஏதாவது வாங்கி ஊருக்கு அனுப்ப எண்ணியவனாகச் சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை கடைத் தெருப் பகுதிக்கு வந்திருந்தான். ஸூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து தேவையான சாமான்களைப் பார்த்து வாங்கிக் கொண்டிருந்தபோது 'காமேஷ்....' என்று கூப்பிட்ட குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாமான்கள் நிறைந்த பிளாஸ்டிக் பையுடன் ஒரு பஞ்சாபிக்காரர் அவன் அருகே வந்தார்.

''நீங்கள் தவறாக எண்ணிக் கொண்டு விட்டீர்கள். நான் காமேஷ் இல்லை.'' புன்முறுவலித்தான் ராஜ்குமார்.

வியப்பில் அயர்ந்து போன அவர் நம்பாதவர் போல் அவனை மேலும் கீழும் வெறித்துப் பார்த்தார். ''மன்னிக்கவும்'' என்று முணு முணுத்து வேகமாக அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

'காமேஷ்! யார் அவன்?' தனக்குள்ளே கேட்டுக் கொண்டு அலங்காரப் பொருட்கள் இருந்த பகுதிக்கு விரைந்தான். அங்கே இருந்த ஒரு பெரிய நிலைக்கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். பின்னால் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. திரும்ப நினைத்தான். திடுக்கிட்டுக் கண்ணாடியையே உற்றுப் பார்த்தான். அவன் அருகே பக்கத்தில் நின்ற அந்த நீலச் சட்டை ஆசாமி தோற்றத்தில் அவனைப் போலவே அச்சடித்து எடுத்த உருவமாகக் கண்ணாடியில் தெரிவதைக் கண்டு அதிர்ந்துபோய் விட்டான் ராஜ்.

கண்ணாடியில் தெரிந்த அந்த உருவம் மெல்லச் சிரித்தது.

"நீங்கதான் அந்த ராஜ்குமாரா?" குரல் கூட டேப் ரிகார்டரில் பதிவான அவன் குரலைத் திருப்பிக் கேட்பது போல்... இது என்ன அதிசயம்?

ராஜ்குமார் ஆமாம் என்று தலையசைத்துவிட்டு ஆச்சரியத்துடன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"நம்ப முடியலே. என்னையே நான் கண்ணாடிக்குள் பார்ப்பது போல இருக்கே... அதனால் சில நாட்களாக என்னை, உங்களுக்குத் தெரிஞ்சவங்க ராஜ் குமார்னு கூப்பிட்டு குழம்பிட்டு இருக்காங்க" நீலச் சட்டைக்காரன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பின் ஒலிகூட அவனுடைய சிரிப்பைப் போல கலகல வென்ற ஓசையுடன் இருந்ததைக் காண ராஜ்குமாருக்கு ஒரே பிரமிப்பு.

"என் பெயர் காமேஸ்வரன் – காமேஷ் என்று சுருக்கமா வைச்சிட்டிருக்கேன்." அறிமுகப்படுத்திக் கொண்டான் அவன்.

"என் பெயர் ராஜ் குமார். உங்களைச் சந்தித்தது பற்றி மிகவும் சந்தோஷம். அதே சமயம் எனக்கு ரொம்பவும் ஆச்சரியமாகவும் இருக்கு...." கூறிக் கொண்டே காமேஷின் கையைப் பற்றி அன்புடன் குலுக்கினான் ராஜ் குமார்.

"இந்தச் சின்ன இடத்தில் நாம் இதுவரை சந்தித்துக் கொள்ளாதது தான் பெரிய ஆச்சரியம். உலகம் ரொம்பச் சின்னதுன்னு சொல்வாங்க. சில சமயம் சின்ன இடம் கூடப் பெரிய உலகமாகிவிடுகிறதும் உண்டு போல இருக்கு...." வேடிக்கையாகச் சிரித்தான் காமேஷ்.

ராஜ்குமாருக்கு எடுத்த எடுப்பிலேயே அவனை மிகவும் பிடித்து விட்டது.

இடைரென்று நினைவுகள் கலந்து எழுந்திருந்தான் ராஜ். தொலைபேசி எண்ணைச் சுழற்றினான். 'காமேஷ்! நான் வருகிறேன். நீ தயாராக இரு. இருவரும் நாயர் ஹோட்டலில் சாப்பிடுவோம். பிறகு என் ஃபிளாட்டிலேயே நீ டெலிவிஷன் பார்த்துக் கொண்டு என்னோடு இன்று இரவு தங்கிவிடு. நாளை நமக்கு லீவுதானே... என்ன சொல்றே... சரியா?... இதோ வரேன்." போனை வைத்துவிட்டு வெளியில் செல்ல ஆயத்தமானான்.

நடுக்கடலில் மூழ்கவிருக்கிறவனுக்கு ஒரு துரும்பு அகப்பட்டது போல் - தனிமையைத் தொலைக்கத் தவித்தவனுக்கு ஓர் இனிய நண்பன் கிடைத்து விட்டான் என்ற திருப்தி அவனுக்கு. கதவைப் பூட்டிக் கொண்டு கார் சாவியைச் சுழற்றியபடி படிகளில் இறங்கினான் ராஜ் குமார்.

(தொடரும்)



# ஈகோ



## உமாசந்திரன்

ஜகந்நாதனுடைய பென்ஸ் கார்சத்தமே இல்லாமல் மிதந்து வருவது போல் வந்து போர்ட்டிகோவில் நிற்பதை ஆபீஸில் உள்ளவர்கள் எப்படித்தான் உணர்ந்து கொள்வார்களோ! எம்.டி. வந்து விட்டார் என்ற செய்தி ஒரே நொடியில் பரவிவிடும். அனைவரும் கப்சிப். அவர் மிடுக்காக நடந்து தம்முடைய ஏ. ஸி. ரூமுக்குள் மறையும் வரை ஓர் ஊசி விழுந்தாலும் கேட்கக்கூடிய அளவுக்கு நிசப்தம் எங்கும் நிலவியிருக்கும்.

தம்முடைய எம்.டி. ஹோதாவுக்கு ஒவ்வொருவரும் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்ற பெருமைப் பூரிப்புடன், சொகுசான மிதவையில் மிதப்பது போன்ற சுக உணர்வைத் தரும் மெத்தென்ற ஃபோம் ரப்பர் சுழல் நாற்காலியில் அமர்ந்து, தம்மைத் தாமே வியந்து கொள்பவர் போல் நெஞ்சை நிமிர்த்திச் சாய்ந்தவாறு நாற்காலியை ஒருமுறை சுழல விட்டார் ஜகந்நாதன்.

இண்டர்காம் பஸ்ஸர் ஒலித்தது.

''எஸ்!''

''குட்மார்னிங் ஸார்! சாரங்கன் ஹியர். மே ஐ ஸீ யூ ஸார்? இப்ப வரலாமா?''

''மேக் இட் ஃபைவ் மினிட்ஸ் லேட்டர்.''

அந்த ஐந்து நிமிஷமும் ஜகந்நாதனுக்கு அப்படியொன்றும் அவசரமான வேலை எதுவும் இருக்கவில்லை. மேஜை தான் துப்புரவாயிருந்ததே. ஆனால் ஆபீஸ் மேனேஜர் சாரங்கன் 'வரலாமா' என்று கேட்ட மறுகணமே வரச் சொன்னால் 'சீப்பாக' நினைத்துவிட மாட்டானா? ஐந்து நிமிஷமாவது காக்க வைத்து பிறகு வரச் சொல்வதுதானே எம்.டி. மிடுக்குக்குப் பொருத்தமாயிருக்கும்!

மனதுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார் ஜகந்நாதன். ஐந்து நிமிஷத்தை எப்படிக் கழிப்பது? சும்மா ஈ ஓட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்! ஆனால் ஏ. ஸி. ரூமில் ஓட்டுவதற்கு ஈ ஏது? ஒரு கொசு கூட உள்ளே வர முடியாதே!

''யார் சொன்னது?'' என்று கேட்பது போல் ஒரு மெல்லிய ரீங்கார ஒலி கேட்டது. 'உம்ம உம்ம' என்று முனகுவது போன்ற அந்த ஒலி ஒரு மூலையிலிருந்து ஜகந்நாதன் பக்கமே நெருங்கி சுழன்று சுழன்று வந்தது. ஜகந்நாதன் திடுக்கிட்டு சுற்றுமுற்றும் பார்த்தார். ஈயேதான்! இந்த ஏ. ஸி. ரூமுக்குள் நுழைய என்ன துணிச்சல் அதற்கு? எப்படி வந்திருக்கும்? ஆபீஸ் பாய் ஜேம்ஸ்மேஜையை சுத்தம் செய்ய வந்த போது கதவைத் திறந்து வைத்திருந்தானோ! அது சாத்தியமில்லையே! தானாகவே மூடிக் கொள்ளும் கதவாயிற்றே!

ஜகந்நாதனைச் சுற்றிச் சுற்றிப் பறந்த களைப்பினாலோ என்னவோ அந்த ஈ அவர் எதிரிலேயே வந்து மேஜை மேல் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த புஷ்ப ஜாடியின் விளிம்பில் உட்கார்ந்து பின்னங் கால்களால் தனது சிறிய இறகுகளைக் கோதிவிட்டுக் கொண்டது. சாதாரண ஈயைவிடக் கொஞ்சம் பெரிய ஈ! மாட்டு ஈ ரகம். அந்த ரகத்திலேயே ஆந்தை ஈயாக இருக்க வேண்டும். மாட்டு ஈ இதை விடக் கூடப் பொடிதாக இருக்குமே!

இந்த ஈயை எப்படி விரட்டுவது?

ஜகந்நாதனுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டது போல் அந்த ஈ புஷ்ப ஜாடியை

---



காந்தியின் மூன்று குரங்கு பொம்மையைப் பார்த்திருப்பீர்கள். ரெண்டு கண்களை ரெண்டு கைகளாலும் மூடிக் கொண்டிருக்கிறது ஒரு குரங்கு. ரெண்டு காதுகளை ரெண்டு கைகளாலும் மூடிக் கொண்டிருக்கிறது ஒரு குரங்கு. மூன்றாவது குரங்கோ ஒரு வாயை ரெண்டு கைகளாலும் மூடிக் கொண்டிருக்கிறது. ரெண்டு கண், ரெண்டு காது இருப்பதால் அவற்றை ரெண்டு கைகளால் மூட வேண்டியது அவசியம்தான். ஆனால் ஒரு வாய்தானே இருக்கிறது? அதை ஒரு கையால் மூடினால் போதாதா? ஏன் ரெண்டு கைகளால் மூட வேண்டும்? காரணம் இதுதான்: வாய்க்கு ரெண்டு வேலைகள் உள்ளன. ஒன்று பேசுவது மற்றொன்று சாப்பிடுவது. கெட்டதைப் பேசாமல் இருப்பதோடு கெட்டதைச் சாப்பிடாமலும் இருக்க வேண்டும்.

(காஞ்சியில் நடைபெற்ற இந்து தமிழ்க் கவிஞர் மன்ற விழாவில் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சொல்லக் கேட்டவர்: கே. ஜானகி.)

விட்டுப் பறந்து அதை ஒரு சுற்று சுற்றிவிட்டுத் ஜகந்நாதனின் கைக்கெட்டினாற்போல் மேஜையின் மேல் வந்து உட்கார்ந்து கொண்டது. ஜகந்நாதன் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார். பேப்பர் கட்டரைக் கையில் எடுத்துக்கொண்டு அணுஅணுவாகக் கையை நகர்த்தி அதை அந்த ஈயின் பக்கம் கொண்டு போனார். நேராக ஈ உட்கார்ந்திருந்த இடத்துக்கு மேலே இரண்டங்குல இடைவெளியே இருக்கும் அளவுக்கு பேப்பர் கட்டரைப் பிடித்துக் கொண்டதும் சில கணங்கள் நிலைத்தார். கண் இமைப்பதற்குள் ஒரு போடு. ஈ பேப்பர் கட்டருக்கடியே நசுங்கியே தீர வேண்டும்!

பேப்பர் கட்டர் மேஜையின் கண்ணாடி 'டாப்'பில் படாரென்று மோதிய சத்தம்தான் பிரமாதமாயிருந்தது. ஈ எப்படியோ தப்பி விட்டது!

இந்த ஈக்கு என்ன துணிச்சல்! மறுபடியும் மேஜை மேலேயே அவருடைய கைக்கெட்டினாற்போல் வந்து உட்கார்ந்து விட்டதே! ஸைட் மாறியிருந்தது. அப்போது வலதுசாரி. இப்போது இடதுசாரி! ஜகந்நாதனுக்கு இடதுசாரி என்றாலே அலர்ஜி!


சட்டென்று ஜகந்நாதனுக்கு ஞாபகம் வந்தது. அன்றைய செய்தித்தாளை பிரீஃப் கேசுக்குள் போட்டு எடுத்து வந்திருந்தார். இதைவிடச் சிறந்த உபயோகம் அதற்கு வேறு என்ன இருக்க முடியும்? பக்குவமாக, சத்தம் செய்யாமல், பிரீஃப் கேஸைத் திறந்து நியூஸ் பேப்பரைக் கையில் எடுத்துக் கொள்ளச் சில நொடிகளே பிடித்தன ஜகந்நாதனுக்கு. நாலாக மடித்திருந்த பேப்பரை எட்டாக மடித்துக் கையில் பிடித்துக் கொண்டு முன் போலவே தமது தாக்குதல் முறையைக் கையாண்டார். மின்னல் வேகத்தில் அவர் தமது தாக்குதலை நடத்தியும் எதிரி நசுங்க மறுத்து விட்டான். வெற்றி ரீங்காரத்துடன் மேலே பறந்து மறைந்து விட்டான்.

சில கணங்களுக்குள்ளேயே மீண்டும் ரீங்கார ஒலி கேட்டதும் எதிர்த்தாக்குதலுக்குத் தயாரானார் ஜகந்நாதன். ஆனால் இந்தத் தடவை எதிரி தன் போர்த் தந்திரத்தை மாற்றிக் கொண்டு விட்டான். எதிரில் உட்கார்ந்து அவருக்குச் சவால் விடாமல், அவரைச் சுற்றிச் சுற்றிப் பறக்க ஆரம்பித்து விட்டான்! சுழற் நாற்காலியை வட்டமிட வைத்து, தேர்ந்த வாள் வீரன் போல் செய்தித்தாளை நாலாபக்கமும் வீசினார் ஜகந்நாதன். ஆனால் அந்தத் தாள்வீச்சுக்கு எதிரி சிறிதாவது பயந்தால்தானே? ஜகந்நாதனின் ஆவேசம் அதிகமாக ஆக எதிரியின் உற்சாகமும் அதிகமாகியது. விர்ரென்று உயரே ஏறிப் பறப்பதும், சர்ரென்று கீழ்நோக்கி டைவ் அடிப்பதுமாக எதிரி கையாண்ட பாய்ச்சல் தந்திரங்கள் ஜகந்நாதனைத் திணறச் செய்து விட்டன.

ஓய்ந்து போய் அவர் மேஜைப் பக்கமாகச் சாய்ந்த போது பஸ்ஸர் ஒலித்தது. சார்ங்கன் தான்!

''ஸாரி டு டிஸ்டர்ப் யூ ஸார். இப்ப வரலாமா?''

''நோ! ஐ ஆம் பிஸி! டு மினிட்ஸ் லேட்டர்!'' ஈவேட்டை ஆடியதால் கலைந்திருந்த தமது தோற்றத்தை அவர் சரிப்படுத்திக் கொண்டார்.



இரண்டு நிமிஷங்கள் பூர்த்தியாவதற்கே காத்திருந்தவன் போல் சாரங்கன் ஒரு கனத்த பைல் கட்டுடன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

"குட் மார்னிங் சார்!"

"குட் மார்னிங்" என்று உதடு அசையாமல் அமர்த்தலாகக் கூறிய ஜகந்நாதன், எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினார். சாரங்கன் நாற்காலி விளிம்பில் பட்டும்படாததுமாக உட்கார்ந்து கொண்டு பைல் கட்டை மேஜை மேல் வைத்தான்.

"எனி திங் அர்ஜண்ட்?"

"எஸ் ஸார். நம்முடைய கம்பெனி லைசென்ஸ் ரின்யுவலுக்கு இப்பவே அப்ளை செய்தாகணும்."

"ஓ காட். பெரிய தலைவேதனையாச்சே!"

"சம்பந்தப்பட்ட கரெஸ்பாண்டென்ஸ் எல்லாம் தேடி எடுத்து வச்சிருக்கேன் சார். பத்தே நிமிஷத்தில் பாத்து முடிச்சுடலாம்."

"ஓ.கே." — இதைக் கூறி முடிப்பதற்குள் தவிர்க்க முடியாத தும்மல் வந்தது அவருக்கு. அந்த க்ஷணமே அதிரும்படியாக ஒரு தும்மல் போட்டார்.

"கோல்டா சார்?"

"அதெல்லாம்ஒண்ணுமில்லே" - இதென்ன மறுபடியும் மூக்கு நுனியின் குறுகுறுப்பு! ஜகந்நாதனுக்குப் புரிந்து விட்டது! அந்தப் பொல்லாத ஈ இப்போது உட்கார்வதற்கு அவருடைய மூக்கு நுனியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது!

"சனியன்!" என்று தம்மையும் மீறிக் கையை வீசி அதை ஓட்டினார்.

"என்ன சார்" என்றான் சாரங்கன் திகைப்புடன்.

"உமக்கு ஒண்ணுமில்லே — எங்கே? பைலில் நான் பார்க்க வேண்டிய பேப்பர்கள்....."

ஆனால் ஈயின் ரீங்காரம் அவர் கவனத்தைத் திருப்பியது. திகிலுடன் ஒலி வந்த திசையில் பார்த்தார்: சுற்றிச் சுற்றி வந்து அவருடைய மூக்கு நுனியையே குறி வைத்தது அந்த ஈ!

"சார்! ஈ சார்!" என்றான் சாரங்கன்.

"தகவலுக்கு நன்றி!" என்றார் ஜகந்நாதன் நொடிப்பாக. மறுகணம் அவர் ரௌத்ராகாரமாக மாறினார். "நீரெல்லாம் ஆபீஸ் மானேஜரா இருந்து என்னய்யா பிரயோசனம்?" என்று கத்தினார் உக்ரமாக.

சாரங்கன் வெலவெலத்துப் போய் எழுந்து நின்றான்.

"ஏ. ஸி. ரூமுக்குள்ளே ஈயை விட்டுட்டு 'ஈ சார்'ன்னு இன்ஃபர்மேஷனு குடுக்கிறீர்? இதெல்லாம் கவனிக்க வேண்டியது யாரோட ட்யூட்டி. ஐயா?"

இந்தச் சண்டமாருதக் கோபத்துக்கெதிரே வாய் மூடி மௌனியாக இருப்பதே புத்திசாலித்தனம் என்று சாரங்கனுக்குத் தோன்றியது. குற்றவாளியைப் போல தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான்.

ஆனால் எம். டி.யின் ரௌத்ராகாரத்தைச் சிறிதும் சட்டை செய்யாமல் அந்தச் சின்னஞ்சிறு ஈ ரீங்கார நாதத்துடன் அவருடைய தலையைச் சுற்றிச் சுற்றி வந்து மறுபடியும் அவருடைய மூக்கு நுனியில் வந்து உட்கார்ந்தது.

உள்ளங்கையால் ஓங்கித் தமது மூக்கு மேலேயே ஒரு போடு போட்டுக் கொண்டார் ஜகந்நாதன். மூக்கு சிவந்ததுதான் மிச்சம். ஈ சிரித்துக் கொண்டே சிறகடித்துப் பறந்து மீண்டும் வட்டமிட ஆரம்பித்தது.

"என்னய்யா புது மாட்டுப்பெண் மாதிரி தலையைக் குனிஞ்சு நின்னுண்டிருக்கீர்! இந்த ஈயை விரட்ட என்ன வழி செய்யப் போறீர்?" மூக்கைப் பொத்திக் கொண்டு கேட்டார் ஜகந்நாதன்.

"என்ன சார் பிரமாதம்! இப்பவே ஒழிச்சிடறேன்!" என்று வீராப்புடன் கூறிய சாரங்கன், வாஷ்பேஸினுக்கு மேலே தொங்கிய டவலை உருவி அதைச் சுழற்றி முறுக்கிச் சாட்டை போல் கையில் பிடித்துக் கொண்டு ஈயைக் குறி வைக்கத் தயாரானான்.

---

## இன்றையச் சூழலில் இப்படியும் ஓர் அதிசயம்!



ஊர்வலம் நடக்கிறது; மறியல் செய்கிறார்கள்; கூட்டம் போடுகிறார்கள்; அனைத்துக்கட்சி தொழிற் சங்கத்தலைவர்களும் காரசாரமாகப் பேசுகிறார்கள்; பலர் உண்ணாவிரதம் கூட இருக்கிறார்கள்.

எதற்குத் தெரியுமா? மூர்ச்சை போட்டு விழாதீர்கள்! கம்பெனியின் ஜெனரல் மானேஜர் ராஜினாமா செய்யக் கூடாது; கொடுத்த ராஜினாமாவை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காகத்தான்!

இந்தியா செமண்ட்ஸ் ஜெனரல் மானேஜர் திரு கே. எஸ். ராமன் தமது சொந்தக் காரணங்களுக்காகவும் சில தவிர்க்க முடியாத காரணங்களாலும் தாம் ராஜினாமா செய்வதாக அறிவித்தார்!

அவ்வளவுதான் - இதற்கு ஒரே எதிர்ப்பு! இது அவரது சொந்தப் பிரச்னை மட்டுமல்ல. சிமெண்ட் ஆலையில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பப் பிரச்னை என்கின்றனர்.

தொழிலாளரின் இந்த அன்பு கண்டு நெகிழ்ந்த கே. எஸ். ராமன் தாம் தமது முடிவை மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கம்பெனியின் நிர்வாகக் குழுவின் முடிவை எதிர்நோக்கி இருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஆதாரம்: தினமலர்

ஜகந்நாதனை நோக்கி டைவ் அடித்த ஈ இப்போது அவருடைய நெற்றிப் பொட்டில் உட்கார்ந்ததும் அவர் வெறி பிடித்தவர்போல் கூச்சல் போட்டார்.

''அப்படியே இருங்க சார்'' என்று கூறிய சாரங்கன், கையில் பிடித்த டவல் சாட்டையுடன் அவரை நெருங்கினான்.

''ஏனய்யா, எம் மேலேயே அடிக்கப் போறீரா அதால?''

''ஈ பறக்கற போது அடிக்கறதை விட உக்கார்ந்திருக்கிற போது அடிச்சா குறி தப்பாது சார்!''

''சரிதான்! இதைச் சாக்கா வச்சுக்கிட்டு எம். டி.யை அடிச்சு நொறுக்கலாம்னு திட்டம் போடறீரா?''

சாரங்கன் முகத்தில் அசடு வழிந்தது. டவல் சாட்டை கையிலிருந்து வழுக்கி விழுந்தது.

''ஐ ஆம் சாரி சார். அந்த அடி உங்க மேல படும்கறது எனக்கு ஸ்ட்ரைக் ஆகலே!''

''எதுதான் ஸ்ட்ரைக் ஆகும் உமக்கு? நீர் என்ன செய்வீரோ எனக்குத் தெரியாது. முதல் வேலையா இந்த ஈயை ஒழிச்சாகணும்!''

''சார் ஒண்ணு செஞ்சா என்ன? ஃப்ளிட் கன்னை கொண்டு வரச் சொல்றேன். ஈ பறக்கற போது அதைக் குறி வச்சு ஃப்ளிட்டை அடிச்சா உடனே சுருண்டு விழுந்துடும் சார்!''

ஜகந்நாதன் நடுக்கத்துடன் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார்.

''ஃப்ளிட்டா! பேசக் கூடாது. அது எனக்கு அலர்ஜி. ஒரு மாசம் படுக்கையில் தள்ளிடும்!'' என்றார்.

இதற்குள் ஜேம்ஸின் கைங்கர்யத்தால் எம்.டி. உக்ரமான கோபத்துடன் இருக்கிறார் என்ற செய்தி அந்தக் காரியாலயம் நெடுகிலும் பரவியது. அப்பாவி சாரங்கன் அந்தக் கோபத்துக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறான் என்ற அனுதாபத்துடன் செக்யூரிடி ஆபீசர் உள்ள எல்லா நிலைகளிலும் உள்ள ஆபீசர்கள் எம். டி. யின் ரூமை நோக்கி விரைந்தனர்.

எம்.டி.யின் கோபத்தின் காரணத்தை அறிந்ததும் ஒவ்வொருவரும் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு அரும் பாடுபட்டனர். அவரவர்க்குத் தோன்றிய யோசனையைக் கூற ஆரம்பித்தனர். ஈயை அங்கிருந்து விரட்டுவதற்கான ஒரு போர்த் திட்டமே அங்கு உருவாகத் தொடங்கியது. ஆனால் அந்த ஈயோ நிறைய மனிதர்களைக் கண்டுவிட்ட குதூகலத்தில் ஒவ்வொருவர் மேலும் உட்கார்ந்து குதித்துக் குதித்துக் கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தது!

செக்யூரிட்டி ஆபீஸரின் யோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது கடைசியில். அதன்படி, ஈ ஒரேயடியாக ஒழிந்தது என்ற செய்தி வரும்வரை ஜகந்நாதன் வீட்டிலேயே இருக்கச் சம்மதித்தார். ஏ.ஸி. ரூமை நன்றாகத் திறந்து வைத்து நான்கு பெடஸ்டல்ஃபான்கள் அங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டன.

## தரித்திர நாராயன்



நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ் நாராயண் உடல் நலமின்றி மருத்துவமனைக்கு (All India Institute of Medical Sciences) வந்தபோது அவருக்குத் தரப்பட்ட மருந்துகளுக்கான ரொக்கமாக ரூ 25/- ஏழைகளுக்கான தர்மநிதியிலிருந்து பெறப்பட்டது. ராஜ் நாராயண் என்று சொல்லாமல் கற்பனையாக ஒரு பெயரை எழுதிப் பெறப்பட்டது. இது அநியாயம் என்று ஆட்சேபித்த குமாரி உட்தாயாவின் அதிகாரங்கள் பறிபோயின!

ஆதாரம் : ஹிந்துஸ்தான் டைம்ஸ்

---

உச்ச வேகத்தில் அந்த நான்கு ஃபான்களையும் இயக்கிவிட்டு நாள் முழுவதும் வைத்திருந்தால் சிறு புயற் காற்றே அந்த ரூமில் உருவாகி ஈயை வெளியே விரட்டி விடாதா என்ன?

மறுநாள் எல்லோரும் அங்கே கூடி, எதிர்பார்த்த பலன் கிடைத்து விட்டது என்று உறுதி செய்து கொண்டதும், ஏ. ஸி. யும் அதனை ஒட்டி குளிர்சாதன அமைப்பையும் இயக்கி வைத்தார்கள். எம். டி.க்கு இந்தச் சந்தோஷச் செய்தியைக் கூறும் பெருமையும் சாரங்கனுக்கே அளிக்கப்பட்டது.

''ஆல் க்ளியர் ஆயிடுத்து சார். ஈ தலை காட்ட முடியாதபடி ஏ.ஸி.யும் ரெடி இப்ப!''

புது வீட்டுக்குக் குடி வருவது போன்ற பெருமித மிடுக்குடன் ஜகந்நாதன் தமது ரூமுக்குள் சென்று மேஜை எதிரே வந்து அமர்ந்தார். அவருடைய பிரீஃப் கேஸை ஜேம்ஸ் பவ்யமாக உள்ளே கொண்டு வந்து வைத்து விட்டுப் போன பிறகு, அங்கு குதூகலத்துடன் சுழல் நாற்காலியை சக்கரவளையமாகச் சுழற்றினார். அது தானாக நிலைக்கு வந்ததும், தமக்கு ஏதாவது சொந்தக் கடிதம் வந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக மேஜை மீது பார்வையைச் செலுத்தினார்.

மறுகணம் மின்னலாய் தாக்குண்டது போன்ற அதிர்ச்சி அவருக்கு! அவர் கண்ணெதிரே பேன் ஹோல்டர் விளிம்பில் உட்கார்ந்து பின்னங்கால்களால் இறகைக் கோதி விட்டுக் கொண்டிருந்தது, அதே ஈ தான்!

''எம். டி. சார்! உங்க ஈகோ இந்த ஈ கிட்டே செல்லலே பாத்தீங்களா!'' என்று தம்மைப் பரிகசிப்பது போல் ஜகந்நாதனின் கண்களுக்குத் தோன்றியது அது!


மிகப் பொருத்தமான
ஜோடி
இந்தியாவின் ஒரே துர்நாற்றமகற்றும்
சோப் மற்றும் டால்க்
துர்நாற்றத்திலிருந்து உங்கள் உடலுக்கு
இரட்டை பாதுகாப்பு. சிந்தால் சோப் குளியலும்
பின் சிந்தால் பவுடர் தூவலும்—ஆகா!
புத்துணர்ச்சியின் புதுச் சிகரத்தில்
நீங்கள் இருப்பீர்கள்!
கோத்ரெஜ் வழங்கும் சிந்தால்
CINTHOL
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
BY
Interpub/CTS/1/79 TM

# ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

அங்கதபாணியில் ஸி. ஆர். எழுதினார்: கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்கு தான். இங்கிலாந்தில் உள்ள நன்மக்களுக்கு இந்தியச் சூழல் குறித்தோ அரசியல் நிலைமைபற்றியோ எதுவும் தெரியாது. இப்போது அரசு அதிகாரிகள் சம்பளங்களைக் குறைத்துக் கொள்வது பிரபலமாகியுள்ள சுதந்திரப் போராட்டத்துக்கு அடிபணிவதாகத் தப்பர்த்தம் செய்து கொள்ளப்படும். அது பலவீனத்தின் அறிகுறியாகக் கருதப்படும். காங்கிரஸை ஆக்கிரமிப்புச் செய்து அமைதியைக் குலைக்கத் தூண்டும். சாகசமான அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிடலாமே ஒழிய, பல காலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் உயிருக்குயிரான சம்பளங்களைக் குறைத்துக் கொள்ளலாமா? அவை அப்படி அப்படியேதான் நீடிக்க வேண்டும்!

இந்த அங்கதத்துக்குப் பிறகு ஸி. ஆர். அறிவுரையில் இறங்கினார்: ''சக்கரவர்த்தியைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள்; உங்கள் சம்பளங்களை உடனடியாகக் குறைத்துக்கொள்ளுங்கள்.''

## 38. தாழ்த்தப்பட்டோர் சார்பாக புதிய வழக்காடல்

எதிர்பார்த்தபடியே வட்டமேஜை மகாநாடு தோல்வி கண்டது. இந்தியர்களிடையே உள்ள பிளவுகள் அங்கே பெரிதுபடுத்தப்பட்டன. பத்திரிகைகள் மகாத்மாவை ஒதிந்து தலைவர் என்றும் இந்தியாவில் உள்ள பல சுயநலக் கோஷ்டிகளுள் காங்கிரஸும் ஒன்று எனவும் வர்ணித்தன. மகாநாட்டில் பங்கேற்க அனுமதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மகாத்மா தங்கள் சார்பில் பேசவில்லை என்று அறிவித்தார்கள். மகாத்மா தாழ்த்தப்பட்டோர் சார்பிலும் பேசவில்லை என அம்பேத்கார் கூறினார்.

தேர்தலில் தீண்டாதாருக்குத் தனித் தொகுதிகள் தேவை என்றார் அம்பேத்கார். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது நியாயமாகத் தோன்றினாலும் ஒதிந்து சமூகத்தை இது பிளவு படுத்தும் என்பதோடு ஏற்கெனவே உள்ள வெறுப்புணர்வுகள் இதனால் மிகுதியாகுமே யன்றிக் குறையாது. மகாத்மா இத்தகைய யோசனையை உயிரைக் கொடுத்தாவது தாம் எதிர்க்க நேரிடும் என்று குறிப்பிட்டார். இது இரண்டாம் பட்சமான விஷயம் என்று கருதிய பலர் அவர் சொற்களை அலட்சியம் செய்தனர். ஆனால் பல கடல்களுக்கு அப்பால் இருந்த ஸி.ஆர். தீண்டாதாரின் நண்பராகிய தமது நண்பரின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அனுதாபப்பட்டார்:

''அம்பேத்காரின் கோரிக்கைதான் அனைத்திலும் அன்பில்லாத தாக்குதல்'' என்று ஸி. ஆர். எழுதினார்.'' 'நீ கூடவா புருடஸ்?' என்று நமது ஸீஸர் கூவினாலோ அவரது உறுதியான இருதயம் இதனால் வெடித்தாலோ வியப்பதற்கில்லை.'' தமக்கு ஏற்பட்ட மனப் பாதிப்பை அவர் காந்திக்கு எழுதினார்: ''பேசாமடந்தைகளான மக்களை இந்தத் தலைவர்கள் எப்படி யெல்லாம் தவறான பாதைகளில் அழைத்துச் செல்கிறார்கள் என்பதைக் காணப் பெருந் துயரமாய் இருக்கிறது. இதயம் வெடித்து விடும்போலிருக்கிறது.''

மகாநாடு நடக்கையிலேயே பிரிட்டனில் தேர்தலும் நடந்தது. தொழிற் கட்சித் தலைவர் ராம்ஸே மக்டொனால்ட் மறுபடி பிரதமரானார். ஆயின் அவர், கன்ஸர்வேடிவ் கட்சியினர் சக்தி வாய்ந்தவர்களாக விளங்கிய ஒரு கூட்டுச் சர்க்காருக்குத்தான் தலைமை தாங்கினார். இவ்வாறு டோரி (கன்ஸர்வேடிவ்) கட்சியினர் பலம் பெறுவது தங்கள் அரசியல் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் என்று பெரும்பாலான இந்தியர்கள் எண்ணினார்கள். ஆனால் ஸி. ஆர். அவ்விதம் கருதவில்லை. இந்திய விவகார மந்திரியாக இர்வின் நியமிக்கப்படுவாரா என்பது குறித்து ஹேஷ்யம் கூறிய ஸி. ஆர். (அவர் நியமிக்கப்படவில்லை.) பின்வருமாறு எழுதினார்:

''பிரிட்டனில் எத்தகைய மந்திரி சபை அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறது எந்தக் கட்சியின் கை ஓங்கியிருக்கிறது என்பது இந்தியாவைப் பொருத்தமட்டில் பெரிய விஷயம் அல்ல. போராட்டம் பிரிட்டிஷாரின் நலன்களுக்கும் இந்தியர்களின் நலன்களுக்கும் இடையில்தான். பிரிட்டிஷ் ஆதிக்கம் இங்கே ஏற்பட்டு, பிரிட்டனில் பதவிக்கு வந்த எல்லாக் கட்சியினரின் கீழும் ஒரே சீராக வளர்ந்தது. அவர்கள் நம்மை விட்டு விலகுவதும் அவ்வாறே அனைத்துக் கட்சி அடிப்படையில்தான் இருக்க வேண்டும்.''

ஆனால் பிரிட்டன் விட்டு விலகிச் செல்ல அவசரப்படுவதாகக் காணோம். உண்மையில்

✖ டாக்டர் அம்பேத்கார்



அது இந்தியாவைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கக் கூட இல்லை. பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் தங்கள் நாட்டில் தோன்றியிருந்த பொருளாதார நெருக்கடி தொடர்பான காரியங்களிலேயே ஈடுபட்டிருந்தார்கள். மகாநாடு முடிவதற்கு முன்பு வி. ஆர். எழுதியிருந்தார்:

''என்ன நடந்தாலும் சரி மகாத்மாவின் இங்கிலாந்து விஜயம் வீண் போகாது. சென்ற ஆண்டு நமது சக்தியைப் பிரிட்டன் உணருமாறு செய்தோம். இந்த ஆண்டு நமது நகைச்சுவை உணர்வையும் யதார்த்த நோக்கையும் சமாதானத்துக்கு நாம் தயாராக இருப்பதையும் காண்பித்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் குறுகிய காலப் பேச்சு வார்த்தைகள் காரணமாக காந்திஜியுடன் இந்தியாவும் முன்னிலும் அதிக சக்தி பெறும்.''


காந்திஜியின் முயற்சி வீண்போகவில்லை என்பதே உண்மை. ஸெயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் நடந்த மகாநாடு தவிர மகாத்மா சுதந்திரமாக இங்கிலாந்து மக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். முடிவில்லாத் தொடராக நடந்த கூட்டங்கள் தவிர அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்றும் சந்தித்தார். ஏராளமான மக்கள் அவரைப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருந்தார்கள். பிரிட்டிஷ் மக்களுக்கு அவர் நூதனமானவராகத் தோன்றினார். உறுதி மிக்கவராகவும் விரும்பத்தக்கவராகவும் காட்சியளித்தார். இந்தியா அந்நியத் துணி பகிஷ்காரம் செய்ததால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த லங்காஷயரில் கூட அவருக்கு ஆரவாரத்துடன் கூடிய உற்சாக வரவேற்பு இருந்தது.

நமது நண்பரின் வெற்றி குறித்து வி. ஆர். எண்ணியபோது ஒரு சரித்திர புருஷர்தான் அவர் நினைவுக்கு வந்தார். ''மகாத்மா பிரிட்டனில் இதயங்களை வெற்றி கொண்டு வருகிறார்'' என்று எழுதினார் வி. ஆர். ''எளிதாக, நளினமாக வேகமாக அவர் வெற்றி கொள்வதை, 'வந்தேன், பார்த்தேன், வெற்றி கொண்டேன்' என்ற ஸீஸரின் சொற்களால்தான் வர்ணிக்க முடியும்.''

---

ஆப்பிரிக்காவிலுள்ள ஸாம்பியா நாடு அண்மையில் தன் நாணயத்தை தசாம்ச முறையில் மாற்றியது. ஒரு 'க்வாச்சா'வுக்கு நூறு 'ங்வீ'க்கள். 'க்வாச்சா' என்றால் அதிகாலை என்றும் 'ங்வீ' என்றால் வெளிச்சம் என்றும் அர்த்தமாம்.

-எம். சிவசுப்ரமணியன்




நவம்பரில் வி. ஆரைக் காங்கிரஸ் அக்கிராசனராக்கும் முயற்சிக்கு பட்டேல் தலைமை தாங்கினார். ''இப்போது உங்கள் முறை வந்து விட்டது'' என்று அவர் வி. ஆருக்கு எழுதினார். ''நீங்கள் சுமையைத் தாங்கத் தயாராக வேண்டும்.''

மகாத்மா அக்ராசனர் பீடத்தில் அமர வேண்டும் என வி. ஆர். விரும்பினார். சம்பிரதாயமான அக்ராசனர் பதவிக்கும் உண்மையான அக்ராசனர் பதவிக்கும் வித்தியாசம் ஏதும் இருக்க வேண்டாம் என்பது அவர் கருத்து. காந்திஜி இந்தக் கருத்தை ஏற்கவில்லை எனக் கண்டதும் வி. ஆர். ராஜேந்திர பிரசாத்தின் பெயரைச் சிபாரிசு செய்தார். ஆனால் பிரசாத் தன்னம்பிக்கையுடன் விளங்கவில்லை. அவர் வி. ஆருக்கு எழுதினார்: ''எதிர்காலம் மிகக் கஷ்டமான ஒன்றாக இருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அசைந்து கொடுக்காத, தடுமாறாத ஒரு திடபுருஷனின் தலைமை நமக்குத் தேவை. இவ்விதம் என்னால் நடந்துகொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்களைப் போன்ற ஒருவர் கீழ் பணியாற்ற ஆர்வமுள்ளவனாய் இருக்கிறேன்.''

வி. ஆர். ஆமோதிக்காத போதிலும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி ஏகமனதாக வி. ஆரின் பெயரையே பிரேரேபித்தது. ஏப்ரலில் பூரி நகரில் மகாநாடு நடக்கவிருந்தது. அங்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டி வி. ஆரின் தலைமையையே சிபாரிசு செய்தது.

வி. ஆர். இந்த எண்ணத்தை வளர விடாமல் உறுதியாகக் கட்டுப்படுத்தினார். ஹிந்தி தெரியாததால் தாம் அந்தப் பதவிக்கு லாயக்கற்றவர் என்பதாகக் கருதினார். ஹிந்தியில் நல்ல ஞானமின்றி ஒரு காங்கிரஸ் அக்கிராசனர் செயல்பட முடியாது என்பது அவர் அபிப்பிராயம்.

இந்தச் சிக்கல் மகாத்மாவினால் தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் வில்லிங்டன் காந்திக்கு அந்தச் சிரமத்தை வைக்கவில்லை. பூரி மகாநாடே நடக்கவில்லை! 1934 அக்டோபரில்தான் மறுபடியும் காங்கிரஸ் மகாநாடு நடத்த அனுமதி கிடைத்தது. அப்போது பிரசாத் அக்ராசனர் பதவி வகித்தார்.

**கா**ந்தி பிரிட்டனில் இருந்தபோது இந்தியச் சூழ்நிலை மேலும் மோசமடைந்தது. வங்கத்தில் அடக்குமுறையும் வன்முறையும் ஒன்றை யொன்று தொடர்ந்தன. உத்தரப்பிரதேசத்தில் வாடகை செலுத்தாத இயக்கம் தொடங்கும் எனத் தோன்றியது. எல்லைப்புற மாகாணத்தில் கபார் கானுக்கும் அவர் சகோதரருக்கும் தடைகள் விதிக்கப்பட்டன. குஜராத்தில் நடந்த விசாரணை ஒருதலைப்பட்சமாகவும் மேலெழுந்த வாரியாகவும் இருப்பதைக் கண்டு பட்டேல் அதனைப் புறக்கணித்தார்.

காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் ஜீவன் இறந்துவிட்டது. வில்லிங்டனும் அவருக்குத் துதி பாடியவர்களும் சகலத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். (தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்



# மைடியர் பாரதிராஜா

கடுகு

மைடியர் பாரதிராஜா அவர்களுக்கு பிரபல எழுத்தாளர் ஏகாம்பரம் எழுதிக்கொண்டது.

உங்களது சிவப்பு ரோஜாக்கள் படத்தை இப்போதுதான் பார்த்தேன்.

இந்தப் படத்தைப் பற்றிப் பத்திரிகைகள் ஆஹா, ஓஹோ என்று விமர்சனம் எழுதித் தங்களைத் தலையில் வைத்துக் கொண்டாடின. இந்தியில் வேறு எடுக்கிறீர்கள்.

எடுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. எப்படி எடுத்தாலும் உங்கள் படத்திற்கு அவார்டு வரும் என்று எனக்குத் தோன்றவில்லை. படத்தில் உள்ள பல குறைபாடுகளை உங்கள் மேல் அக்கறையுள்ளவன் என்ற முறையில் எழுதுகிறேன்.

1) கடையில் வந்து ஸ்ரீதேவியிடம் கைகுட்டை வாங்குகிறார் கமல். ஏதாவது துணிக்கடைக்குள் நுழைந்து விட்டால் வெறும் கைக்குட்டை மட்டும் வாங்கி வெளியில் வருவதென்பது நடக்கிற காரியமா? முதலாளியிலிருந்து கடைப் பையன் வரை உங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு புடவை, ஷர்ட்டிங், பான்ட் பீஸ் என்று தலையில் கட்டாமல் விடுவார்களா? இப்படி வாங்காமல் தப்பித்து வெளியே வர முடியுமா? நீங்கள் சென்னையில் ஜவுளிக் கடைக்குள் போனதில்லை என்று எண்ணுகிறேன். ஆகவே இந்தக் காட்சிகளில் உங்கள் படத்தில் ரியலிஸம் இல்லை.

2) ஸ்ரீதேவியைக் கமல் ரிஜிஸ்தர் திருமணம் செய்து கொண்டு வெளியே வருகிறார். தலையைச் சொறிந்து கொண்டு பல்லை இளித்துக் கொண்டு 'உங்கள் இஷ்டமானதைக் கொடு ஸார். சந்தோஷமான நாள். அல்லாவெட்ஜரையும் நான்தான் எடுத்து வைக்கணும்' என்று டயலாக்பேசிக் கையை நீட்டும் ஒரு பியூனைக் கூடக் காட்டவில்லையே! நீங்கள் கற்பனை லோகத்தில் இருந்தால், எப்படி?

3) கமல் காரில் போகிறார். சடாரென்று ஒரு ஆட்டோ ரிக்ஷா கூட லெஃப்டில் ஓவர்டேக் பண்ணிக் குறுக்கே போகாது? வாழ்க்கையை ஒட்டி கதை எடுத்தால் தானே சார் அவார்டு கிடைக்கும்?

4) ஓட்டலில் சர்வர் பாத்ரூமுக்குப் போகும் காட்சி கதைக்குத் தேவை என்பதால் காட்டியிருக்கிறீர்கள். 'அக்ரஹாரத்தில் கழுதை' படத்தில் எப்படி, சிறப்பாக செம்புடன் போய் உட்காருவதைக் காட்டினார்கள். அதுமாதிரி காட்ட வேண்டாமா? அவார்டு அவர்களுக்குக் கிடைத்து விட்டதே என்று வயிறெரிந்தால் எப்படி?

5) போகட்டும் ஸ்ரீதேவி இரவில் தெருவில் ஓடுகிறார். கார்ப்பரேஷன் விளக்குகள் எல்லா கம்பங்களிலும் எரிந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் சரியான நாட்டுப்புறத்து ஆசாமி. பட்டணத்தையே பார்க்காதவர். அல்லது சரியாகப் பார்க்காதவர் என்பது தெரிகிறது. இரண்டு கம்பங்களில் விளக்கு எரிந்தால் நாலு கம்பங்களில் பல்பு பியூசாகி இருக்க வேண்டாமா? சினிமா ரசிகர்களின் காதில் பூ சொருகுகிறீர்களே!

6) இதெல்லாமாவது தங்கள் கவனக் குறைவால் ஏற்பட்ட தவறுகள், போகட்டும். கமல் ஆபீசுக்குள் நுழையும் காட்சியில் எவ்வளவு பெரிய தவறு செய்து இருக்கிறீர்கள்!

கமல் நுழைகிறாராம். எல்லா ஊழியர்களும் குட்மார்னிங், குட்மார்னிங் என்று காலை வணக்கம் செலுத்துகிறார்களாம். இது எந்த உலகத்தில் நடக்கிற விஷயம்? ஆபீஸ் வாசலில், 'போனஸ் கொடு' 'ஊழியர்களை நசுக்காதே', 'அடக்குமுறை ஒழிக' என்று யாரும் கோஷம் போடக் காணோம். குறைந்த பட்சம் சௌண்ட் ஸ்பீக்கராவது கொடுத்திருக்கலாம். அடுத்தது, முதலாளி வரும் போதே எல்லா ஊழியர்களும் ஆஜராம். நன்றாகக் காது குத்துகிறீர்கள். நேரத்தோடு எந்த ஆபீசில் யார் வேலைக்கு வருகிறார்கள்? பாதி மேஜைகளைக் காலியாகக் காட்டி இருக்க வேண்டாமா?

மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே இத்தனை தவறுகள் கண்ணில் பட்டன. அவார்டுகாரர்கள் கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுக் கொண்டு பார்ப்பவர்கள் ஆயிற்றே! இன்னும் எத்தனை தவறுகள் அவர்கள் கண்களை உறுத்தும்!

அடுத்த படம் எடுக்கும் போது திரைக்கதையை எனக்கு அனுப்புங்கள். ரியலிசத்தைச் செம்மையாகப் புகுத்திக் கொடுக்கிறேன். அவார்டும் கிடைக்கும்.

இப்படிக்கு
பிரபல எழுத்தாளர் ஏகாம்பரம்



# வரன் தானம்

துரோணன்



'சண்டி முரண்டாம் காடு கொள்ளாது' என்பார்களே, அந்தப்படிக்குத் துணிஞ்சு விட்டேன். இப்போது –

நானும், நாலு வருஷங்களாகப் பொறுமை அச்சம், அடக்கம், ஒடுக்கம் – என்றெல்லாம் யார் யார் எப்படியெல்லாம் உபதேசிக்கிறார்களோ, அப்படிக்கெல்லாம் தலையாட்டி பொம்மையாக இருந்தாகி விட்டது. அதே பழைய பண்பாட்டு ரீதியிலே, இன்னமும் இன்றுத் தவளையைப் போல இந்த நாளிலே இருக்கணும்னு இருக்க வேண்டியதுதானா?

இதோ – இராப் பகலாக விழுந்து விழுந்து படித்து, முதல் வகுப்பிலே 'டிகிரி'ப் பட்டம் வாங்கியிருக்கிறேனே, இதைக் குப்பைத் தொட்டியிலேதான் வீசியாகணும், ஆமாம். இதனாலே நானடைந்திருக்கிற பலன் என்ன? மூணு வருஷங்களாக, ஒரு நாறு ரூபாய்க் காசுக்குக்கூட வழி காட்டாத பட்டம் இது. இந்த இரண்டெழுத்து 'பி.ஏ.!'

'நான் அப்போதையிலிருந்தே சொன்னேன் – நம் குடும்பத்துலே பொண்ணைப் படிக்க வைக்க முடியாதுடா வீணச் செலவு பண்ணுதேடான்னு புலம்பித் தவிச்சேன்.. பெத்தவளும், பெத்தவனும் கேட்டாத்தானே? இப்போ அத்தனை நகையும் இருந்தா, இந்தப் பொண் கல்யாணத்துக்கு ஏன் திண்டாடணும்: இத்தோட விட்டுதா? இன்னும் ரெண்டு பெண் கட்டைகள் வேறே இருக்கு?' இது பாட்டி விடுக்கிற ஓலம். இதே மாதிரி ராகத்துலே தான் பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம்.

நான் ஒரு பெண் கட்டையாக பிறந்துவிட்ட பாவத்துக்காக, இன்னும் எவ்வளவு கேட்டுக் கொள்ளணும் – எப்படியெல்லாம் அனுபவிக்கணும் என்கிறதற்கெல்லாம் ஒரு வரம்போ, முடிவோ ஏற்பட முடியாதோ? வயது இருபத்தி நான்கை எட்டிப் பார்க்கிறது இப்போது எனக்கு! என்னுடைய முகத்திலேயோ, கண், காது, உடம்பு – எதுலேயாவது என்ன ஊனம், என்ன குறை? போன வருஷம் ரெண்டு பேர் – மூணும் வருஷம் ரெண்டு பேர் படை திரண்டது போலே வந்து சேர்ந்தார்கள் – நான் பெண்ணுகவே விருப்பதைப் பார்த்து விட்டுப் போவதற்காக! அவர்கள் வாழ்வதற்குத் துணை வேண்டுமென்பதற்காகவா பெண் பார்க்க வந்தார்கள்;

தேவலோகத்து கந்தர்வப் பெண் மாதிரியா, முகத்தோடு, உடம்போடு, கொஞ்சும் அழகு குலுங்க நிற்கிற பெண்ணைக் கண் கொண்டு பார்த்தப்புறமும், – எத்தனைக் குச் செய்வேன்: எத்தனை கையிலே குடுப்பேன் – என்கிற மார்வாடி பேரத்திலே இறங்கி விட்டார்களே?

அதெல்லாம் பழைய கதையாகி விட்ட பிற்பாடு, இப்போது நினைக்க என்ன பிரயோசனம்? இப்போ -- பதினைஞ்சு நாளைக்கு முன்னாலே — உண்மையாகவே கண் இருக்கிறவனுகவே, இதயமும்இருக்கிறவனுகவே, எல்லாரும் மதிக்கும்படியாக வந்து சேர்ந்து நடந்து கொண்டானே, ஒருத்தன் – இவன் விஷயம் இப்போ எப்படி முடிஞ்சிருக்கு? ஒரு கம்பி மத்தாப்பு ரொம்பப் பிரகாசமா எரிஞ்சு முடிஞ்சதைப் போல ஆகி இருக்கும்!

முந்தாநாளிலேருந்து களேபரப்பட்டு, எல்லா ஏற்பாடுகளும் முடிஞ்சிருக்கிற கல்யாண வீடு. இப்போ – சனி புகுந்த சத்திரம் மாதிரியாக மாறியிருக்கு. இன்னிக்கு சாயந்திரம் 'அவனை' மாப்பிள்ளையாக ஜோடிக்க, மேளதாளங்களோட ஊர்கோலப் படுத்திக் கொண்டு வந்து, இறக்கியிருக்க வேண்டியது; அவன், நாளைக் காலையிலே, ஊர் உலகமறிய, முகூர்தத வேளை தவறாமல் என் கழுத்திலே...

இதோ – ஒருத்தர் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமலும், சுயமாக நினைச்சுப் பார்க்க மனம் கொள்ளாமலுமாக கண் மறைய உட்கார்ந்திருச்சிறேன் மாடிப்படி நடுவே. இந்த வாழ்வுக் கூத்தை யாரிடம் சொல்றது? நடந்ததுதான் என்ன?

மாப்பிள்ளை வீட்டாரை நாலு மணிக்கு எதிர்பார்த்துக் காத்திருந்தோம். அப்போது மணி ஒன்னடிச்சது. ஒரு பெரிய கறுப்பு நிறக் காரிலே வந்து, கல்யாண வீட்டு வாசலிலே இறங்கினு அந்த தேவதை. முப்பதுக்குள் தான் இருக்கும். அவளோடேயே, இன்னும் மூணு கனவான்கள் வேறு துணைக்கு. அந்த மூவரில், சுமார் அறுபது வயது மதிக்கும்படியாக இருந்த முதியவர் ஒருவர்தான், கொஞ்சம் பார்ப்பதற்கு வசீகரமாகவும், மரியாதை கொள்ளத் தக்க தெய்வக் களையுடையவராகவும் காணப்பட்டார்.

வாசப் பந்தலில் அரட்டைப் பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருந்த மாமா, சித்தப்பா, ரெண்டு பேருக்கும் தலைகால் புரியல்லே, காரிலே வந்திருப்பவர்களுடைய உடை,

அந்தஸ்துக்களையெல்லாம் பார்த்து விட்டு, சம்பந்தி வீட்டைச் சேர்ந்த உறவினர்கள்தான் வந்திருப்பதாகக் கருதி, உபசாரங்களோடு வரவேற்றார்கள் —

வந்தவர்கள் அப்படியே சற்று நேரம், நின்று, நாலாபுறங்களையும் ஏற இறங்கப் பார்த்தார்கள். பின்னர் வாயே திறக்காமல் உள்ளேயும் வந்து நுழைந்தார்கள். நடுமுற்றத்திலே, ஒரு மகாநாடு கூடி விட்டது. அந்த வசீகர முதியவர், அப்பாவை நோக்கி, ''உங்கள் வீட்டுக் கல்யாணப் பெண்ணைக் கொஞ்சம் அழைக்கலாமா?'' என்றார் நயமான குரலில். அப்பா கூடத்தை நோக்கித் திரும்பினார். என்னைக் கட்டியணைத்தவளாய்க் கொண்டு போய் ஆஜர்ப்படுத்தினாள் தோழி சித்ரா. அப்போது அவர்கள் நால்வருடைய பார்வைகளும் என் மீது ஒருங்காகப் படிந்த போது — அடடா! அவற்றுக்கு ஒரு கோடி அர்த்தங்கள் சொல்லலாம். வைத்த கண் இமைக்காது ஐந்து நிமிஷ காலம் அவர்கள் ஜடமாக அமர்ந்திருந்தனர். அந்த முதிய கனவான், அவளுடைய காதருகே வாயைத் திருப்பி, இரகசியக் குரலில், 'ஆஹா, தங்க விக்கிரகம் போலேயிருக்கிற இந்தப் பெண்' என்று முணுமுணுத்தவர், அதை முடிக்காமலே ஓர் பெருமூச்சையும் விடுத்தார்.

அவள் — என் முகத்தை ஏதோவொரு கனிவுடன் பார்ப்பது போலத் தெரிந்தது. ''ஏனம்மா, உன் பெயர் கௌசல்யாவா?'' என்கிற கேள்வி கொஞ்சம் அங்கலாய்ப்புடன் தொனிப்பது போலவுமிருந்தது.

தலையசைத்தேன் —

அவள் ஒரு பெருமூச்சுடன் , ''சரி, சந்தோஷம். நீயொரு கிராஜுவேட் இல்லே?'' என்றாள் அடுத்தபடி.

மறுபடியும் தலையசைத்தேன் .

''ஏம்மா, நாளைக்குத் திருமணமானவுடனேயே, நீ கணவரோடு பம்பாய்க்குப் போகப் போகிறாயில்லையா?'' என இன்னொரு கேள்வியையும் கொஞ்சம் குறும்புத் தொனியோடு விடுத்தாள்.

அப்பா பரபரப்போடு பதில் சொன்னார். ''ஆமாம், அப்படித்தான். கையோடு அழைத்துப் போவதாகத்தான் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.''

அப்போது, அந்நால்வருமே ஒருவரையொருவர் ஏதோ பொருள்படப் பார்த்துக் கொண்டனர். அந்த அம்மாள், கொஞ்சங் கூடம் கூச்சப்பட்டவளாகவே தெரியவில்லை. நெடுநாள் பழகியவளைப் போல், ''ஏம்மா, நீ படித்த பெண்ணாயிற்றே — உனக்கு நன்றாகத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். இப்போதுள்ள மறுதார விவாகச் சட்டம் என்பதைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்றாள். அதே கணத்தில் சித்தப்பாவும், மாமாவும் பெரும் பரபரப்புக் கொண்டு விட்டார்கள். ஆனால், அப்பாவின் சைகையைக் கண்டதும், அவர்கள் கொஞ்சம் அடங்கியது போலிருந்தார்கள் — அந்த அம்மாள், யாரையும் எதையும் சட்டை செய்பவளாக இல்லை. முடிவாக, ஏதோ நுழையக் குழைய பேசினாற் போலிருந்தவள், எங்கேயோ விழுந்த 'ஸ்கைலாப்' எங்கள் தலைமீதே விழுந்ததைப் போன்ற செய்தியொன்றை வீசி விட்டாள்.

''ஐயோ பாவம், கௌசல்யா, கல்யாணப் பெண்ணாகவுள்ள உன்னைப் பார்த்துப் பரிதவிக்கிறோம் நாங்கள். என்னசெய்வது. ராமாயணத்திலே வருகிற கௌசல்யா தேவிக்கு, இன்னுமிரண்டு சக்களத்திகள் உண்டு என்பது உனக்குத் தெரியுமில்லையா? அந்த மாதிரியா, அதே பெயரைக் கொண்டிருக்கிற இந்தக் காலத்துக் கௌசல்யாவுக்கு, இன்னொரு சக்களத்தி இருக்க வேண்



டாம் என்பதற்காகத்தான், நாங்கள் இப்போது வந்திருக்கிறோம்.''

''என்ன வெல்லை'' என்கிற கேள்வியோடு சித்தப்பா நுள்ளியெழுந்தார். மாமாவோ, அவரை நோக்கி, ''ஏன் இப்படியெல்லாம் கத்தி அமர்க்களப் பேசறேள்? விஷயம் என்னன்னு சொன்னாத் தேவலியே'' என்றார் பதட்டமான குரலில்.

கூடத்துக் கூட்டம் முழுமையும் முற்றத்துக்கு வந்து விட்டது.

பக்கத்திலிருந்த மதிப்பிற்குரிய முதியவர், அந்த அம்மாளை நோக்கி கையசைத்தபடி. ''சாரதா, நீ இனிமேல் பேச வேண்டாம். இவாளுக்கெல்லாம் புரியிருப்பலே, நான் தெரிவிக்கிறேன்'' – என்று கூறி விட்டு, அப்பாவின் புறத்திற்குத் திரும்பினார். இரு கைகளையும் கூப்பிக் கொண்டார். ''ஸ்வாமி, நீங்களெல்லாம் மன்னிக்கணும் -- பதட்டப்படக் கூடாது. இதோ இருக்காளே, சாரதா இவள் என்னுடைய பெண்தான். என்னுடைய மூத்த தாரத்துப் பெண். நானும் பெரிய குடும்பஸ்தன்தான். என்னுடைய மூத்த தாரம் போன பின், இரண்டாம் தாரம் செய்து கொண்டு, எனக்கு இரண்டு பையன்களும் இருக்கிறார்கள். இப்போது, உங்களுக்குக் கொஞ்சம் விரய காலம் போல் இருக்கு: நன்றாக விசாரிக்காமல் – அருமையான கிளியை வளர்த்துப் பூனைக்கு மனமொப்பி தானம் செய்கிறது போல, கல்யாண ஏற்பாடுகளையும் செய்து விட்டீர்கள். நாளைக்குக் காலையிலே, உங்கள் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கப் போகிற பம்பாய் வரன் இருக்கிறானே – இந்தச் சாரதாவை சாஸ்திர ரீதியாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, இரண்டு வருஷங்கள் வாழ்ந்திருக்கிற சாட்சாத் புருஷனேதான்! என் மாப்பிள்ளை நல்லவனாக இருந்தவன்தான். ஊழ்வினை அவனைக் கெடுத்து விட்டது'' இவ்வாறு கூறிவிட்டுப் பெருமூச்சுடன் பக்கத்திலிருந்தவரைப் பார்த்தார்.

அந்த கனவான், ''ஸார், பாக்கி விஷயங்களை நான் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். எதோ, உங்கள் பெண்ணுடைய நல்ல காலம்தான், நீங்கள் யாருக்கோ அனுப்பியிருந்த உங்கள் வீட்டு கல்யாண பத்திரிகை மூலமாகவே, எங்களுக்கு நேற்று விஷயங்கள் அனர்த்தமாயிற்று. உடனே நாங்கள் கிளம்பி, அவர்கள் பம்பாயிலிருந்து வந்து தங்கியிருக்கிற கிராமத்திற்குப் போய், தகுந்தபடியான தடையேற்பாடுகளைச் செய்து விட்டு, இங்கே வந்திருக்கிறோம். நான், இவாளுடைய குடும்பத்துக்கு நெருங்கின – குடும்ப வக்கீல்! இதோ இருக்கிற தம்பதிகளுடைய போட்டோக்களை யெல்லாம் பாருங்கோ'' என்று சொல்லி முடித்தவராய், தம்முடைய பைக்குள்ளிருந்த போட்டோ ஆல்பங்கள், கடிதக் கட்டுக்கள், எல்லாவற்றையும் எடுத்துப் பரத்திப் போட்டார்.

அவ்வளவும், உண்மையான ஆதாரங்கள்— இதுக்கு மேலே வேறு என்ன நடக்கணும்? இந்தக் கல்யாணம் நடந்து முடிந்தால், அவளுக்கு வாழ்வு ஜெயிலில். எனக்கு வாழ்வு?

ஒருவழியாக, வந்தவர்கள் குழையக் குழைய ஆறுதல் சொல்லிவிட்டு, வாசலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்படிப் போனவர்கள், உடனே காருக்குள் அமரவுமில்லை. அந்த முதியவரும், அவருடைய பெண் சாரதாவுமாக, எதிர் வீட்டு வாசலில் போய் நின்று கொண்டு, ஆளுக்கு ஆளோடு நாலு நாழிகை, ஏதேதோ விஷயங்களையெல்லாம் பேசித் தீர்த்துக் கொண்டார்கள்.. நடுநடுவில் அவர்களுடைய பார்வைகளும், கட்டிக் காட்டல்களும் கல்யாண வீட்டைப் பற்றியே இருந்த நிலையில் – என்ன இட்டு விட்டார்களோ, முடிவாகக் கார் பறந்து விட்டது.

இப்போது என்னவாயிற்று. கண்ணுள்ளவருகவும், இதயமுள்ளவருகவும் வந்து சேர்ந்த இந்த ஐந்தாவது வரனின் கதையும், இப்படிப் பகல் இரண்டு மணியோடு முடிந்திருக்கிறது.

அப்பா அப்படியே மனம் ஒடிந்து போனவராகத் தூணில் கையை வைத்துக்கொண்டு மூலையிலே உட்கார்ந்து விட்டார்.

''எய் ராமு. இதுக்காக நீ மனம் தளரப் படாது. இவளுக்கு பொருந்திருக்கிறவன் எங்கேயிருந்தாவது வந்து சேருவான்டா, போ!—'' பாட்டி சொல்லுகிற இந்த ஆறுதல், எப்போதுமே நடந்து வருகிற நித்திய பிலதாத்தம்தான்.

ஆருயிர்த் தோழி சித்ராவும், அவளுடைய கணவரும் வருந்தி வருந்தி அழைத்த போதெல்லாம், அமைப் புன்னகையோடு மௌனம் சாதித்தேன். ஏன், இப்போது வருகிறேன் என்றாலும் அவர்களுக்குக் கொள்ளை சந்தோஷம்தானே! அவரோடு கல்கத்தாவில் கண்ணியமான ரயில் உத்தியோகத்திலிருந்து வாழ்வதைவிடவா உயர்வு கிடைத்துவிட முடியும்? படிப்புக்கும், அழகுக்கும், உழைப்புக்கும் மதிப்புக் கொடுக்கிற உலகம் அங்கேதான் என்று எத்தனை பேர் சொல்லி விட்டார்கள்

நல்ல வேளையாக, சித்ராவும், அவள் கணவரும், என் கல்யாணத்திற்கு .... எண்ணதை தானே இரு ... நிலையத்திலிருந்து எவ்வளவு நன்மையாகி விட்டது இப்போது ... கல்யாணம்தான் இவ்வளவு ஆறுதலாக நடந்திருக்கிறதே! இனி யாரைக் கேட்கணும் — யாரை அண்டியிருக்கணும் ஆமாம்—

''நீ கலப்பு மணத்தை ஆதரிப்பவளாக இருக்கலாம்! அதற்காக, தெருவிலின் இருபக்கத்திலும் வள்ளி தெய்வயானை பொம்மைகளை வைக்கலாமா?''



நாளையிரவு அவர்களோடு — ஒரே நிர்வாணம் — ஒரே சுகந்தான்! என்டி முரண்டாய்....?

●

“அட கொசல்யா, ஏ கண்ணு, எழுந்திரு! எழுந்திரு. இப்படிப் பட்டப் பகல் வேளை வரைக்கும் தூங்கிறுன். உனக்கொரு சுப்ரபாதமா பாட முடியும், எழுந்திருமா!—”

அம்மாவின் அரவமும், கொஞ்சலும் உறைக்கவில்லை. நிஜக்குறு விழி இமைகளைப் பிய்த்துக் கொண்டு விழிக்கிறேன். எனக்கெதிரே அம்மாவும், தோழி சித்ராவும் இளிக்க இளிக்க எல்லோருமாய் நின்று கொண்டு, என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சோம்பலின் தளிப்புமொளி கண்களுக்குடிலும் நழுவக் கொள்கிறேன் —

“என்னம்மாதிது ஏதாவது போனது மாதிரி தான் முழிக்கிறாயே!” — என்க் கேட்கிறாள் அம்மா.

“அம்மா கொசல்யா தேவி! இது என்ன மாசம், என்ன தேதி, என்ன கிழமை, என்ன மணிக்கிறதெல்லாம் நினைவுக்குத் தெரிகிறதா இல்லே, நான் சொல்லணுமா?” எனக் கேட்டு விட்டுச் சிரிக்கிறாள் சித்ரா.

நேற்று மத்தியானம் சாயும் பொழுதுக்கு நடுவில் வந்து உட்கார்ந்து. நினைவுகளின் அசை போட்டுக் கொண்டிருந்தவள், அப்புறம் மாயுவதற்குள் எப்போது வந்து, எப்போது தூங்கிப் போனேன் என்பதே நினைப்பில்லை. அப்படியொரு தூக்கம்!

“சும்....சித்ரா, நீ இவளைச் சட்டுபுட்டுன்னு அழைச்சுண்டு கீழே வந்து சேரு. நான் போகிறேன்” என்று பரபரப்போடு சொல்லிவிட்டு, அம்மா ஓடுகிறாள்.

கீழ்ப்புறத்தில் ஏதேதோ, கலோபரமான சப்தம். நான் எதும்புரியாமல், சித்ராவைப் பார்த்தபடி 'திருதிரு'வென விழிக்கிறேன்.

அவள் என் முகத்தைக் கைகளால் பற்றி, ஜன்னல் பக்கத்திற்குத் திருப்பி வைத்தபடி, “அதோ பாரு — பாரு!” என்கிறாள். கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு உற்றுப் பார்க்கிறேன். அங்கே — எதிர் வீட்டு வாசலிலே, ஒன்றன்பின் ஒன்றாக, ஏழு கார்கள் நின்று கொண்டிருக்கின்றன.

ஏதும் விளங்காத மர்மப் புதிராக, சித்ராவின் முகம் நோக்கி விழிக்கிறேன். அவள், “அட, நேற்றைக்கு சாஸ்திரம் நடத்திருக்க வேண்டிய மாப்பிள்ளையழைப்பு இன்னிக்கு: இன்னிக்குக் காலையிலே உன் கழுத்திலே ஏறியிருக்க வேண்டிய தாலிச்சரடு, நாளைக்குக் காலையிலே முடிஞ்சிடப் போகுது. இவ்வளவுதான் கால மாறுதல். நேற்றைக்கு புதன் கிழமை — இன்னிக்கு வியாழன் — நாளைக்கு வெள்ளி. இதுவாவது நினைவுக்கு வருகிறதா இப்போ. பாக்கி விஷயங்களையெல்லாம் நீயே கீழே வந்து தெரிஞ்சுக்கோ!” என்று குறும்பு நகைக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே சொல்லிவிட்டு, என் கையைப் பிடித்து 'தரதர'வென்று கூட்டிப்போகிறாள் சித்ரா கீழ்ப்புறத்துக்கு.

ஓர் இயந்திர வேகம்தான். பல் விளக்குவதில் ஆரம்பித்து, குளியல், தலைப்பின்னல், உடை மாற்றங்கள், எல்லாம் ஒரு மணி நேரத்

## பெரிய இதயம் கொண்ட ஜீவன்!



உலகில் உள்ள ஜீவராசிகளிலேயே ஒட்டகச் சிவிங்கியின் இதயம்தான் மிகப் பெரியது! இதன் இதயம் இரண்டடி நீளம் உள்ளது. இதயத்தின் சுவர்கள் மூன்று அங்குல கனமுள்ளவை. இவ்வளவு பெரிய இதயம் இருப்பதால்தான் அதன் நீண்ட கழுத்துக்கு ரத்தத்தை ஏற்ற 'பம்ப்' செய்ய முடிகிறது.

— சம்பத் குமார்

---

திருமணமாய் பூர்த்தியாக்கப்பட்டு விட்டன. அப்புறம், நான் — முன் பக்கத்து வராந்தாவில் விரிக்கப்பட்டிருக்கும் ஜமுக்காளத்தில் கூடத்தி வைக்கப்பட்டேன். அப்படியே நிச்சலனமாய், நின்று விடுகிறேன். ஐந்து நிமிஷ காலம்! அங்கே — நேற்று வந்து போயிருந்தார்களே. அந்த ஊர்வலத்தின் முன்னேற்றம், இன்னும் கொஞ்சம் மதிப்பு மிகுதியுடன் அந்த முதியவரும், அவருடைய புதல்வி — எனக்குச் சக்களத்தியாக உறவு நேர்ந்துவிட்டன் தடுத்து விட்டுப் போன சாரதாவும். தெரிந்த முகங்கள்! என் முதுகுப்புறத்தோடேயே ஒட்டிக் கொண்டு வந்திருந்த சித்ராவின் ரகசியக் கட்டளைப்படியே, அனைவருக்கும் பொதுவான நமஸ்காரங்களைச் செய்து விட்டு எழுகிறேன்.

நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் சாரதா என்னை தன் கைகளால் பற்றியணைத்துக் — மாப்பிள்ளையின் எதிரே கொண்டு போய் நிறுத்துகிறாள். எனது குனிந்த முகத்தைக் கைகளால் பற்றி நிமிர்த்தி, “அம்மா கொசல்யா! இப்போது நீயும் இவரை நன்றாகப் பார்த்துக் கொள். இவர் என்னுடைய தம்பிதான். வேறு யாருமில்லை. நீ மாலையிடப் போகிற மணாளன் சங்கரன் இவன்தான். அப்புறமேதுக்குமாவது சந்தேகப்படாதே.” என்று சொல்லிவிட்டுக் 'கடகட'வென நகைத்தாள். இப்போது — என் கண்களுக்கு சாரதா அன்னைவடிவு சுகளியின் வடிவமாகவே தெரிந்தாள்.

கல்யாண அழைப்பிதழில் அச்சாகியிருந்த மணாளனின் பெயர் வேறு. ஊரும் வேறு. திசை வேறு. நாள் வேறு. கிழமை வேறு. வேளை வேறு. சாந்தக உறவினர்கள் வேறு — என்கிற வகைகளில் விளம்பரம் படுத்தப்பட்டிருந்த அன்னையே மாற்றி வைத்து, இப்போது நடக்கிற வைபவங்களையெல்லாம் உண்மையாக்கியிருக்கிறது சக்களத்திதான். 'ரோஜாக்கள்' என்பார்களே...? ●




by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Bharathan Publications Private Ltd., at the Bharathan Guindy, Madras-600 032. Editor: K. Rajendran


Parryware is among the finest sanitaryware in the world. The best architects will agree with us.
AVAILABLE IN GLEAMING WHITE AND IN SIX GENTLE PASTEL SHADES.
E.I.D.- Parry (India) Limited
Ceramics Division
Dare House
MADRAS 600 001
Parryware
VITREOUS
Superfine Sanitaryware

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேயக் காசு